

மேற்கண்ட ரிகார்டும் மற்றும் இதர பாரதிப் பாடல்கள் ரிகார்டுகளும் எட்டயாபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபத்திற்கு எதிரில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டாலில் கிடைக்கும்.

வருகிறது!

கன்னிகா



எம். என். சரோஜினி, டி. இ. வரதன், பி.எஸ்.வி.
சந்தானலக்ஷ்மி, ஹேமா மாலினி, கிருஷ்ணன், மதுரம்,
காளி என். ரத்னம், லலிதா, பத்மினி நடித்தது

பக்ஷிராஜா தயாரிப்பு

டைரக்ஷன்.. ஸ்ரீராமுலு நாயுடு

NARAYANAN Co *Release..*

DJK 20.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 } இதழ் 11 }   அக்டோபர் 12   { சர்வஜித்து { புரட்டாசி 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 11

என்ன சேதி?

சபாஷ்! சரியான காரியம்!

ஒரு பெரிய கவலை ஒழிந்தது; ஒரு மகத்தான பளு குறைந்தது; ஒரு விபரீத வேற்றுமை மறைந்தது! இதனை அன்றே செய்தால் ரொம்ப ரொம்ப விசேஷமாகும். அதற்கடுத்தபடியாக, சிறிது காலதாமதமாயினும் பாதகமில்லை. வியாதி முற்றியபின் வைத்தியரை அழைத்து வருவதற்கொப்ப, காலங்கடந்து ஒரு காரியத்தைச் செய்தால் தான் எவ்வித பலனும் இல்லாமல் போகும். அவ்விதம் காலம் கடந்து போகுமுன் நல்ல காரியத்தைச் செய்ததற்காக ஸ்ரீ பி. ஸி. ஜோஷியையும், அவரைப் பொதுக் காரியதரிசியாகப் பெற்ற இந்தியப் பொது உடைமைக் கட்சியையும் வாழ்த்துகிறோம்!

பாட்டாளி மக்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களை உய்விக்கவே பொது உடைமைக் கட்சியினர் எவ்வளவோ தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்களின் தியாகத்தை நேருஜி, சர்தார் பட்டேல் முதலிய தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். காங்கிரஸின் முக்கிய திட்டங்களான மதுவிலக்கு, குடிசைத் தொழில் அபிவிருத்தி, சர்வஜனக் கல்வி முதலியவை ஏழைகளை உத்தாரணம் செய்வதற்கே யாகும். அப்படியிருந்தும் பொது உடைமைக் கட்சியினர் தேசிய சர்க்காருக்கு அவகாசம் கொடுக்காமல் அவசரப்பட்டு விட்டார்கள். அதன் விளைவாக, தேசத்தின் சரித்திரத்திலேயே மிகுந்த நெருக்கடியான சமயத்தில் உணவு, உடை முதல் பல்வேறு சாமான்களின் உற்பத்தியும் குறைந்து விட்டது. அதனால்; இப்போது ஏழைகள்தான் அதிக கஷ்டத்துக்கு உள்ளாகும்படி நேர்ந்திருக்கிறது. எனவே, இப்போதாவது மகாத்மா காந்தி, நேருஜி போன்ற தலைவர்களுடன் தேசம் முழுதும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று ஸ்ரீ பி. ஸி. ஜோஷி வேண்டுகோள் விடுத்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

விவேகமான முடிவு


ஸ்ரீ ஜோஷியின் வேண்டுகோளைப் பற்றிக் கூறும்போது, சென்ற வாரம் கிடைத்துள்ள மற்றொரு நல்ல செய்தியையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். அகில இந்திய ரயில்வே தொழிலாளர் பெடரேஷன் கால நிலைமையை அனுசரித்து புத்திசாலித்தனமாக ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. வேலை நிறுத்தம் செய்வதா அல்லது வேண்டாமா என்பதை வோட்டெடுத்து முடிவு செய்வதென ஏற்கெனவே தீர்மானம் செய்திருந்தார்கள். பம்பாயில் நடந்த மேற்படி பெடரேஷன் கூட்டத்தில் அந்தத் தீர்மானத்தை ரத்துச் செய்து விட்டார்கள். சமீப காலமாக இந்தியாவில் வேலை நிறுத்தங்கள் பெருந் தொல்லையாகி விட்டன வென்று மகாத்மா காந்தி கூறியதை மனதிற் கொண்டே ரயில்வே தொழிலாளர் பெடரேஷன் மேலே குறிப்பிட்ட விதம் விவேகமான ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

தொழிலாளர் மீது இரக்கமற்ற அன்னியரின் ஆட்சிக் காலத்திலும் கடைசி கடைசியாக உபயோகிக்க வேண்டிய ஓர் ஆயுதத்தை, ஜன சர்க்கார் ஆட்சிக் காலத்தில் எடுத்ததற்கெல்லாம் உபயோகிக்கும்படி தொழிலாளர்களுக்குத் துராலோசனை கூறுவது எவ்வாறு நியாயமாகும்? அதிலும் உணவுப் போக்கு வரத்தும் அகதிகளின் போக்கு வரத்தும் சிறிதும் காலதாமதம் ஏற்படாமலும் தங்குதடையின்றியும் நடைபெற வேண்டிய சமயத்தில், வேலை நிறுத்தம் என்பதை ரயில்வே தொழிலாளர் கனவிலும் நினைக்கக் கூடாது. இந்த உண்மையை நன்குணர்ந்து மேற்படி பெடரேஷன் பழைய தீர்மானத்தை ரத்துச் செய்ததை மிகவும் பாராட்டுகிறோம்.

மகா கவியின் ஞாபகார்த்தம்



- சாஸ்திரி


பாரதியார் தமிழகத்துக்குச் செய்த ஒப்பற்ற உதவியை நினைவு கூர்ந்து தமிழ் மக்கள் கவிக்கு ஞாபகச் சின்னம் கட்டுகிறார்கள். செல்வர்கள், ஏழைகள், எழுத்தாளர்கள், தொழிலாளர்கள், சங்கீத வித்வான்கள் முதலிய பலரும் பாரதி கைங்கரியம் செய்தனர்.
அக்டோபர் மீ 15௳ யன்று தமிழ் நாட்டின் தலைப்புதல்வர் ராஜாஜி தமிழ் மக்களின் சார்பாகப் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தைத் திறந்து வைத்தபோது வானுலகோரும் பூமாரி பொழிந்து மகிழ்ந்தனர்.

இதோ ஒரு அற்புதம்!

நம் கண் முன்னே இதோ ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கிறது! அதுவும் நமது செந்தமிழ் நாட்டில் நடந்திருக்கிறது!

தேச மகா கவிக்கு ஒரு ஞாபகச் சின்ன மண்டபம் இதோ எழுந்திருக்கிறது! தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளித்த கவியரசருக்குத் தமிழ் மக்கள் சமர்ப்பித்த காணிக்கை இதோ காணப்படுகிறது!

இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு மகா கவிக்கு ஞாபகார்த்த மண்டபம் கட்டிய பெருமையைத் தமிழ் நாடு அடைந்திருக்கிறது!

இதோ அமரர் பாரதியார் ஆகாசத்தில் வந்து நிற்கிறார். "தலை நிமிர்ந்து நில்" என்றும் "மார்பை நிமிர்த்தி நட!" என்றும் தம் வாணாளெல்லாம் உபதேசித்த தீர மகா கவி முதன் முதலாகத் தலை குனிந்து நோக்குகிறார். அழகிய சிறு கோபுரம் அமைந்த அற்புத மண்டபத்தைப் பார்க்கிறார். ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் கூடி நின்று "வாழ்க பாரதியார்!" "வாழ்க கவியரசர்!" என்று கோஷிப்பதைக் கேட்கிறார். "ஆகா! நாம் கண்ட கனவுகளிலே இதுவுமா பலித்து விட்டது?" என்று வியப்படைகிறார்.

கவியரசர் பாரதியார் இந்தப் புவியினில் வாழ்ந்த போது பற்பல கனவுகள் கண்டார். பாரத நாடு சுதந்திரம் பெற்றுச் செழித்தோங்கக் கனவு கண்டார். தமிழ் மொழி தழைத்தோங்கக் கனவு கண்டார். தமிழர் வாழ்வு சிறந்தோங்கக் கனவு கண்டார்.

இப்படியெல்லாம் தேசத்துக்காகவும் தேச மக்களுக்காகவும் பற்பல கனவுகள் கண்ட மகான் தமது சொந்த வாழ்க்கை இன்பத்தைப் பற்றியும் சிற்சில கனவுகள் கண்டார். அவற்றை ஆதாரமாகக் கொண்டு இன்பக் கவிதைகள் புனைந்தார்.

பாரதியார் தமக்கெனக் கண்ட கனவுகளிலே ஒன்றில், "காணி நிலம் வேண்டும்!" என்றார். "அந்தக் காணி நிலத்தினிலே ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும்!" என்றும் கேட்டார்.

கவியரசரின் கனவைத் தமிழ் மக்கள் இன்று நிறைவேற்றி வைத்து விட்டார்கள்! காணி நிலத்திலே ஒரு கவின் பெறு மாளிகை கட்டித் தந்து விட்டார்கள்!

கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கட்டிய மாளிகை அல்ல; செமண்டினாலும் இரும்பினாலும் கட்டிய மாளிகை அல்ல; பொன்னைக் கொண்டும் மணியைக் கொண்டும் கட்டிய மாளிகையும் அல்ல; அதிகாரத்துக்கும் ஆக்ஞைக்கும் பயந்து மக்கள் கட்டிக் கொடுத்ததும் அல்ல.

அன்பினாலும் ஆர்வத்தினாலும் கட்டிய மணி மண்டபம்; ஆசையோடும் பாசத்துடனும் கட்டிய எழில் மாளிகை; தமிழ் மக்கள் தங்கள் இதயங் கவர்ந்த கவியரசருக்குப் பக்தியோடு சமர்ப்பித்த காணிக்கை; ஆயிரக் கணக்கான மக்கள் நாலணா முதல் நாலாயிரம் ரூபாய் வரையில் மனமுவந்து மகிழ்ச்சியுடன் உதவிய நன்கொடைகளைக் கொண்டு கட்டிய அற்புதத் திருப்பணி.

இத்தகைய மணி மண்டபத்தைத் திறந்து வைப்பதற்காக, மண்டபத்துக்கு அஸ்திவாரம் நாட்டிய ராஜாஜி, கல்கத்தாவிலிருந்து பறந்து வருகிறார். வங்க மக்களின் உள்ளத்தைத் தமது அன்புப் பணியினாலும் அறிவின் சிறப்பினாலும் பரிபூரணமாய்க் கவர்ந்த மேற்கு வங்காளத்துக் கவர்னர் வருகிறார். தமிழ் நாட்டின் தவப் புதல்வர் வருகிறார்.

ஒப்பற்ற புனிதத் தன்மை பொருந்திய இந்தத் தமிழர் திருவிழாவில் கலந்து மகிழ்வதற்குச் சென்னை மாகாணத்துப் பிரதம மந்திரியும், இதர தமிழ் மந்திரிகளும், சபாநாயகரும் விஜயம் செய்கிறார்கள்.

தமிழ்நாடெங்குமுள்ள தமிழன்பர்களும் எழுத்தாளர்களும் பத்திரிகாசிரியர்களும் வருகிறார்கள்.

“ஜயமுண்டு பயமில்லை மனமே — இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு”

என்றும்,

“பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை இருட் கணம் போயின யாவும்”

என்றும் பாடிய திர்க்கதரிசியின் ஞாபகார்த்த மண்டபத்தை அக்டோபர் 13உ காலையில் பொழுது புலர்ந்தவுடனே கவர்னர் ராஜாஜி திறந்து வைக்கிறார்.

“செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே!”

என்றும்,

“வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!”

என்றும் பாடிய அமுதத் தமிழ்க் கவியின் உருவச் சிலையைப் பிரதம மந்திரி ஓமந்தூர் ரெட்டியார் திறந்து வைக்கிறார்.

"பாரதநாடு பழம்பெரும் நாடே
பாடுவ மிஃதை எமக்கில்லை ஈடே!"

என்றும்,

"பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள்
பாரத நாடு!"

என்றும் பாடிய தேசபக்த ஆசு கவியின் ஞாபகார்த்த மண்டப விழாவைப் பல்லாயிரம் மக்கள் அன்று கண்டு களிப்பார்கள்.

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு — நாம்
எல்லோரும் சமமென்ப துறுதியாச்சு!"

என்றும்,

"ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவருமில்லை சாதியில்"


என்றும். பாடிய சமதர்ம சுதந்திரக் கவிஞரின் ஞாபகார்த்த மண்டபத் திறப்புவிழா, பூரண சுதந்திரம் பெற்ற பாரத நாட்டில் நடைபெறப் போகிறது.

பாரதிமண்டப அஸ்திவார விழா நடைபெற்ற அன்று, "அடிமை இந்தியாவில் இந்த அஸ்திவார விழாவை நடத்துகிறோம். மண்டபம் கட்டித் திறப்புவிழா நடத்தும்போது பாரதியாரின் தவம் பலித்துப் பாரத நாடு சுதந்திரம் பெற்றிருக்கும்!" என்று சொன்ன வாக்கு அற்புதமாய்ப் பலித்து விட்டது!

பாரதியார் தெய்வத் தமிழ் மொழியில் இன்பக் கவிதைகளில் கூறியுள்ள மற்ற தீர்க்க தரிசனங்களும் கூடிய விரைவில் நிறைவேறும் என்று நம்புவோமாக! அந்த வர கவியின் வாக்கு எல்லா விதத்திலும் உண்மையாகும் என்று உறுதி கொள்வோமாக!

"வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெல்லாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தேசத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!"

தமிழ் வளர்க்கும் கைகள்



டி.கே.சி

தமிழ்க் கவிதை என்பது ஏதோ புதிய தாகக் கண்டெடுத்த காரியம் அல்ல. புதிய தாகச் சேர்மானம் சேர்த்துச் செய்த 'இமிடேஷன்' வைரம் அல்ல.

'இமிடேஷன்' வைரம் என்றும் 'இமிடேஷன் சிவப்பு' என்றும் 'இமிடேஷன் முத்து' என்றும் ரத்தினங்களின் வேஷத்தைப் போட்டுக் கொண்டு கண்ணாடியும் கல்லும் எத்தனை எத்தனையோ மார்க்கெட்டில் குவிந்து கிடக்கின்றன.

ஆனாலும், அவைகளை மதிப்பார் இடையாது.

உண்மையான வைரம் என்றும், சொக்கச் சிவப்பு என்றும், நல்முத்து என்றும் ஆதி காலம் தொட்டு இருந்து வருகின்றன. இன்றைக்கும் இருக்கவே செய்கின்றன.

அவைகளை மதித்து ஆயிரக் கணக்கான ரூபாய் விலை கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள் மக்கள்.

இதே மாதிரிதான் தமிழ்க் கவியின் காரியமும் இருக்கிறது.

மூத்தொன்னாயிர ஆசிரியர், பொய்கை ஆழ்வார், ஆண்டாள், மாணிக்க வாசகர், காரைக்கால் அம்மையார், கம்பர்-இப்படியாகப் பூர்வகாலத்துக் கவிஞர்கள் பலர் கொடுத்துள்ள உண்மை ஒளி வீசும் கவிமணிகள் ஏராளமாய் இருக்கின்றன.



கடைசியாக, இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன்னுள்ள குற்றாலக் குறவஞ்சி ஆசிரியரும் உண்மைக் கவிகளைப் பாடி உதவி இருக்கிறார்.

இந்த வகையான உண்மைக் கவிகளின் பக்கத்தில் லக்ஷக்கணக்கான போலிக் கவிகளையும் தமிழில் பார்க்கிறோம்.

போலிக் கவிகள் அருமையான வஸ்து என்றே சொல்லத் தோன்றும். வெற்றுரையும் படாடோபமும் விரவிய செய்யுள்கள் ஆதிகாலம் தொட்டே இருந்து வந்திருக்கின்றன. இந்தக் கைங்கரியம் பூர்வத்தோடு நின்றதல்ல. நேற்றுவரை நடைபெற்று வந்த காரியமே.

ஏதோ வேடிக்கைக்காகவும் விளையாட்டுக்காகவும் பாடல் புனையலாம். அதை வைத்துக் கொண்டு ஒரு வகையாகப் பொழுதும் போக்கலாம். குற்றம் இல்லை.

ஆனால், இந்தச் செய்யுள்-விளையாடல்களைச் சில நூற்றாண்டுகளாகக் கவி இயற்றுவதென்றே எண்ணி ஏமாந்து போனார்கள் — 'கவிராயர்'களும் 'புலவர்'களும்!

இதிலிருந்து தமிழ்க் கவி என்பது பழைய காரியமே ஒழிய, புதிதாக இனிமேல் கவி பாடுவது முடியாத காரியம் என்றே எண்ணத் தோன்றிற்று.

உள்ளத்தின் ஒளியை வெளியிடும் கவி இனிமேல் இயற்றுதல் என்பது, ஆகாயத் தாமரையில் அத்தர் வடிக்கும் காரியமாகவே தோன்றிற்று.

தமிழ்க் கவியின் ஜாதக தசை இந்த விதமாக இருந்தபோது, சுப்பிரமணிய பாரதியார் ஒரு நாள் மாலை (நாற்பது வருஷத்துக்கு முன்) ஒரு பாடலைப் பாடிக் கொண்டு 2/28 அக்கப்ப நாயக்கன் தெருவுக்கு (ஜார்ஜ் டவுனில்) வந்தார்.

திருநெல்வேலி மாணவர்கள் நாலைந்து பேர் அங்கே ஜாகை வைத்துக்கொண்டிருந்தோம். பாரதியார் பாடலைப்

பாடினார். எப்பொழுதுமே அவருடைய தொனியில் ஒரு வேகம் உண்டு. பாடும் போது அந்த வேகத்தில் ஆவேசமே ஏறிக் கொள்ளும்.

“ வந்தே மாதரம் என்போம் ”

என்று சொன்னாலே ராஜத் துரோகம் என்று சட்டத்துக்குள் வந்து விடுகிறது என்றும், நிரந்தர தண்டனை கொடுக்கலாம் என்றும் சட்டபூர்வமாகக் கருதித் தண்டனை விதித்து வந்த காலம் அது.

“ நீ என்ன வேண்டுமானாலும் செய், எங்களைப் பெற்ற தாயை வணக்கமே செய்வோம், வணங்குகிறோம் என்று சொல்லத்தான் செய்வோம்!” என்பது பல்லவியின் பாவம்.

பல்லவி

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
  மாநிலத் தாயை வணங்குதும் என்போம்
(வந்தே)

சரணங்கள்

ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
  அன்னியர் வந்து புகலென்ன நீதி?—ஒரு
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
  சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?
(வந்தே)

ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
  ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
  ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(வந்தே)

எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
  யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்
முப்பதுகோடியும் வாழ்வோம்—வீழில்
  முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

பாடலின் உள்ளுணர்ச்சியை உள்ளங் கையில் வைத்துப் பார்ப்பது போல் இருந்தது.

“ முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
  முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் ”

அருமையான பாவத்தில் உணர்ச்சியின் வேகம் தொனிக்கிறது.

கேட்டோம். “ தமிழ்க் கவி உயிர்த் தெழுந்து விட்டது!” என்று எக்களிப்போடு சொன்னேன்.

பாரதியாரின் முகத்தில் ஆனந்தமும் எக்களிப்பும் கழித்தோடிப் பிரகாசித்தன.

(பாரதியாருக்கு அப்போது முப்பதுக் குள்ளான இளம் பிராயம்.)

தமிழருக்கு

★

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே! உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பலதொழில் வல்லார், பலமணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதர்களாக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, கூர்மை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ‘ஜாதி இரண்டொழிய வேறில்லை’ என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர்கள் பத்தினியை ‘வாழ்க்கைத் துணை’ என்றார்கள். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே!

—பாரதியார் திருவாக்கு.

எத்தனையோ பல பாடல்கள் பிறகு அவர் பாடி யிருக்கிறார். தமிழர்களுடைய வாய்க்குத் தேவாமிர்தம் அவைகள்.

* * *

“கல்கி”யில் பாரதியார் ஞாபகச் சின்னத்துக்காக ரூபாய் 5000 (ஐயாயிரம் மட்டும்) வேண்டும் என்று அறிக்கை வந்தது. அவ்வளவுதான்; அருவிபோல் நன்கொடை வந்து விழுந்தது. தடுக்க முடியவில்லை.

ஐம்பதினாயிரம் வந்தவுடன் தடைப் பிரசாரம் போட்டுத்தான் நின்றது.

* * *

எட்டயபுரம், ரயிலை விட்டு விலகி உள்ள ஊர். அற்புதமான அழகிய மண்டபம் எழுந்து விட்டது அங்கே. சிற்பி சித்தலே என்ன, மற்றும் பாரதி அன்பர்கள் என்ன, எல்லாருக்கும் ஒரே உத்ஸாகம் உண்டாய் விட்டது. மண்டபம் மகா மண்டபமாகவே வளர்ந்து நின்றுவிட்டது.

செலவும் ஏறித்தான் விட்டது.

1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 13-ம் தேதி காலையில் மேல வங்காள கவர்னர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், அடிகோலிய தம் திருக்கையினாலேயே மண்டபத்தைத் திறந்து வைக்கிறார்கள்.

கேட்பானேன்! லக்ஷம் தமிழன்பர்கள், கவியன்பர்கள், பாரதி அன்பர்கள் வந்து கூடுவார்கள்.

எல்லாருக்கும் வசதி ஏற்பாடாகிறது. நம்மவருக்குச் செலவின் விஷயம் தெரிந்து விட்டது.

“கல்கி” ஆசிரியரை ரொம்பவும் தொந்தரவு பண்ணி விட்டார்கள். “இந்த ஊருக்கு வாருங்கள்” “அந்த ஊருக்கு வாருங்கள்” “பெரிய்ய ஊருக்கு வாருங்கள்” என்று சொல்லி அழைத்து, ஆயிரம் இரண்டாயிரம் ஐயாயிரம் என்று கையில் கொடுத்தார்கள். மெலிந்த கை கஷ்டப்பட்டு விட்டது.

வாழ்க அந்தக் கை! பாரதியாரும் தமிழும் தமிழ் வளர்க்கும் கைகளும் வாழ்க!

வாழ்க வாழ்க!
தமிழ் வாழ்க!

★ பாரதியார் தம்முடைய வாழ்க்கையில் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல. அதைப் பற்றி நினைக்கும்போது, 'நெஞ்சு பொறுக்குதில்லையே!' என்று அவருடைய அருமைப் புதல்வி ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி இக்கட் கட்டுரையில் உணர்ச்சியுடன் எழுதியிருப்பது எவ்வளவு உருக்கமாக இருக்கிறது!

வாழ்க அமரகவி!

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே!" என்று உலகத்துக்கே வீரத்தை ஊட்டிய மகாகவி பாரதியார் இன்று தமிழரின் உள்ளங்களில் களிநடம் புரிகிறார் என்றால் அது மிகையாகாது.

கவிதா சன்னதமும், தேசாபிமான ஆவேசமும் கொண்ட பாரதியாரைத் தியாகவீரனாக்கியது புதுவைமாநகர். பாரதியார் எவ்வித வாழ்க்கை நடத்தினார், தேச முன்னேற்றத்திற்காக அவர் செய்த தியாகங்கள் யாவை என்று சொல்லப் போனால் இந்தக் கட்டுரை மாபாரதமென நீண்டுவிடும். பாரதியாரை அன்று பாதுகாத்து ஆதரிக்காததற்காக மனம் நொந்து, "நன்றி கெட்ட தமிழ்நாடே, காணமற்ற தமிழ்நாடே, எங்கள் பாரதியைப் பட்டினி போட்டுக் கொன்று விட்டாயே!" என்று கதறியழும் அன்பர்கள் பலர் இருக்கிறார்கள். அவரைத் தேசப் பித்தன் என்போரும், காதல் பித்தன் என்போரும், கடவுள் பக்தன் என்போரும் பலர். "நான் கண்ட பாரதி" "அவன் கண்ட பாரதி" என்பன போன்ற தலைப்புகளில் அவரவர்கள் பாரதியாரைச் சந்தித்தது, அளவளாவியது, கற்பனைக் கண்களால் பார்த்தது முதலியவற்றை எழுதியும், பிரசங்கங்கள் செய்தும், தர்க்கித்தும், சண்டையிட்டும் வருகிறார்கள்.

துரதிருஷ்டம் எங்கள் குடும்பத்தை விட்டு விலக விரும்பவில்லை—அன்றும் இன்றும். செயற்கரிய செயலாற்றும் மகா புருஷருடன் வாழும் பாக்கியம் பெற்ற நாங்கள், அந்தோ! துன்பமென்னும் மலைப் பாம்பின் வாயில் ஒவ்வொரு நிமிஷமும் விழுந்து எழுந்தோம். எத்தனை தடவை! எண்ண முடியுமா? நெஞ்சு பொறுக்குதில்லையே, அதை நினைத்து விட்டால்!

வறுமைப் பிணி மட்டுமா எங்களைத் துன்புறுத்தியது? அம்மம்ம! மாபெரும் லட்சியங்கள் மனத்தில் தோன்றும். அதை அடையும் தருவாயில் வஞ்சக முதலைகள் எங்கள் ஆசைப் படகைக் கவிழ்த்துவிடும். நம்பிக்கை என்னும் மரக்கட்டை தோன்றி எங்களைக் கரை சேர்க்கும். எத்தனை தோல்விகள் எங்களைத் தலை நிமிரவொட்டாமல் செய்துள்ளன? உறவினர் தொல்லை ஒரு புறம், சமூக பகிஷ்காரம் மற்றொரு புறம். சுதந்திர வானில் சிட்டாகப் பறக்கும் பாரதியாரை ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு ஒரு புறமும் வறுமை மற்றொரு புறமுமாகக் காலைப் பிடித்துத் தரைக்கு இழுத்தன. தம் மனோதிடத்தால், தவ வலிமையால், தன்னம்பிக்கையால் கவிஞர் இவற்றைச் சமாளிக்க முடிந்தது.

பாரதியை அவரது கவிதைகள் மூலம் அறியலாம். அச்சம் இல்லை என்று தமிழர் தலை நிமிரும் காலம் வந்து விட்டது. வாழ்க அமரகவி!

பாரதி மண்டப மாலை

சுவாமி சுத்தானந்த பாரதியார்

மஹாத்மா காந்தியின் அஹிம்சைத் தவத்தால்
விடுதலை பெற்று விளங்கும் இந்தியா
பட்ட துயரெலாம் பஞ்சாய்ப் பறக்க
காலவே கத்தைக் கடந்து முன்னேற,
பேரிகை கொட்டிய வீரக் கவிகளைக்
கண்ணெனப் போற்றுதல் புண்ணியக் கடனே.
அத்தகைக் கவிகளில் அமரக் கவிஞன்,
தாகூ ருடனே சரிநிக ரானோன்,
செந்தமிழ் நாட்டின் ஜெயபே ரிகையாய்
வந்தனன் சுப்பிர மண்யபா ரதியே!
பரம்பரைப் புலவர் வரம்பற வளர்ந்த
அறம்பயில் எட்டைய புரந்தனில் எழுந்தே,
வீர வாணியின் வெற்றிச் சங்காய்,
அடிமைத் தளையை அறுக்கும் வாளாய்,
அச்சப் பேயை நச்செனப் புடைக்கும்
வச்சிரா யுதமாய் வந்தான் மஹாகவி.
செத்துக் கிடந்த செந்தமிழ் நாட்டை
வீரச் சுடர்போல் விழித்தெழச் செய்தான்.
கொடுங்கோல் சட்டமாம் இடிபுய லெல்லாம்
ச்ண்டமா ருதமாய்ச் சாடிய போதும்,
வறுமைப் பிணிகள் வாட்டிய போதும்,
சிறுமைப் புல்லர் சீறிய போதும்,
சுற்றத் தாரே தூற்றிய போதும்,
ஒற்ற நரிகள் சுற்றிய போதும்,
கவியை மதியாக் காலந் தனிலும்
வந்தே மாதர மந்திரஞ் சொலினும்
இவிகொள் போலீஸ் புலிகள் துரத்தும்
அந்த நாளிலும், சிந்தனை யெல்லாம்
தேசம் தேசம் தேசம் என்றே
பாசங் கொண்டு பேசிய தீரன்!
நாவிலே சக்தி நர்த்தனம் செய்யும்
தெய்வக் கவிஞன், தேசக் கவிஞன்
பாட்டால் புதுத்தமிழ் நாட்டை யமைத்த
அருங்கவிச் சிற்பி; ஆணும் பெண்ணும்
சரிநிகர் என்ற சமரஸத் தூதன்
பாரதி என்னும் பரிதி வாழ்கவே!

வேறு

அச்சத்தை ஓட்டி அடிமைத் தளைபோக்கித்
துச்ச நினைவுகளைத் தூரறுத்து—மெச்சவே
ஞாலத்தில் ஓங்கும் நாட்டை எழுப்பினான்
காலத்தை வென்ற கவி.

வேறு

அத்தகை பாரதி அன்பிற் சிறந்த
முத்தமிழ் நாட்டு வித்தக மைந்தர்
கலைமணி யான கல்கியின் பொன்னுரை
கேட்டுப் பொருளைக் உணர்ச்சியோ டுதவி,
ஐக்கிய இறந்தால் ஆக்கிய மண்டபம்
பாரதி மண்டபம் பசுந்தமிழ் நாட்டின்
மறுமலர்ச்சிக்கு மந்திர மாமே!
புதுத் தமிழ் நாட்டின் பொன்னாலயமே!
சுதந்திர பாரதத் தூபியு மாமே!
கவியால் எழுந்த கலைக்கோ யிலிலே
குடியர சிந்தியக் கொடியா டுவதே
பாரதி வாணியின் பரிசது வாமே!
தமிழர் அன்புத் தவம்பெறு மண்டபம்
திறப்பு விழாவின் சிறப்பைச் சொல்லவோ?
தியாகத்தாலே தேய்ந்த உடலம்
அஞ்சா நெஞ்சகம், அற்புத மூளை,
சிக்கலை அறுக்கும் பக்குவ ஞானம்
கண்ணன் கீதையில் காட்டிய வழியே
கடமை காக்கும் கரும யோகியாம்
நமது ராஜாஜி நற்கலை மிகுந்த
வங்கக் கவர்னராய் வந்த வைபவம்
தமிழர் தமக்கே தனிச் சிறப்பாமே!
மூச்செலாம் பொதுநலம் பேச்செலாம்
பொதுநலம்

ஆகிய தீரத் தியாகி ராஜாஜி
திருவிழாத் தலைமை திருவுறத் தாங்கி
பாரதி யுகத்தைச் சீர்பெறத் தொடங்கும்
காட்சியே காட்சி மாட்சியே மாட்சி!!

வேறு

தித்திக்கும் செந்தமிழின் அமுதமானான்
தீப்பறக்கும் தேசாபி மானியானான்
எத்திக்கும் கொடுங்கோலின் இடியே யானான்
இந்தியசு தந்திரமே சிந்தை யானான்
தொத்தடிமைப் பேய்நடுங்கும் சுடரே யானான்
சுப்ரமண்ய பாரதியின் மண்டபத்தில்
புத்துலகக் கலைவாழ்க! புனித காந்தி
புகழ்வாழ்க! புதுமைநலம் வாழ்க மாதோ!

மணியம்

அமரகவி பாரதியார்

[தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ பெரியசாமித் தூரன்]

"நான் மனிதனுக்கு மரணமில்லையென்கிறேன்" என்று பாரதியார் கோஷமிட்டெழுந்தார். சபையிலே கூடியிருந்தவர்கள் முன்னால் மேடையிலே சிலையைப் போல் அசையாது வீற்றிருந்த அவர் தமது பிரசங்கத்தை இவ்வாறு தொடங்கினார். ஈரோட்டிற் கடுத்த கருங்கல்பாளையம் என்ற ஊரில் இருபது வருஷங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது.

மனிதனுக்கு 'மரணமில்லை' யென்று முழங்கியபோது அவர் இந்த உடம்பைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கவில்லை. இந்த உடம்பு மறைந்து விட்டாலும் மனிதன் மரணமில்லாமலிருக்கலாம் என்ற உண்மையை அவர் தமது சொற்பொழிவில் எடுத்துக் காட்ட முன் வந்தார். கருங்கல் பாளையம் வந்து திரும்பியபின் பாரதியாருடைய பூத உடல் சிறிது காலந்தான் நிலைத்திருந்தது. ஆனால் அவர் அன்று கூறிய வாக்கு பொய்யாகவில்லை. அவர் மரணமின்றி நம்முடன் இருக்கிறார். அவருக்கு என்றும் சாவில்லை.

"காலா, உனை நான் சிறு
புல்லென மதிக்கிறேன்; — என்றன்
காலருகே வாடா! சற்றே
உனை மிதிக்கிறேன்!"

என்று பாடிய கவிஞர் காலனைக் காலால் மிதித்து வெற்றி கொண்டு புகழுடம்போடு அமரராக விளங்குகிறார்.

கருங்கல்பாளையத்திலே இன்னும் அந்த வாசகசாலை சிறப்பாக நடைபெறுகின்றது. அதன் ஆண்டு விழாவில் தலைமை வகிப்பதற்காக நான் சமீபத்திலே அங்கு சென்றிருந்தேன். பாரதியார் அங்கு வந்திருந்த காலத்திலே அவர் நடந்து கொண்ட விதத்தைப் பற்றி வேடிக்கையாகவும் பெருமையாகவும் சிலர் என்னிடம் கூறினார்கள். பாரதியாரை வரவேற்பதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றவர்களால் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் ரயிலை விட்டு இறங்கியதும் யாரையும் எதிர் பாராமல் வேகமாக வெளியே வந்து ஒற்றை மாட்டு வண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு கருங்கல்பாளையத்துக்கு வந்து விட்டாராம். வந்தவர் நேராக வீட்டிற்குள்ளே சென்று கதவை மூடிக்கொண்டு "பராசக்தி, பராசக்தி!" என்று உரத்துக் கூவத் தொடங்கினார். அருகே இருந்தவர்களெல்லாம் பிரமித்துப் போய்விட்டார்களாம்.

பிறகு அவர் க்ஷவரம் செய்து கொள்ள வேண்டுமென்று கூறினாராம். உடனே ஒரு நாவிதனை அழைத்து வர ஏற்பாடு செய்தார்கள். அப்பொழுது எதிர்பாராத ஒரு சங்கடம் உண்டாயிற்று. நாவிதனை வெளியே தூரத்தில் தள்ளி வைப்பது பாரதியாருக்குச் சம்மதமில்லை. உள்ளே வந்துதான் க்ஷவரம் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். அந்தக் காலத்திலே அது நடக்காத விஷயம். வீட்டுக்காரர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். விருந்தினரை உத்தேசித்து அவர்கள் மௌனமாக இருந்தாலும் நாவிதன் உள்ளே வர இணங்க மாட்டான். இந்த நிலைமையில் அகப்பட்டுக் கொண்டு விழாச் செயலாளர்கள் தடுமாறினார்களாம். ஆனால் கடைசியில் பாரதியாரே வெற்றியடைந்தார்.

ஆண்டு விழாவுக்கு ஒரு நாள் முன்னதாகவே பாரதியார் அங்கு வந்து சேர்ந்தார். வந்த அன்றே விழாவை நடத்தும்படி வற்புறுத்தினார். "அழைப்புப் பத்திரங்களெல்லாம் கொடுத்தாய் விட்டதே, இப்பொழுது திடீரென நாளை மாற்றினால் ஜனங்களுக்குத் தெரிவிக்க இயலாதே!" என்று எடுத்துக் கூறியும் அவர் கேட்கவில்லை. "பறை சாற்றித் தெரிவித்து விடுங்கள்; வருகின்றவர் வரட்டும்—பெரிய கூட்டம் எதற்காக?" என்று சொல்லி விட்டார். அவர் விருப்பப்படியே விழாவும் நடந்தது.

மறு நாள் மாலையில் அவர் ஈரோடு காரைவாய்க்காலுக் கருகிலுள்ள மைதானத்திலே பேசினார். தாம் கருங்கல்பாளையம் வந்த விஷயத்தைப் பற்றி அவர் ஹாஸ்யச்

சுவையோடு 'எனது ஈரோடு யாத்திரை' என்ற கட்டுரையிலே எழுதியிருக்கிறார்.

அக்கட்டுரையும், அதுபோன்ற பல கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும், கடிதங்களும் இன்னும் புத்தக வடிவிலே வெளிவராமலிருக்கின்றன. பதினேழு வருஷங்களுக்கு முன்பு நான் எனது நண்பர்கள் சிலரோடு அவற்றை "சுதேசமித்திரன்" பழைய பிரதிகளில் தேடி எழுதி வைத்தேன். பத்திரிகைகள் அவற்றில் சிலவற்றை அவ்வப்போது வெளியிட்டன. இன்னும் சில வெளியாகாமலே என்னிடம் இருக்கின்றன. "தமிழ்" என்று தலைப்பிட்டு அவருடைய கட்டுரை ஒன்று இருக்கிறது. அதிலே பாரதியார் கூறுகிறார்:

"உலகத்திலுள்ள ஜாதியார்களிலே உயர்ந்த ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த உயர்ந்த ஜாதிக்குத் தமிழ ஜாதி நாம் சிகரம்போல விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை. இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன்; ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியமில்லை; நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுதிலும் பரவா விட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்!"

இதுபோன்ற அழகிய வாக்குகளெல்லாம் வெளியாகாமலிருப்பது பெரிதும் வருந்தற்குரியதாகும். பாரதியாருடைய ஞாபகார்த்தமாக விழா நடத்துகின்ற இச்சமயத்திலே, இதைப்பற்றி நாம் சிந்தித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர் எழுதியதை ஒன்றுகூட விடாமல் புத்தகத்திலே தொகுக்க வேண்டும். அத்துடன் அவருடைய விரிவான வாழ்க்கைச் சரித்திரத்தை நல்ல முறையில் தக்கவர்களைக் கொண்டு எழுத வேண்டும். அவருடைய ஞாபகத்தை மண்டபத்தில் மட்டுமல்ல — சிலையிலே, ஓவியத்திலே, எழுத்திலே சித்திரமாகப் பொறித்து வைத்து அவரிடம் நமக்குள்ள அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்த வேண்டும். இதுவே எனது ஆசை. வாழ்க பாரதி!

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

உண்மைக் கவி

ஒரு நாட்டில் கவிகளின் பெருமையை அறிந்து பாராட்டி ஞாபகச் சின்னம் அமைப்பதற்கு வெகு காலம் செல்லும். ஆனால், பாரதியாருக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது, நமது நாடு கெட்டுப் போகவில்லை, மக்களிடையே சிறந்த உணர்ச்சி இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

• • •

சிலர் குழந்தைகளைப் பார்த்து 'உனக்கு அப்பா வேண்டுமா? அம்மா வேண்டுமா?' என்று கேட்பதுண்டு. அது தவறு. அதுபோலவே, கவிகளில் எந்தக் கவி உயர்ந்தவர் என்று விவாதிப்பதும் தவறு. 'கம்பர் உயர்ந்தவரா, பாரதி உயர்ந்தவரா' என்றெல்லாம் விவாதிக்கக் கூடாது. நமக்குக் கம்பரும் வேண்டும்; பாரதியும் வேண்டும். உண்மைக் கவி எது என்று தெரிந்து கொண்டு, எல்லாக் கவிகளையும் அநுபவிக்க வேண்டும்.


• • •

பாரதியார் உண்மையான கவி. அவர் எத்தனையோ மணமுள்ள கவிதை மலர்களைச் சிருஷ்டித்து நமக்குக் கொடுத்திருக்கிறார். தேசத்துக்கு அவசியமான எல்லா விஷயங்களையும் பற்றி அவர் பாடியிருக்கிறார். அவர் தொடாத விஷயம் ஒன்றுகூட இல்லை. ஆனால், பாரதியார் எதைப் பற்றிப் பாடினார் என்பதைக் காட்டிலும், அவர் ஒரு கவி என்பதுதான் முக்கியமான விஷயம். முக்கியமாக, நம் காலத்தில் பாரதியார் பிறந்து பாடியதனால், இந்தத் தமிழ் ஜாதியின் சக்தி அவிந்துவிடவில்லையென்பது நிச்சயமாய்த் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட கவியின் ஞாபகத்தை நாம் என்றென்றைக்கும் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதினால் இன்னும் பல கவிகள் தமிழ் நாட்டில் தோன்றக் கூடும்.

[1945-ம் வருஷம் ஜூன் மாதம் 2-3 தேதிகளில் எட்டயபுரத்தில் நடந்த பாரதி மண்டப அஸ்திவாரக் கல் நாட்டு விழாவின் போது நமது தலைவர் ராஜாஜி கூறியது.]

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பாரதி கைங்கரியம்



பாரதியார் ஞாபகார்த்த மண்டப கைங்கரியத்துக்கு எவ்வளவோ பேர் உதவி செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் மந்திரிமார்கள் மறக்க முடியாத பெருதவி செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவர்களும் ஊழியர்களும் அரிய சேவை புரிந்திருக்கிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உதவி புரிந்திருக்கிறார்கள். ஜமீன்தாரி மசோதாவினால் ஏற்பட்டிருக்கும் மன வேதனையை மறந்து ஜமீன்தார்கள் உதவி அளித்திருக்கிறார்கள். ஏழை மக்கள் எத்தனையோ பேர் தங்கள் சக்திக்கு மேற்பட்ட பொருளுதவி செய்திருக்கிறார்கள். முதலாளிகளின் தாராள நன்கொடைகளும் தொழிலாளிகள் பாடு பட்டுச் சம்பாதித்த சிறு தொகைகளும் பாரதி மண்டப கைங்கரியத்தில் சேர்ந்திருக்கின்றன. இலங்கை முதல் டில்லி வரையில் பரவியுள்ள தமிழன்பர்கள் பணம் அனுப்பியிருக்கிறார்கள். சங்கீத வித்வான்களும் ஏழை உபாத்தியாயர்களும் உதவியிருக்கிறார்கள். பெண்மணிகள் பலர் பாரதி மண்டப கைங்கரியத்தில் முன்னால் நின்றிருக்கிறார்கள். பத்திரிகாசிரியர்களும் எழுத்தாளர்களும் அபரிமிதமான உதவி செய்திருக்கிறார்கள்.

இவ்விதமாக எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் தமிழ் மக்களின் ஒருமுகமான ஆதரவைப் பெற்று பாரதி மண்டப கைங்கரியம் நடந்திருக்கிறது.

இத்தகைய ஒருமுகமான பொதுஜன ஆதரவுடன் நடந்திருக்கும் திருப்பணிக்கு இசைத்தட்டுகள் வெளியிடும் கிராமபோன் கம்பெனிக்காரர் செய்துள்ள உதவியைப் பெருமிதமான மகிழ்ச்சியுடன் இந்த இதழில் குறிப்பிட விரும்புகிறேன்.

பாரதி மண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு எச். எம். வி. கம்பெனியாரும் கொலம்பியா கம்பெனியாரும் இரண்டு பாரதி ஞாபகார்த்த இசைத் தட்டுக்களை வெளியிட்டிருக்கின்றனர்.

எச். எம். வி. கம்பெனியாரின் N. 18350 இசைத்தட்டு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் பாடப் பெற்ற கீதாஞ்சலி.

“தெய்வத் தமிழ் நாட்டினிலே” என்னும் வெண்ணிலாக் கண்ணிகள் ஒரு பக்கத்திலும், “தவமும் பலித்த தம்மா!” என்னும் ராகமாலிகைக் கீர்த்தனம் ஒரு பக்கத்திலும் பாடப்பட்டிருக்கின்றன. பாரதியாரின் கவி மகிமையையும் தமிழ் நாட்டுக்குப் பாரதியார் செய்துள்ள ஒப்பற்ற தொண்டையும் விவரிக்கும் மேற்படி இரண்டு பாடல்களையும் இந்த இதழில் வெளியாகியிருக்கும் விசேஷ சித்திர அநுபந்தத்தில் காணலாம்.

இந்த இசைத் தட்டு விற்பனையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்குரிய சன்மானமும் எச். எம். வி. கம்பெனியின் விற்பனை லாபமும் பாரதி மண்டப நிதிக்கு அளிக்கப்படுகின்றன.

கொலம்பியாவின் GE 6423 நெம்பர் இசைத்தட்டின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு அருமையான பாரதியார் கீதங்களை ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் பாடியிருக்கிறார். “தொன்று நிகழ்ந்தது” என்று தொடங்கும் பாரதத் தாயின் புகழ்மாலை பைரவி ராகத்திலும், “சின்னஞ் சிறு கிளியே” என்னும் கண்ணன் பாட்டு ராகமாலிகையாகவும் பாடப்பட்டிருக்கின்றன. பாரதியார் கீதங்களை ரிகார்டு செய்யும் உரிமை பெற்றுள்ள ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் கொலம்பியா — சரஸ்வதி ஸ்டோர்ஸ் மூலம் இந்த ஞாபகார்த்த இசைத் தட்டை வெளியிட ஏற்பாடு





பாரதி மண்டப விழா கைங்கரியத்துக்காகச் சென்னை சர்க்கார் சிவில் சப்ளைஸ் இலாகா ரிக்ரியேஷன் கிளப் அங்கத்தினர் ''மைதிலி'' என்னும் நாடகம் நடத்தி ரூ. 3500 பண முடிப்பு அளித்தார்கள். நடிகர்களும் முக்கிய நிர்வாகஸ்தர்களும் இந்தப் படத்தில் காட்சி தருகிறார்கள்.

செய்ததைப் பெரிதும் பாராட்டுகிறேன். இந்த இசைத்தட்டு விற்பனையில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளுக்குரிய சன்மானம், காபிரைட் ராயல்டி, விற்பனை லாபம் ஆகியவற்றை பாரதி மண்டப நிதிக்கு அளிக்க இசைந்திருக்கிறார்கள்.

இதைத் தவிர ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் பாரதி மண்டபத் திறப்புவிழாச் செலவுக்காக ரூ. 3101 நன்கொடை அளித்திருப்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுப் பாராட்டுகிறேன்.

மேற்படி இரண்டு இசைத் தட்டுக்களும் கூடிய சீக்கிரத்தில் தமிழ் நாடெங்கும் இனிது ஒலிக்கும் என்று எதிர்பார்க்கலாம். அப்படி ஒலிக்க ஒலிக்க, பாரதியார் ஞாபகார்த்த மண்டபத்தின் நிரந்தர நிதிக்குப் பணம் சேர்ந்து கொண்டிருக்கும்.

• • •

சென்னை சர்க்காரின் சிவில் சப்ளைஸ் இலாகா உத்தியோகஸ்தர்களின் பாரதி மண்டப கைங்கரியத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் அவசியம் சொல்ல வேண்டும். சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்படி உத்தியோகஸ்தர்கள் ஆனந்த விகடன் 'தேவன்' எழுதிய மைதிலி என்னும் நாடகத்தை நமது கல்வி மந்திரி ஸ்ரீ கனம் அவினாசிலிங்கம் அவர்களின் முன்னிலையில் நடித்தார்கள். பல நடிகர்கள் அபார நடிப்புத் திறமை காட்டினார்கள். சபையோரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தார்கள். அத்துடன், நாடகம் நடத்தியதில் வசூலான ரூ. 3500 ஐப் பாரதி மண்டப கைங்கரியத்துக்காக அளித்தார்கள்.

மேற்படி நாடகத்தைத் தயாரித்து இவ்வளவு நன்றாக நடித்து இத்தனை தொகையையும் சேர்த்துக் கொடுப்பதற்கு சிவில் சப்ளைஸ் நண்பர்கள் ஒரு மாத காலத்துக்கு மேலே பெருமுயற்சி செய்திருக்க வேண்டும் என்பதை நினைக்கும்போது அவர்களுடைய கைங்கரியத்தின் பெருமை பன்மடங்கு பெருகித் தோன்றுகிறது. மகா கவியின் ஆசியினால் அவர்களுடைய நாடகத் திறமையும் நிர்வாகத் திறமையும் மேலும் வளர்ந்து இம்மாதிரி உத்தம கைங்கரியங்களுக்குப் பயன்படுவதாக.

பாரதி மண்டப நிதி

கோவை சத்தியமூர்த்தி வாசகசாலை மூலம் வரவு	1586	8	0
மெஸர்ஸ் சரி அண்டு சாம், மதுரை	250	0	0
ஸ்ரீ டி. எஸ். ஆதிமூலம், மூக்கூடல்	201	0	0
மெஸர்ஸ் பயோனியர் மில்ஸ் லிமிடெட், கோவை	151	0	0
மெஸர்ஸ் ஸ்ரீ ரெங்க விலாஸ் ஜி. எஸ். அண்டு டபிள்யூ மில்ஸ் லிமிடெட், கோவை	151	0	0
மெஸர்ஸ் காளீஸ்வரர் மில்ஸ், கோவை	151	0	0
சாத்தூர் ஒரிஜினல் மாட்ச் கம்பெனி, சாத்தூர்	150	0	0
மெஸர்ஸ் சாரதாகிருஷ்ணு மில்ஸ், கோவை	150	0	0
மெஸர்ஸ் வஸந்தா மில்ஸ், கோவை	150	0	0
மெஸர்ஸ் கோயமுத்தூர் காட்டன் மில்ஸ், கோவை	150	0	0
மெஸர்ஸ் பங்கஜா மில்ஸ், கோவை	150	0	0
மெஸர்ஸ் ராஜலக்ஷ்மி மில்ஸ், கோவை	150	0	0
மெஸர்ஸ் கோயமுத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோவை	150	0	0
நவாப் டி.எஸ். ராஜமாணிக்கம், மதுரை	108	0	0
மெஸர்ஸ் பாலசுப்பிரமணிய மில்ஸ், கோவை	100	0	0
ஒரு அன்பர், பங்களூர்	100	0	0
ஸ்ரீ டி. ஷண்முகம், தேவர் ஸஞ்ச் ஜோம், ரெங்கூன், மூலம் வரவு	100	0	0
பாரதி பிக்சர்ஸ் லிமிடெட், புளியங்குடி	51	0	0
ஸ்ரீ டி. எம். எம். பாலசுப்பிரமண்ய செட்டியார், கீழ்புவனகிரி	51	0	0
ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய மாணவர்கள், பெரிய நாயக்கன் பாளையம், கோவை	51	0	0
ஸ்ரீமதி சீதாமணி ஸ்ரீநிவாஸன், திருச்சி	51	0	0
ஸ்ரீமதி ஜானகி அம்மாள், கட்டாக்	50	4	0
ஸ்ரீ ஓ. புல்லா ரெட்டி, ஐ. ஸி. எஸ்., சென்னை	75	0	0
ஸ்ரீ வி. கே. விஜயராகவன், ஐ. ஸி. எஸ்., சென்னை	50	0	0
ஸ்ரீ டி. எம். எஸ். மணி, ஐ. ஸி. எஸ்., சென்னை	50	0	0
ஸ்ரீ ஸி. வி. நரஸிம்மன், ஐ. ஸி. எஸ்., சென்னை	50	0	0
ஸ்ரீ ஜி. வெங்கடேஸ்வரய்யர், ஐ. ஸி. எஸ்., சென்னை	50	0	0
மெஸர்ஸ் பாட்டர்ஸன் அண்டு கம்பெனி, சென்னை	50	0	0
மெஸர்ஸ் செல்லம் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை	50	0	0
மெஸர்ஸ் கோயமுத்தூர் முருகன் மில்ஸ், கோவை	50	0	0
ஸ்ரீ பாலக்காட்டு மணி அய்யர், மிருதங்க வித்வான், சென்னை	50	0	0
டாக்டர் ஜி. கே. வெங்கடராமன், கோபிசெட்டிபாளையம்	50	0	0
ஸ்ரீ வி. சேஷசாயி, மானேஜிங் டைரெக்டர், சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சி	50	0	0
கோவை இளைஞர்கள் (ஸ்ரீ எஸ். டி. சங்கராஜன் மூலம்)	46	0	0
ஸ்ரீ கே. ஏ. வா. சர்மா, கல்வி எஜண்டு, திருவையாறு மூலம் வரவு	40	0	0
ஸ்ரீ ஸபரிராஜ் நாராயணன், கோலாலம்பூர்	39	12	0
ஸ்ரீ என். கிருஷ்ணமூர்த்தி பி.ஏ., பி. எல்., சென்னை	30	0	0
ஸ்ரீ வி. பூவராகன், தஞ்சை	30	0	0
மெஸர்ஸ் வெங்கடராமன் அண்டு கம்பெனி, சென்னை	25	0	0
ஜோதிபுரி விமானப் படை தமிழ்க் கழகம்	25	0	0
சந்திரவிலாஸ் ஹோட்டல் சிப்பந்திகள், கோவில்பட்டி	25	0	0
மிருதங்க வித்வான் ஸி. டி. லக்ஷ்மணன், பன்னாதூர்	25	0	0
ஸ்ரீ பி. ஏ. சுவாமிநாதன், கல்கத்தா	25	4	0
ஸ்ரீ வி. ஜி. முனிசாமி பிள்ளை, எம். எல் ஏ., சென்னை	25	0	0
ஸ்ரீ வி. எஸ். ராமமூர்த்தி, ஒட்டன்சத்திரம்	25	0	0
ஸ்ரீமதி வி. எம். கோதைநாயகி அம்மாள், ஆசிரியை 'ஜகன்மோஹினி'	25	0	0
ஸ்ரீ வி. எம். ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்., துணை ஆசிரியர் 'ஜகன்மோஹினி'	25	0	0
மெஸர்ஸ் அனந்தராம் மூராக்ஜி, கோவை	25	0	0
நவலக்ஷ்மி பவன் தொழிலாளர்கள், மதுரை	21	8	0
சாத்தூர் மாட்ச் கம்பெனி தொழிலாளர்கள்	21	3	0
மெஸர்ஸ் கே. டி. முத்து நாடார் அண்ட் பிரதர்ஸ், கல்வி எஜண்ட், டிக்கோயா, மூலம்	21	0	0
ஸ்ரீ எஸ். கே. ஸ்வாமி, இரும்பு வியாபாரம், பம்பாய்	21	0	0
திருப்புகழ் மாதர் சங்கம், சிவகாசி	20	0	0
ஸ்ரீ வி. டி. ஸ்ரீநிவாசன், பெங்களூர்	20	0	0
பாரி அண்டு கம்பெனி உத்யோகஸ்தர்கள், சென்னை	15	0	0
ஸ்ரீமதி ஏ. ஜெயலக்ஷ்மி அம்மாள், அய்யம்பாளையம்	15	0	0
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, கவப்பான், தஞ்சை	15	0	0
கிராம காங்கிரஸ் கமிட்டி, காளிங்கப்பட்டி, சாத்தூர்	12	12	0
பாரதி தேசீய கழகம், சென்னை	12	11	6
ஸ்ரீ பி. எஸ். பிச்சையா பிள்ளை, புளியங்குடி	12	0	0

ஸ்ரீ என். என். சுப்ரமணிய அய்யர், வக்கீல், தேவகோட்டை மூலம் வரவு	12	0	0
பொன்னம்பல உயர்தர வித்யா சாலை ஆசிரியர்கள், தென்காசி	11	2	0
பொன்னம்பல உயர்தர வித்யா சாலை மாணவ, மாணவிகள் தென்காசி	11	1	0
ஸ்ரீ டி. குளத்து அய்யர், மயிலாப்பூர்	11	0	0
காரைக்குடி தோட்டத் தொழிலாளர் சங்கம் (ஸ்ரீ எஸ். ரெங்கநாதன் மூலம்)	10	0	0
ஸ்ரீ கே. எஸ். பெரியசாமி முதலியார், சென்னிமலை	10	0	0
ஸ்ரீ டி. சம்பத்குமாரன், சேலம்	10	0	0
தேசிய இந்திய இளைஞர் கழகம், சாம்பியன் ரீப்ஸ்	10	0	0
ஸ்ரீ சாந்தையா, வாருகலை, இலங்கை	10	0	0
டாக்டர் எம். ஆநந்தன், அந்தியூர்	10	0	0
ஸ்ரீ எஸ். நாராயண ராவ், காமெடியன், சென்னை	10	0	0
தேசிய வாலிபர் சங்கம், சிங்காநந்தபுரம்	10	0	0
ஸ்ரீ வி. கோபாலன், இஞ்சினியர், ஜுவஹர் சமஸ்தானம்	10	0	0
ஆழ்வார் திருநகர் பாரதி விழா பொதுக் கூட்ட வசூல் (இளைஞர் சங்கம் மூலம்)	9	3	0
திருவள்ளுவர் நிலையம், பொள்ளாச்சி	9	0	0
சிவகங்கை ஏ. ஆர். நடேசன் செட்டியார் பாடசாலை உத்தியோகஸ்தர்கள்	8	6	0
ஆசிரியர்கள், வி. எஸ். எம். நாயர் எலிமெண்டரி பாடசாலை, முதுகுளத்தூர்	8	0	0
காங்கிரஸ் ஊழியர், ஸ்ரீ என். செல்லையா நாயுடு, கோவில்பட்டி	5	0	0
கலைவாணி சங்கீதசபா, சென்னை	5	0	0
ஸ்ரீமதி ஆர். சகுந்தலா, செங்கனச்சேரி	5	0	0
ஸ்ரீ பி. எஸ். பாலசுப்ரமணியம், பவானி	5	0	0
ஸ்ரீமதி ஆர். சேது, செங்கோட்டை	5	0	0
ஸ்ரீ கே. பி. முத்துசாமி, தலைவர், கிராம காங்கிரஸ் கமிட்டி, காஞ்சிக்கோயில்	5	0	0
அமராவதி புதூர் வாலிபர்கள் (ஸ்ரீ ரா. குமாரவேலு மூலம்)	5	0	0
ஸ்ரீமதி எஸ். ஜானகி, திருவனந்தபுரம்	5	0	0
ஸ்ரீ என். என். முத்துக்கருப்பன் செட்டியார், பினாங்கு	5	0	0
ஸ்ரீ மு. ஸ்ரீநிவாசகம், பினாங்கு	5	0	0
ஸ்ரீ மு. கிருஷ்ணன், பினாங்கு	5	0	0
கலைக் கழகம், திருச்செந்தூர்	5	0	0
ஸ்ரீ எம். சீதாராம், மதுரை	5	0	0
ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்த நிலையம், ஒழுகரை	5	0	0
திருப்பூர் ஜவுளி வர்த்தகத் தொழிலாளர் சங்கம், திருப்பூர்	5	0	0
'வாகஸி' கோயமுத்தூர்	5	0	0
ஸ்ரீ டி. ஜி. லக்ஷ்மணஸ்வாமி முதலியார், டெபுடி மேயர், சென்னை	5	0	0
ஸ்ரீ எம். வி. எம். ஏ. ஷேக் இப்ராஹிம், திருநெல்வேலி	5	0	0
ஸ்ரீ ஆர்எம். எஸ்பி. ராமநாதன் செட்டியார், கோனாபட்டு	5	0	0
லக்ஷ்மி அப்பளம் டிப்போ, மயிலாப்பூர்	5	0	0
ஜனாப் எம். எம். இப்ராஹிம், பதுளை	5	0	0
ஸ்ரீ க. இராமகிருஷ்ணன், கோட்டகிரி	5	0	0
ஸ்ரீ ஆர். ஏ. ராமகிருஷ்ணன், திருவனந்தபுரம்	5	0	0
ஸ்ரீ கே. வி. எஸ். ராமன், கோபி செட்டிபாளையம்	5	0	0
ஸ்ரீ ஏ. கோபாலகிருஷ்ணன், ஆலப்புழை	5	0	0
ஸ்ரீமதி கே. ஜானகி, திருநெல்வேலி	5	0	0
ஸ்ரீ டி. வி. கிருஷ்ணசாமி அய்யர், கொட்டாரகரா	5	0	0
பாரதியார் வாலிபர் சங்கம், சொக்கலிங்கபுரம்	5	0	0
விவேகாநந்தா கல்விக் கழகம், ஆவினிப்பட்டி	5	0	0
ஸ்ரீ எச். பத்மநாதய்யர், ஆலப்புழை	5	0	0
ஸ்ரீ ஏ. ரெங்கசாமி, அரியலூர்	5	0	0
ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தி, சிம்மோட்டாஜலி, சாம்ராஜ்நகர்	5	0	0
ஸ்ரீ கே. ஜனி, பம்பாய்	5	0	0
ஸ்ரீ கே. சுந்தரேசன், பம்பாய்	5	0	0
டி. சுப்பிரமணியம், மானேஜர், பொன்னம்பல உயர்தர வித்யா சாலை, தென்காசி	5	0	0
ஸ்ரீ கே. ராமச்சந்திரன், கோவை	5	0	0
வேலூர் ஸ்ரீ ஏ. குப்புசாமி முதலியார், கோவை	5	0	0
ஐந்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை	19	9	0
பாரதி அன்பர்கள் கழகம், திண்டுக்கல் (ஸ்ரீ வ. க. வரதன், செயலாளர் மூலம் வரவு ரூ. 482-5-5-க்கு விவரம்):			
ஸ்ரீ என். வெங்கடசாமி நாயுடு, ராஜலக்ஷ்மி மில்ஸ், திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ எஸ். பி. எஸ். அருணாசலம் பிள்ளை, மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ எஸ். டி. சேதுராமலிங்கம் பிள்ளை, மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ பி. என். கோவிந்தராஜு நாயுடு, மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ எம். மருதநாயகம் பிள்ளை, மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ எஸ். எஸ். ஹாஜி சுல்தான் அஹமது ராவுத்தர் சன்ஸ், மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ டி. எஸ். ஏ. முஹம்மது யூசுப் காண்ட்ராக்டர், திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ பி. பி. எம். சின்னக்கனி நாடார், மண்டி, திண்டுக்கல்	25	0	0
எம். எஸ். புகழேசி நாடார் சன்ஸ், திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ ஏ. அவணா நாடார், காரியதரிசி, தமிழிசை கழகம், திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ ஏ. கே. பி. கோவிந்தசாமி செட்டியார், மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ டி. எம். எம். துரைராஜ் செட்டியார், மண்டி, திண்டுக்கல்	25	0	0
ஸ்ரீ கே. எஸ். ஓ. பொன்னையா ராவுத்தர், மீராஸ்தார், திண்டுக்கல்	20	0	0
ஸ்ரீ ஆர். நாகூர் பிச்சை ராவுத்தர், காரியதரிசி, நகர காங்கிரஸ் கமிட்டி, திண்டுக்கல்	20	0	0

ஸ்ரீ எஸ். தமீஜ முஹம்மது ராவுத்தர், மானேஜர், சுதர்ஸ் ரோட்வேஸ், திண்டுக்கல் 10 0 0

ஸ்ரீ எம். ராமசாமி அய்யர், திண்டுக்கல் 10 0 0

ஸ்ரீ கே. நந்தகோபால், மிராசுதார், திண்டுக்கல் 10 0 0

ஸ்ரீ ஆர். நாராயணசாமி நாயுடு, மானேஜர், சௌந்தரராஜா மில்ஸ் திண்டுக்கல் 10 0 0

ஸ்ரீ எஸ். சூரியநாராயணன், சௌந்திரராஜா மில்ஸ், திண்டுக்கல் 10 0 0

ஸ்ரீ எம். கே. வி. கிருஷ்ணசாமி முதலியார், ரத்தின காட்டன் ஜின் அண்டு பிரஸ் பாக்டரி, திண்டுக்கல் 10 0 0

பி. ஏ. கோபுல்லசாமி ஐயர் சன்ஸ், கைத்தறி நெசவு வியாபாரம், நாகல் நகர், திண்டுக்கல் 10 0 0

ஸ்ரீ நாகராஜ ராவ், சௌந்தர ராஜா மில்ஸ், திண்டுக்கல் 5 0 0

ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, திண்டுக்கல் 5 0 0

ஸ்ரீ ஆர். நடராஜ அய்யர், பால விலாஸ் போர்டிங் அண்டு லாட்ஜிங், திண்டுக்கல் 5 0 0

குடுவா ஸ்ரீ எஸ். ராமய்யர், கைத்தறி நெசவு வியாபாரம், திண்டுக்கல் 5 0 0

மேடா. ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணன், மளிகை வியாபாரம், திண்டுக்கல் 25 0 0

பாரதி விழாவில், தலைவருக்குச் சூட்டிய ரோஜா மாலையை ஏலம் விட்டதில் வரவு 15 0 0

உண்டியல் மூலம் சில்லறை வசூல் 12 5 5

(திருச்செந்தூர் ஸ்ரீ எம். ஸ்ரீனிவாசன், வெ. அழகியசுந்தரம் மூலம் வரவு ரூ. 200-க்கு விவரம்:)

ஸ்ரீ மஹேந்திர விலாஸ் எஸ். ஏ. கர்த்தர், எம். ஸ்ரீனிவாசன்	30	0	0
ஸ்ரீ எஸ். கலியாணசுந்தரம் பிள்ளை	15	0	0
ஸ்ரீ பி. பரமசிவன் ஆச்சாரி	15	0	0
ஸ்ரீ ஆ. சண்முக வேலாச்சாரி	15	0	0
ஸ்ரீ வே. ஆசிர்வாத நாடார்	15	0	0
ஸ்ரீ ஏ. கனகசபாபதியா பிள்ளை	11	0	0
ஸ்ரீ எம். ஏ. வள்ளிநாயகம் பிள்ளை	11	0	0
ஸ்ரீ டி. எம். சரவண ஐயர்	11	0	0
ஸ்ரீ பூ. புலமாடன்	11	0	0
ஸ்ரீ எஸ். ஏ. ராமநாத பிள்ளை	11	0	0
ஸ்ரீ எம். பாலையா	5	0	0
ஸ்ரீ எஸ். குத்தாலிங்கம் செட்டியார்	5	0	0
ஸ்ரீ கே. சுப்பிரமணிய பிள்ளை	5	0	0
ஸ்ரீ எம். செருபதி, டி. வி. எஸ்.	5	0	0
ஸ்ரீ அ. பாக்கியநாதன்	5	0	0
ஸ்ரீ ராயர் அண்டு கோ	5	0	0
ஸ்ரீ சிதம்பரமய்யர்	5	0	0
,, கே. ஏ. அய்யாக்குட்டி ஐயர்	5	0	0
,, வெ. அழகியசுந்தரம்	5	0	0
,, உ. ராமலிங்கம் ஆச்சாரி	5	0	0
,, ஏ. எம். அரிஹர பாகவதர்	5	0	0

(திருவண்ணாமலை பாரதி விழாவில், ராணிப்பேட்டை ஸ்ரீ கல்யாணராமய்யர் மூலம் வசூல் ரூ. 124க்கு விவரம்):

ஸ்ரீ டி. வி. தேவராஜ முதலியார்	21	0	0
,, ஏ. எஸ். ராமய்யர்	21	0	0
,, வி.வி.எஸ். கதிர்வேலு பிள்ளை	15	0	0
,, டி. அண்ணாமலை	10	0	0
,, எம். கே. அழகப்பா	10	0	0
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ நாயுடு	10	0	0
,, டி. கே. மன்னு பிள்ளை	5	0	0
,, அ. கயாமிநாத முதலியார்	5	0	0
,, வி. நாராயணய்யர்	5	0	0
,, கே. பாகசாமப் பிள்ளை	5	0	0
,, கோவிந்தசாமிப் பிள்ளை	5	0	0
,, எஸ். கணேச உடையார்	5	0	0
,, டி. எஸ். பத்ராசலம்	5	0	0
ஐந்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை	2	0	0

(சங்கீத வித்வான் மாயவரம் ஸ்ரீ கிருஷ்ணய்யர் மூலம் வரவு ரூபாய் 120-க்கு விவரம்):

ஸ்ரீமதி தங்கம் ஐயாத்துரை	10	0	0
,, சௌந்தரம் சங்கரன்	10	0	0
,, ஸரஸ்வதி வெங்கடராமன்	10	0	0
,, இ. மீனாக்ஷி	10	0	0
,, அல்லாடி சாரதா சுப்ரமணியம்	10	0	0
அல்லாடி ஸ்ரீமதி மீனாக்ஷி சுப்ரமணியம்	10	0	0
அல்லாடி ஸ்ரீமதி ராஜேஸ்வரி ஹரிஹரன்	10	0	0
ஸ்ரீமதி அல்லாடி மிஸ். அலமேலு	10	0	0
,, எஸ். ராஜம்	10	0	0
,, பத்மினி விஜயராகவன்	10	0	0
,, ஹேமமாலினி விஜயராகவன்	10	0	0
,, பி. சுந்தரி	5	0	0
,, பி. சரஸ்வதி	5	0	0

(16-வது லைட் கேவல்ரி (மதராஸ்) ரெஜிமெண்ட், ஸ்ரீ. எஸ். துரைராஜ் மூலம் வரவு ரூ. 104-க்கு விவரம்):

ஸ்ரீ அய்யா பிள்ளை	10	0	0
ஸ்ரீ எஸ். மூக்கய்யா	7	0	0
ஸ்ரீ எஸ். துரைராஜ்	7	0	0
ஸ்ரீ என். பாண்டியன்	5	0	0
ஸ்ரீ ஆர். எஸ். எஸ். ரெட்டி	5	0	0
ஸ்ரீ கே. கிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீ ஆர். எஸ். லிங்கம்	5	0	0
ஸ்ரீ ஏ. கிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீ வி. சுப்பையா தேவர்	5	0	0
ஸ்ரீ மதுரமுத்து	5	0	0
ஸ்ரீ எஸ். கிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீ வில்வநாதன்	5	0	0
ஸ்ரீ என். பெரியசாமி	5	0	0
ஸ்ரீ என் முனிசாமி	5	0	0
ஸ்ரீ பி. கவிசேகரமுத்து	5	0	0
ஸ்ரீ கே. பழனிசாமி	5	0	0
ஸ்ரீ எம். கிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீ வி. பாண்டுரங்கன்	5	0	0
ஸ்ரீ கந்தராஜ்	5	0	0

(பொள்ளாச்சி ஏ. வி. எம். ஏ. மில்ஸ், ஜனாப் முஹம்மது ஜான் மூலம் வரவு ரூ. 101-க்கு விபரம்):

ஜனாப் முஹம்மது ஜான்	24	0	0
ஸ்ரீ எம். பழநியப்ப கவுண்டர்	10	0	0
ஸ்ரீ ஏ.எஸ். பொன்னுசாமி நாயுடு	5	0	0
ஸ்ரீ கே. பொன்னுசாமி செட்டியார்	5	0	0
ஸ்ரீ எம். மருதமுத்து கவுண்டர்	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடை	52	0	0

(ஸ்ரீமதி எஸ். பி. சித்தம்மாள், பங்களூர், மூலம் வரவு ரூ. 94-க்கு விபரம்):

ஸ்ரீமதி எஸ். பி. சித்தம்மாள்	10	0	0
,, ரெங்கநாயகி சம்பத்குமாரன்	10	0	0
ஸ்ரீமதி சிதம்மாள்	10	0	0

ஸ்ரீமதி பட்டம்மாள் வேதாந்த அய்யங்கார்	5	0	0
ஸ்ரீமதி சாலும்மாள்	5	0	0
,, பாக்யம் கிருஷ்ணமூர்த்தி	5	0	0
,, சாரதா விஸ்வநாத்	5	0	0
,, ராமஸ்வாமி அய்யங்கார்	5	0	0
,, கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்	5	0	0
ஸ்ரீமதி சத்யபாமா கிருஷ்ணசாமி அய்யங்கார்	5	0	0
ஸ்ரீமதி அலமேலம்மாள்	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடை	24	0	0
(திருநெல்வேலி "கல்கி" ஏஜண்டு ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணன் மூலம் வரவு ரூபாய் 51—0—0க்கு விவரம்):			
ஸ்ரீ பி. குமாரசாமி, கிருஷ்ண குமார் அண்டு கோ., வீரவநல்லூர்	5	0	0
ஸ்ரீமதி ஸரோஜனி சபாபதி, வீரவநல்லூர்	5	0	0
ஸ்ரீ ஏ. ஆர். எம். வேலாயுத முதலியார், அம்பாசமுத்திரம்	5	0	0
ஸ்ரீ க. வேலு முதலியார், அம்பாசமுத்திரம்	5	0	0
ஐந்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடைகள்	31	0	0
(கல்கத்தா, ப்ரெய்த்வெயிட் பார்ன் அண்டு ஜெஸப் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி அய்யர் மூலம் வசூல் ரூ. 40-க்கு விவரம்:)			
ஸ்ரீ டி. கே. எஸ். ராவ்	10	0	0
ஸ்ரீ ஆர். கிருஷ்ணய்யர்	5	0	0
ஸ்ரீ வி. ஜெயராமய்யர்	5	0	0
ஸ்ரீ ரா. சுப்பிரமணியன்	5	0	0
ஐந்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடைகள்	15	0	0
(யாழ்ப்பாணம் ஆர். வி. ஏ. அண்டு கம்பெனி மூலம் வரவு ரூ. 37-க்கு விவரம்):			
மெஸர்ஸ் ஆர்.வி.ஏ. கம்பெனி	12	0	0
ஸ்ரீ சி. இ. செல்லத்துரை	5	0	0
ஸ்ரீ ஜீ. பெருமாள்சாமி	5	0	0
ஸ்ரீ பி. சங்கரபாண்டியன்	5	0	0
ஸ்ரீ கா. ராஜகாமாக்ஷி	5	0	0
ஸ்ரீ ச. அன்னாமலை	5	0	0
(திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீ வே. முத்துசாமி அய்யர் மூலம் வரவு ரூ. 35-க்கு விவரம்):			
ஸ்ரீ வே. முத்துசாமி அய்யர்,	10	0	0
ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர்,	5	0	0
ஸ்ரீ சுந்தரேசய்யர்,	5	0	0
ஸ்ரீ விஸ்வநாதய்யர்,	5	0	0
திருக்காட்டுப்பள்ளி, ஆசிரியர்கள் சங்கம்	5	0	0
சில்லறை வசூல்	5	0	0
(ராணிப்பேட்டை ஸ்ரீ கல்யாண ராமய்யர் மூலம் வரவு ரூ. 16-க்கு விவரம்):			
ராணிப்பேட்டை போஸ்டாபீஸ் சிப்பந்திகள்	6	0	0
ஸ்ரீ ஆர். கண்ணன்	5	0	0
ஸ்ரீ பி. ஆர். ரங்காச்சாரி, மெயில் ஏஜென்ஸி இன்ஸ்பெக்டர்	5	0	0
ஆக ரூ.	7,199	8	11
ஏற்கெனவே வசூல் ரூ.	28,278	4	0
ஆக மொத்தம் ரூ.	35,477	12	11

கோவை வசூல்

பி.எஸ்.ஜி. தர்மஸ்தாபன இன்ஸ்டிட்யூட், பீளமேடு, கோவை ரூ. 101; கோவை மோட்டார் முதலாளிகள் சங்கம் ரூ. 101; ஸ்ரீ காளு எல்லைய செட்டியார், ஜவுளி வியாபாரம் ரூ. 62; ஸ்ரீ ஆர். சேதுராமய்யர், வக்கீல், கோவை ரூ. 51; மண்டலம் வெங்கடராமையர், அட்வோகேட், கோவை, ரூ. 50; ஊழியர்கள், கோவை, கோஆபரேடிவ் பாங்க் அன்டு ஸ்டோர்ஸ் ரூ. 35-8-0; குமாஸ்தாக்கள், இண்டியன் மெர்கன்டைல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, கோவை, ரூ. 35; கோவை ஜில்லா போர்டு ஊழியர்கள் (ஸ்ரீ சி.டி. ராமநாதய்யர் மூலம் வசூல்) 29-8-0.

இருபத்தைந்து ரூபாய் கொடுத்த அன்பர்கள்: ஸ்ரீ எஸ். சதாசிவம், திருச்சி ரோடு, கோவை; ஸ்ரீ ஜி.கே. ரங்கசாமி, பாரதி பிரஸ், கோவை; ஸ்ரீ எஸ். வெங்கடராம செட்டியார், ராயல் டாக்கீஸ்; ஸ்ரீ எஸ் ஆர் பி. பொன்னுசாமி செட்டியார், கோவை; ஸ்ரீ வி. ஆர். சுந்தரமையர், ராஜான் கபே; ஸ்ரீ எஸ். ஆர். சந்திரன், ஹெட்மாஸ்டர், ஸ்ரீ. எஸ். பிரிபரேடரி ஸ்கூல்; விற்பனை ஏஜெண்டுகள், 'கல்கி', கோவை; கோவை, கோஆபரேடிவ் ஸ்டோர்ஸ் அண்டு பாங்க்; சென்னை மாகாண ஸிங்கர் ஸியூயிங் கம்பனி சிப்பந்திகள்; குமாஸ்தாக்கள் லக்ஷ்மி மில்ஸ், கோவை; லேடீஸ் கிளப், ஆர். எஸ். புரம் 21—4—0 ஸ்ரீ எஸ். துரைசாமி, தண்டாயுதபாணி பவுண்டரி, 20; கோவை கம்யூனிஸ்ட் கட்சி 18-10-0 ஸ்ரீ சி. வி. வி. வெங்கடராம செட்டியார், கோவை, 15; ஸ்ரீ ஏ. ராமலிங்கம் செட்டியார், கோவை, 15; ஸ்ரீ கே. நாராயணன், நூல் வியாபாரம் கோவை, 15; ஒரு நண்பர், 15; வெங்கடரமண பக்த ஜன சபா (வாசுகி கிருஷ்ண மூர்த்தி மூலம்) 15;

பதினைந்து ரூபாய் கொடுத்த அன்பர்கள்: ஸ்ரீ சி.எஸ். ரத்னவேலு, முனிசிபல் கவுன்ஸிலர்; ஸ்ரீ எஸ். நாராயணராவ் பிரதர்ஸ், கோவை; ஸ்ரீ கே. பெருமாள் முதலியார், கோவை; ஸ்ரீ என். ஜெயராமகிருஷ்ணன், ரங்கே கவுண்டன் வீதி; லக்ஷ்மி ரைஸ் மில் தேவாங்கப்பேட்டை; ஸ்ரீ ஆர். ஆறுமுகம் செட்டியார், தேவாங்கப் பேட்டை; ஸ்ரீ என். என். பொன்னுசாமி; ஸ்ரீ கே. எஸ். வேலாசாமி செட்டி, நூல் வியாபாரம்; ஸ்ரீ ராஜகோபால்; ஸ்ரீ என். சுப்பைய கவுண்டர், ரேஷன் ஷாப்; ஸ்ரீ என். மாதவன், மாடர்ன் இங்லிஷ் பேக்கரி; ஸ்ரீ குருபர வாலிபர் சங்கம், கோவை, 10-2-0.

பத்து ரூபாய் நன்கொடை அளித்த அன்பர்கள்: ஸ்ரீ பி. வி. முத்துசாமி செட்டியார், நூல் வியாபாரம்; ஸ்ரீ எஸ். ராஜகோபால், "தேச சேவை" ஆசிரியர், கோவை; ஸ்ரீ கே. வெங்கடசாமி, பாப்பநாயக்கன் பாளையம்; சிட்டி போட்டோ ஒர்க்ஸ், வெரைட்டி ஹால் ரோடு; ஸ்ரீ பி. பொன்னுசாமி செட்டியார், ஜவுளி வியாபாரி; ஸ்ரீ அய்யாவு செட்டியார், ராமநாதபுரம்; ஸ்ரீ பி. கோபாலகிருஷ்ணன்; ஸ்ரீ ஏ. என்.ஏ. நாயுடு பிரதர்ஸ்; ஸ்ரீ பி.என். ராமசாமி, பாப்பநாயக்கன் பாளையம்; வின்ஸெண்ட் டாக்கீஸ், கோவை; இண்டியன் கமர்ஷியல் ஸிண்டிகேட்; ஸ்ரீ கே. வி. சுவாமிநாதன், நூல் வியாபாரம்; ஸ்ரீ ஏ. பி. மாரியப்ப முதலியார் அண்டு கம்பெனி; ஸ்ரீ எஸ். ஆர். செல்லியப்ப முதலியார்; ஸ்ரீ ஏ. ஷண்முகம், சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பனி;

ஸ்ரீ ஜே. நாராயணசாமி செட்டியார், நூல் வியாபாரம்; ஸ்ரீ எஸ்.எஸ். ராஜு, முனிசிபல் கவுன்சிலர்; ஸ்ரீ ஒக்க. பி. சுப்ரமண்ய செட்டியார், முனிசிபல் கவுன்சிலர். ஸ்ரீ எஸ்.வி.எஸ். நாராயணன், இண்டியன் ஓவர்சீஸ் பாங்க், மூலம் 7-8-0; ஸ்ரீ சத்யமூர்த்தி வாசகசாலை, சூலூர், 6-0-0;

ஐந்து ரூபாய் நன்கொடை அளித்த அன்பர்கள்:— ஜி. வி. ராஜகோபால், இடிகரை; பி. பத்மநாப செட்டியார், எஸ். ஆர். லிங்கப்ப கவுடர், கோவை, சி. பி. முத்துசாமி செட்டியார், கோவை; எஸ். ரத்னம் செட்டியார், கோவை; ஆர். நடராஜன்; எ. பி. குமாரன், முனிசிபல் கவுன்சிலர்; அருணா சைக்கிள் மார்ட்; ஏ. முனியப்பன், நூல்வியாபாரம்; இந்தியன் சாரி மார்ட்; சி. ஆர். நடராஜன், பி. ஏ. பி. எல்.; ஆர். ராதாகிருஷ்ணன், இலமணி ஸ்டோர்ஸ்; ஜி. எஸ். துரைசாமி, காட்டேர், ஆட்டோமொபைல்ஸ் டி. ஏ. ஆர். ஜுவல்லரி; டி. ஆர். ஜெயராம செட்டியார், நகை வியாபாரம்; ஏ. பா. கிருஷ்ண செட்டியார், நகை வியாபாரம்; ஆர். எஸ். கருப்புசாமி செட்டியார், நகை வியாபாரம்; எஸ். விஸ்வநாதன், கே. பி. பட்டாபிராமன்; பி. பி. சந்தானகோபால செட்டி; கே. ராமகிருஷ்ண பிள்ளை; பாம்பே ஒயிட் மெட்டல் அண்டு கம்பெனி; பி ஏ. ஆர். சகுநாத் அண்டு கோ; சி எஸ். முருகன்; எஸ். பழனிசாமி; ஜெய்ஹிந்த் கபே, தேவாங்கப்பேட்டை; எஸ். ஓ. உத்தமன்; கி. எம். அப்துல் கபூர்; கே. ஆர். ராமசாமி, பாப்பநாய்க்கன் பாளையம்; பி. சுப்பையா, யுனைடெட் இந்தியா லைப் இன்ஷூரன்ஸ்கம்பெனி; கி. பி. சுப்பையன், பாப்பம்பட்டி; டி. வி. நடராஜன், திரு கிருஷ்ண பவன்; சி. ஷண்முகம் அண்டு கோ. ராஜுவீதி; சி. ஏ. வெங்கடாசலம்; எஸ். கருப்பண்ண கவுண்டர்; டி. நாசப்ப செட்டியார், மளிகை; வி. ராமகிருஷ்ண நாயுடு, ஆவாரம்பாளையம்; கோயமுத்தூர் பிரீமியர் காச்பரேஷன்; டி. பி. அட்டிமுத்துக் கவுண்டர், ஆலந்துறை; எஸ். எஸ். ஷண்முக நாடார்; ஏ. சென்னே கவுடர்; குகன் பிரஸ்; எம். வி. ஏ. வி. ஜு. அண்டு கோ.; எம். ஆர். ராஜு அய்யர் எம். வி.; நாகையா; வீரபத்திர கவுண்டர், வீரப்பாண்டிப்புதூர்; டி. சி. ஜுபிலியாப்பிள்ஸ், ரேஷன் ஷாப்; மணி; வி. எம். அபிராம செட்டியார்; கே. என். கிருஷ்ணசாமி; ஓர் பாரதி அபிமானி; கோவை தானிய உடைப்பாளர் வியாபாரிகள் சங்கம்; டி. எஸ். கோபால கிருஷ்ணன்; வி. ஆர். வெங்கடாசல முதலியார், விஜயமங்கலம்; வெஸ்ட் எண்ட் ஜுனியன், கோவை; ராமமூர்த்தி, இண்டியன் பாங்க்; உண்டி வசூல் 7-4-0; ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள் 84-12-0

பொதுக் கூட்டத்தில் வசூல் ரூ.	170	14	0
ஆக மொத்தம் ரூ.	1710	6	0
விளம்பரப் பொதுக்கூட்டச் செலவு ரூ.	123	14	0
நிகர வரவு ரூ.	1586	8	0

திறப்பு விழா நிதி

ஸ்ரீ ஏ. வி. மெய்யப்ப செட்டியார், ஏ. வி. எம். ஸ்டுடியோஸ், காரைக்குடி	3101	0	0
எட்டயபுரம் மகாராஜா	3000	0	0
நவாப் ராஜமாணிக்கம், (ஐயப்பன் நாடக வசூல்)	1951	0	0
கும்பகோணம் மகாஜனங்கள்	1351	0	0
மயிலை சங்கீத சபையார், சென்னை	1001	0	0
குமாரராஜா முத்தையா செட்டியார், சென்னை	1000	0	0
ஸ்ரீ என். எம். ஆர். வெங்கடகிருஷ்ணய்யர், மதுரை	1000	0	0
டி. வி. சுந்தரமய்யங்கார் அண் ஸன்ஸ், சென்னை	1000	0	0
ஸ்ரீ ராமநாத் கோயங்கா, சென்னை	1000	0	0
அய்யம்பேட்டை மகாஜனங்கள்	651	0	0
ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீனிவாசன், சென்னை	500	0	0
ராமநாதபுரம் ராஜா	500	0	0
ஸ்ரீ கே. ஆர். சுந்தரமய்யர்—கே. சஸ்வரய்யர், ராயல் ஸைகிள் கம்பெனி, சென்னை	500	0	0
ஸ்ரீ ஏ. எம். முருகப்ப செட்டியார், சென்னை	500	0	0
ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர், இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட், சென்னை	500	0	0
ஸ்ரீ எம். கே. கிருஷ்ண செட்டியார், அசோகா பாக்டரி, கோயமுத்தூர்	251	0	0
ஸ்ரீ கே. சீதாராம ராவ், புரொப்ரைட்டர், மாடர்ன்கேப், சென்னை	250	0	0
ஸ்ரீ கே. ஆர். ராமசாமி, உரிமையாளர், கிருஷ்ணன் நாடகசபை, தஞ்சாவூர்	250	0	0
ஸ்ரீ எம். சோமசுந்தரம், ஜுபிடர் பிக்சர்ஸ், கோயமுத்தூர்	200	0	0
அ. ச. சங்கரநாராயணஞ் செட்டியார், க. மு. தங்கமுடியா பிள்ளை அண் கோ, வெள்ளிபாத்திர வியாபாரம், ஸ்ரீவில்லிபுத்தூர்	200	0	0
ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை, தஞ்சாவூர்	101	0	0
ஸ்ரீ ஏ.எம்.ஏ. ஆர். சோமநாதன் செட்டியார், தேவகோட்டை	101	0	0
ஸ்ரீ ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமி நாடார், கோவில்பட்டி	101	0	0
ஸ்ரீ கே. எஸ். நாராயண அய்யங்கார், சென்னை	100	0	0
ஸ்ரீ டபிள்யூ. பார்த்தசாரதி, சென்னை	100	0	0
ஸ்ரீ எஸ். பார்த்தசாரதி, சென்னை	100	0	0
ஸ்ரீ யு. எஸ். ராமசந்திரம், சென்னை	100	0	0
ஸ்ரீ கே. வெங்கடராவ், சென்னை	100	0	0
டாக்டர் பி. என். ராமசுப்ரமணியம், மதுரை	100	0	0
ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார், சென்னை	100	0	0

ஸ்ரீ எஸ். என். எஸ். மணி, திருச்சி	100	0	0
ஸ்ரீ எஸ். ஆர். ஏ. எம். அண்ணா மலைச் செட்டியார், ட்ரேரஜன் கம்பெனி, சென்னை	100	0	0
ஸ்ரீ டி. பெருமாள்சாமி செட்டியார் எம். எஸ். டி., சென்னை	100	0	0
சர்தார் ஏ. வேதரத்னம் எம். எல். ஏ., வேதாரண்யம்	100	0	0
ஸ்ரீ ச. முத்துச்சாமி செட்டியார் அண் சன்ஸ், நகை வியாபாரம், மதுரை	100	0	0
ஸ்ரீ ஏ. எஸ். எஸ். எம். சோமசுந்தரம் செட்டியார் அண் கோ, நகை வியாபாரம், மதுரை	100	0	0
பி. சதார் சிங், மதுரை	100	0	0
செல். அழகுசுந்தரம் செட்டியார், மகாலக்ஷ்மி மில், பசுமலை	100	0	0
சரி அண் ராம், மதுரை	100	0	0
ஸ்ரீ கருமுத்து தியாகராஜ செட்டியார், மீனாக்ஷி மில், மதுரை	100	0	0
ஸ்ரீ ப. டி. மு. கணபதி அய்யர், மதுரை	100	0	0
ஸ்ரீ என். எஸ். அருணாசலஞ் செட்டியார், நகை வியாபாரம், மதுரை	100	0	0
ஸ்ரீ டி. வெசங்கரன், ஐ. ஸி. எஸ்., சென்னை	100	0	0
ஸ்ரீ என். கந்தசாமி பிள்ளை, ப்ரகதி பிக்சர்ஸ், சென்னை	100	0	0
சங்கீதரத்ன ஸ்ரீ டி. சௌடய்யா, மைசூர்	100	0	0
மெஸர்ஸ் சித்ரா அண்டு கோ., சென்னை	100	0	0
மெஸர்ஸ் வி. எஸ். கிருஷ்ணசாமி அண்டு கோ., சென்னை	100	0	0
மெஸர்ஸ் சோமயாஜுலு அண்டு கம்பெனி, சென்னை	100	0	0
மெஸர்ஸ் டாரஸ் அண்டு கம்பெனி, சென்னை	100	0	0
அல்லாடி ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர், மயிலாப்பூர்	100	0	0
ஸ்ரீ எம். சுப்பராய அய்யர், சென்னை	100	0	0
ஜஸ்டிஸ் வி. தியாகராஜன், சென்னை	100	0	0
ஜஸ்டிஸ் பி. வி. ராஜமன்னார், சென்னை	100	0	0
ஜஸ்டிஸ் என். சந்திரசேகரய்யர் சென்னை	50	0	0
"சக்தி" பிலிம் டைரெக்டர், சென்னை	100	0	0
ஸ்ரீ டி. மகாலிங்கம் ஆசாரி, சாத்தூர்	25	0	0
ஸ்ரீ டி. நாகலிங்கம் செட்டியார், கோல்டு புரோக்கர், மதுரை	25	0	0
ஸ்ரீ வி. சுந்தரம், மதுரை	25	0	0
ஸ்ரீ ஏ. வைரவன் செட்டியார் அண்டு சன்ஸ், மதுரை	25	0	0
ஸ்ரீ இ ஏ.எஸ்.எஸ்.என். சோமசுந்தரம் செட்டியார் அண்டு கம்பெனி, மதுரை	25	0	0
ஸ்ரீ பெ.மு..அ.முத்துசாமி செட்டியார், மதுரை	25	0	0
ஸ்ரீ என்.கே.என். சொக்கலிங்கம் செட்டியார், மதுரை	25	0	0
ஸ்ரீ கே.ராமலிங்கம் செட்டியார், மதுரை	25	0	0
ஸ்ரீ வொரஜி சேட், மதுரை	25	0	0
ஸ்ரீ சிரங்கம் சேட், மதுரை	25	0	0
ஸ்ரீ பி. கே. இராமாச்சாரி, மதுரை	25	0	0
ஸ்ரீ வெ.ர.பா.சி.நு. பாண்டியன் செட்டியார் அண்டு கம்பெனி, மதுரை	25	0	0
ஸ்ரீ வி. பழனி செட்டியார், விருதுநகர்	25	0	0
ஆக ரூ.	22,484	0	0

இது சகஜம்!





எட்டயபுரத்தில் 13-10-47ல் மகாகவி பாரதியார் ஞாபகார்த்த மண்டபத்தைத் திறந்து வைப்பதற்காகக் கல்கத்தாவிலிருந்து விமான மார்க்கமாகவும் ரயில் மார்க்கமாகவும் வரும் போது வங்காள கவர்னர் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



அமர கவி

★

ஊரறிய நாடறிய உண்மையெல் லாம்
ஒருவரையும் அஞ்சாமல் எடுத்துரைத் தோன்
ஆரமுதம் அனையகவி பாடித்தந் தோன்
அமரகவி யென்றெவரும் புகழப்பெற் றோன்
சீருயரும் தமிழ்மக்கள் செய்தவத் தால்
தென்னாடு சிறக்கவந்த சுப்ரமண் ய
பாரதியாரின் பெயர்போற்றி ஏத்துவோ மே
பாமாலை புனைந்தவர்க்குச் சாத்துவோ மே.

★

பாரதி மண்டபம்

★

தேவருமே யிங்குவந்து செந்தமிழைக் கற்றினிய
பாவலராய் வாழமனம் பற்றுவரே—பூவுலகில்
வானுயரும் பாரதியார் மண்டபத்தை எட்டப்பன்
மாநகரில் கண்டு மகிழ்ந்து.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை



பாரதி  பாட்டு

சுப்ரமண்ய பாரதியை நினைத்திட்டாலும்
சுதந்தரத்தின் ஆவேசம் சுறுக்கென் றேறும்;
இப்ரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும்;
'இந்தியன் நான்' என்றிடும்நல் லிறுமாப் புண்டாம்;
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும்
ஒப்பரிய 'தமிழன்' என்ற உவகை ஊறும்;
உள்ளமெல்லாம் துள்ளியெழும் ஊக்கமுண்டாம்

படித்தறியா மிகஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தோளிலிருந்த கந்தலுடைச் சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென் றார்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லார்.

எங்கேயோ எட்டாத உலகம் தம்மில்
இருப்பரென நாம் படித்த தெய்வம் எல்லாம்
இங்கேயே எம்முடனே எவரும் காண
ஏழைமக்கள் குடிசையிலும் இருப்ப தாக்கும்
சிங்காரப் புதுக்கவிகள் பலவும் பாடித்
தேவரெல்லாம் தமிழ்நாட்டில் திரியச்செய்தோன்
மங்காதாம் பாரதியார் நினைவைப் போற்றி
மறவாமல் தமிழ்நாட்டார் வாழ்த்த வேண்டும்.

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை







பல்லவி

நவமும் பலித்ததம்மா—நமது
தாயின் விலங்குகள் தெறித்து விழுந்தன! (நவ)

அநுபல்லவி


புவனம் வியந்திட அமுதத் தமிழினில்
நவநவமாய்க் கவி அருளிய புலவரின் (நவ)

சரணம்

வீர சுதந்திரம் வேண்டும் என்றார் இங்கு
வெற்றி கண்டு நமக்கு: கொட்டு கென்றார் முரசு!
மாரதர் வாழ்ந்த நம் பாரத பூமியின்
மன்னர் நாமேயென்று சொன்ன பாரதியின் (நவ)

நாவலர் பாவலர் வாழ்த்தி மகிழ்ந்தனர்
நானிலம் எங்கும் நம் கீர்த்தி உயர்ந்தது
தேவரும் மூவரும் வானில் வலம் வந்து
செஞ்சொற் கவிஞரை அஞ்சலி செய்தனர்! (நவ)

மணியம்


1. தெய்வத் தமிழ் நாட்டினிலே வெண்ணிலாவே—நாங்கள்
திரமின்றிப் பேதையர்போல் வாழ்ந்திருந்தோம்—ஏதும்
செய்வதறியா திருந்தபோ தினிலே—ஒரு
சிங்கநாதம் கேட்டெழுந்தோம் வெண்ணிலாவே!
2. இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார்—அந்த
இழிவும் ஒரு பெருமையென்று எண்ணிவாழ்ந்தோம்—நல்ல
அறிவொளியால் இருளகற்ற ஒருவர் வந்தார்—இதை
அமரர்நாடென் றறிந்தோம் வெண்ணிலாவே!
3. கங்கையெனப் பொங்கிவரும் நன் தமிழினில்—இன்பக்
கவிதைபல புனைந்தளித்தார் வெண்ணிலாவே!—வெற்றிச்
சங்கம்ஊதி முரசறைந்து எழுக என்றார்—இந்தத்
தரணியில் நமக்கு நிகர் இல்லை யென்றார்
4. கவியரசர் பாரதியின் கவிதையின்பம்—உந்தன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே!—இந்தப்
புவியில் நீயும் தமிழன் என்னப் பிறந்ததுண்டோ?—அவ
புதுமைக் கவி மது அருந்தி மகிழ்ந்ததுண்டோ?





13—10—47ல் நடைபெறும் பாரதி மண்டபத் திறப்பு விழாவின் வரவேற்பு சபைத் தலைவர் எட்டயபுரம் சமஸ்தான மகாராஜா

பாணிக்கிரகணம்

கே. எஸ். எஸ். ராகவன்



பதினேழாம் அத்தியாயம்

பிரிந்தவர் கூடினர்!

இந்தத் தடவை மூன்று மாதம், ஆறு மாதம் என்று தண்டனை கொடுத்துச் சர்க்கார் சாரங்கனை அவமதிக்க விரும்பவில்லை. "நாங்கள் இஷ்டப்பட்டுப் போகலாம் என்று சொன்னபோதுதான் நீ போக வேண்டும்" என்று அவனை ஒரு 'டிடெனு'வாக ஆக்கிவிட்டார்கள். அதற்குத் தகுந்தாற்போல்தான் அவனுக்கு மரியாதையும் கிடைத்தது. காசிபுரத்தில் தினப் பத்திரிகைகள் வரவழைப்பதற்கோ, வெளி மனிதர்கள் வந்து பார்த்துவிட்டுப் போவதற்கோ வசதிகள் கிடையாது. பாலூர் சிறையில் சாரங்கன் 'பி' கிளாஸில் இருந்தான். தினப் பத்திரிகை வந்தது. வெளியில் இருப்பவர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதற்கும் அனுமதி கொடுத்தார்கள்.

சாரங்கன் ஜெயிலிலிருந்தபடியே வெளி உலக சமாசாரங்களை ஊக்கமாகக் கவனித்து வந்தான். தலைவர்கள் விடுதலையடைந்ததைப் பற்றி ஒரு விதத்தில் சந்தோஷம் அடைந்தாலும், இன்னொரு விதத்தில் அது இயக்கத்தின் தோல்விக்கு அடையாளம் என்று அவன் உள்ளறிவு சொல்லிற்று. அதற்கேற்றாற்போல் ஜயப்பிரகாஷின் வார்த்தைகள் வேறு அவனுடைய ஞாபகத்துக்கு வந்தன. அது, "ஜவாஹர்லால் ஜெயிலை விட்டு வெளியில் வந்தவுடன் அழகாக அறிக்கைகள் விட்டு, நம் கக்ஷியின் நியாயத்தை வெளி உலகத்துக்கு எடுத்துச் சொல்வார். அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் பத்திரிகை நிருபர்களும் அதைப் பத்தி பத்தியாகத் தங்கள் பத்திரிகைகளுக்குத் தந்தி அடிப்பார்கள். ஆனால், நம் இயக்கத்தைப் பொறுத்த வரையில் ஜவாஹர்லால் வெளியில் இருப்பதைவிட ஜெயிலில் இருப்பதுதான் நல்லது. ஜவாஹர்லால் உள்ளேயிருக்கும் போது 'இந்தியாவில் இப்போது சாந்தி நிலவுகிறது' என்று பிரிட்டிஷ் சர்க்காரால் பொய் சொல்ல முடியாது!" என்பதுதான்.

ஆனாலும் விடுதலையடைந்த தலைவர்களின் பிரசங்கங்களும், அறிக்கைகளும் சாரங்கனுக்கு உற்சாகத்தை அளித்தன. ஜவாஹர்லால் பாலியாவைப் பற்றிச் சொன்ன வார்த்தைகள் சிவனேரிக்கும் பொருந்தும் என்று சாரங்கன் அகமகிழ்ந்தான். "ஆகஸ்ட் இயக்கத்தின்போது உள்ளே ஓடி ஒளிந்தவர்கள் மானமிழந்தவர்கள்; எலிகளுக்குச் சமானமானவர்கள்!"



என்று சர்தார் பட்டேல் சொன்னதும், மௌலானா ஆஸாத் இயக்கத்தில் உயிர் துறந்தவர்களைப் பற்றிச் சொன்ன மணி மணியான வார்த்தைகளும் சாரங்கனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தந்தன. தனி சர்க்கார் செய்த காரியங்களைக் காங்கிரஸ் ஆமோதிப்பதுடன், போற்றவும் செய்யும் என்று சாரங்கன் நம்பினான்.

ஸிம்லா மகாநாடு முறிந்ததைப் பற்றிச் சாரங்கனுக்கு உள்ளூர சந்தோஷம்தான். ஜின்னாவுக்கு நமது தலைவர்கள் அதிகம் விட்டுக் கொடுத்து விட்டார்கள் என்று அவன் பயந்தான். தவிர, பாகிஸ்தான் நம் முஸ்லிம் சகோதரர்களுக்குத் தீமையே விளைவிக்குமென்றும், அதனால் ஏற்படக் கூடிய விபரீதங்களை எடுத்துச் சொன்னால், அவர்கள் ஜின்னாவின் வார்த்தைகளைக் கேட்டு ஏமாற மாட்டார்களென்றும் மனப் பூர்வமாக அவன் நம்பினான். "அரசியலுக்கும் மதத்துக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் வேண்டுவது உடுக்கத் துணியும், இருக்க வீடும், சாப்பிடுவதற்கு உணவும், நாகரிக வாழ்க்கைக்கு வேண்டிய மற்ற வசதிகளும்தானே? இந்த வாழ்க்கைப் போரில் ஹிந்துவானால் என்ன, முஸ்லிமானால் என்ன? உங்கள் எதிரிகள் ஏழை ஹிந்துக்களல்ல; உங்களை ஏமாற்றி, உங்களிடம் வேலை வாங்கி, பிச்சைக் கூலி உங்களுக்குக் கொடுத்து விட்டு, கொள்ளை லாபம் சம்பாதித்துச் சுகமாக மெத்தையில் படுத்துத் தூங்கும் முதலாளிகள் தான் உங்கள் எதிரிகள்! அவர்கள் ஹிந்துவாயிருந்தாலென்ன, முஸ்லிமாயிருந்தாலென்ன? வாருங்கள், அவர்களிடமிருக்கும் ஆதிக்யத்தை நாம் பிடுங்குவோம்!" என்று ஏழை முஸ்லிம்களிடம் பிரசாரம் செய்தால் பாகிஸ்தான் பறந்து விடும் என்று சாரங்கன் நினைத்தான்.

ஆனால் ஜின்னாவின் கை ஓங்கிக் கொண்டு தான் இருந்தது. அத்துடன், நாட்டில் அங்கங்கே கலவரங்களும் ஏற்பட்டன.

"ஐயோ! வங்காளப் பஞ்சம் மக்களைக் கொல்லும்போது, தன்னால் சாகப்போகிறவன் ஹிந்துவா முஸ்லிமா என்று பார்த்ததா? பசியும் பிணியும் அல்லவா நமது சத்ருக்கள்! அவைகளையல்லவா நாம் எதிர்க்க வேண்டும்? இப்படி நமது ஜனங்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொன்னுகிறார்களே? இதை எடுத்துச் சொல்வார் கிடையாதா?" என்று சிறையில் அவன் வருந்தாத நாள் கிடையாது.

இப்படியாகப் பதினெட்டு மாதங்களுக்கு மேல் அவன் சிறையில் கழித்து விட்டான். அதற்குள் நாட்டில் எவ்வளவோ மாறுதல்கள்! பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூது கோஷ்டி வந்து சென்றுவிட்டது. அரசியல் நிர்ணய சபை, லீக் முட்டுக் கட்டையையும் பொருட்படுத்தாமல் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தது. இவைகளைப் பற்றிப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைச் சாரங்கன் ஆவலுடன் படித்துக் கொண்டிருந்தான். ஆனால், "1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள் நாங்கள் கடையைக் கட்டிவிடப் போகிறோம். அப்புறம் இந்தியாவை ஆள்வது உங்கள் பொறுப்பு!" என்று அட்லி துரை சொல்லியதைப் படித்த பிறகு, சாரங்கனால் சிறையில் இருக்கவே முடியவில்லை. "ஆஹா! நமது கனவு உண்மையாகப் போகிறதா? நாமும் சுயராஜ்யம் அடையப் போகிறோமா? இந்தச் சமயத்தில் நாம் வெளியிலிருந்து அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று அவன் தவியாய்த் தவித்தான். "சர்க்காருக்கு மனுச் செய்து கொண்டாலென்ன? மாகாணக்

களில் நம் மந்திரிகள் தானே ஆள்கிறார்கள்?" என்றுகூட அவன் நினைத்தான்.

ஆனால் விடுதலை அவன் எதிர்பார்க்காமலிருக்கும்போதே கிடைத்தது. அதைவிட அவன் மனதுக்கு அமைதியைத் தந்தது ஊரிலிருந்து வந்த ஒரு கடிதம். அதை அவன் அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். பூமாதான் எழுதியிருந்தாள்!

"நான் இந்தக் கடிதத்தை எழுதலாமா வேண்டாமா என்று யோசனை செய்ததிலேயே இத்தனை நாட்களாகி விட்டன. இப்போது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுதுகிறேன். குற்றமானால் மன்னிக்கவும்.

நீங்கள் என்னைவிட்டுப் போனதைப்பற்றி எனக்குக் கோபம் இல்லை. என்பேரில்தான் தப்பு இருக்கும் என்று நான் அப்போதே நினைத்தேன். 'நம்மை ஒரு வார்த்தை கேட்காமல் போய்விட்டாரே!' என்று மட்டும் கொஞ்சம் வருத்தப்பட்டேன். ராஜு வந்து சொன்ன பிறகுதான் எனக்கு விஷயம் புரிந்தது. அதைக் கேட்டு எனக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. ராஜு சொன்னது போல் குழந்தையாயிருக்கும்போது விளையாட்டாக நடந்த ஒரு சமாசாரத்துக்காக என்னை எவ்வளவு தூரம் தண்டிக்கலாம்? நான் உங்கள் மனைவியாயிருப்பதற்குத் தகுதியில்லாதவள்தான். உங்கள் புகழென்ன, கீர்த்தியென்ன, அதைப் பற்றி நினைக்கக்கூட நான் யோக்யதையில்லாதவள்தான். உங்களைப் போன்றவர்கள் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்படுவார்கள். நீங்கள் என்னைப் புறக்கணித்து விட்டாலும் அது ஏதோ என் துரதிருஷ்டம் என்றுதான் நான் நினைப்பேன். நான் கேட்பது இதுதான். நான் உங்களை ஒரு தடவையாவது பார்க்க நீங்கள் சம்மதிக்க வேண்டும். மற்றபடி. உங்களிடம் வேறு எதையும் கேட்க எனக்கு என்ன பாத்யதை இருக்கிறது?

வேணும்.
உங்கள் அடியாள்
பூமா."

* * *

சாரங்கன் விடுதலையடைந்ததும் நேரே ஊருக்குப் போனான். அங்கும் எவ்வளவோ மாறுதல்கள்! அப்பாவும் அம்மாவும் வயதாலும் கவலையாலும் கிழவர்களாகி விட்டார்கள். பூமா கையில்தான் வீட்டு நிர்வாகம் முழுவதும் இருந்தது. "தங்க விக்கிரகம் மாதிரி இருக்கிற அகமுடையாளை விட்டு விட்டுப் போக உனக்கு எப்படித்தான் மனசு வந்ததோ? போனது போகட்டும்; இனி மேலாவது வீட்டை வாசலைப் பார்த்துக் கொண்டு இரு. வேலையும் வேண்டாம், ஜெயிலும் வேண்டாம்!" என்றாள் அவனுடைய அம்மா.

ஆனால் சாரங்கனால் சும்மா இருக்க முடியுமா? "இன்னும் ஒரு வருஷத்தில் சுதந்திரம். இன்னமும் நம் ஜனங்கள் தூங்குகிறார்களே!" என்று வருந்தினான்.



பழமாங்குடி கிராமத்தை அடுத்ததுதான் கடையாயல் என்ற 'டவுன்'. அந்தப் பக்கத்துக் காங்கிரஸ் கமிட்டியும் அந்த ஊரில்தான் இருந்தது. சாரங்கன் அங்கு சென்றவுடன் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் அவனை அறிமுகம் செய்து வைத்தார் கமிட்டியின் தலைவர். பிறகு, பேச்சு நாட்டு நிலைமையைப் பற்றி வந்தது.

"இப்போதுதான் நம் வேலையை மும்முரமாக ஆரம்பிக்க வேண்டும். கொஞ்சம் அசந்து போனால் பிரிட்டிஷ்காரர்கள் போனவுடன் பணமூட்டை சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்துவிடும். பிறகு வெள்ளைக்காரனே தேவலை என்று சொல்லும்படி ஆகிவிடும். நம்மவர்கள் தயை தாட்சண்யம் காண்பிக்க மாட்டார்கள். பணத்துக்காக எதையும் செய்வார்கள். பாருங்களேன், கதரில் குல்லாயைப் போட்டுக் கொண்டு 'காங்கிரஸுக்கு ஜே!' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் சண்டையில் 'காண்ட்ராக்ட்' எடுத்து எவ்வளவு பணம் சுரண்டி விட்டார்கள்! நிஜமாக 'ப்ளாக் மார்க்கெட்' நிர்வாகம் யார் கையிலிருக்கிறது? இதையெல்லாம் நான் சொல்ல வேண்டியதில்லை!" என்றான் சாரங்கன்.

"ஸார் என்ன, யோசனையிலேயோ?" என்று கேட்டார் ஒருவர்.

"அவர் பேசுவதிலிருந்து கம்யூனிஸ்ட் மாதிரிதான் தோன்றுகிறது!" என்றார் இன்னொருவர்.

நடுவயது என்று சொல்லக்கூடிய ஒருவர் சிரித்துக்கொண்டே, "உங்களுக்கு உலக அனுபவம் போதாது, ஸார்! நாங்களும் நீங்கள் பேசுகிற மாதிரிதான் ஒரு காலத்தில் பேசினோம். கள்ள மார்க்கெட் இல்லாமற் போனால் குடிக்கிற காப்பிக்கு நமக்குச் சர்க்கரை கிடைக்குமா? பஸ்ஸில் தான் இடம் இருக்குமா? பணக்காரர்களைக் குறைகூறி நாம் என்ன ஸார் பண்ணுகிறது? அவர்கள் தயவு நமக்கு எப்போதும் வேண்டும்; ஸார்!......இதெல்லாம் இருக்கட்டும். ஜில்லா போர்டு எலக்ஷன் வருது. நீங்கள் சொன்னால் மதிப்பு வைப்பார்கள். நமக்காக 'பிராபகேண்டா' செய்கிறீர்களா?" என்று கேட்டார்.

சாரங்கனுக்குத் தனக்கு அது இடமில்லை என்று பட்டது. சிவனேரிக்குச் சென்று நண்பர்களைப் பார்த்து அவர்கள் மனநிலை எப்படி இருக்கிறதென்று அறிய ஆவல் கொண்டான்.

சிவனேரியில் அவனுக்கு அமோகமான வரவேற்பு. எல்லாம் ராஜுவின் ஏற்பாடு தான். அன்றைய சாயந்திரம் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. சாரங்கன் தான் முக்கிய பிரசங்கி. அவன் பேச எழுந்திருந்த போது 'சலசல' வென்று தூற்றல் போட்டது. கூட்டத்தில் சிலர் எழுந்திருக்க முயற்சித்தார்கள்.

"சகோதர சகோதரிகளே! இந்த மழைத் தூற்றல் எனக்கு ஒரு புண்யாத்மாவை நினைவூட்டுகிறது. கிருஷ்ணகுமாரியும் நானும் இவ்வூருக்கு வந்தபோது மழை பெய்தது. அந்த மழைக்குப் பயந்து நாங்கள் திரும்பியிருந்தால்......" என்று சாரங்கன் சொன்னதும், எழுந்தவர்கள் வெட்கித் தலை குனிந்து திரும்பவும் உட்கார்ந்தார்கள்.

சாரங்கன் மேலும் பேசினான்:

"ஆனால் இன்று நான், நாங்கள் செய்த வேலையைப் பற்றிப் பெருமை யடித்துக் கொள்ள வரவில்லை. தேவி இன்று இருந்தால் நாம் செய்ததை விட, செய்யப் போவதுதான் மிகவும் முக்கியமானது என்று எடுத்துக் காட்டியிருப்பார். ஆனால் அவர் போனாலென்ன? அவர் சக்தி தான் நம்மை ஓட்டுகிறது ...... இன்னும் ஒரு வருஷத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நம்மை விட்டு ஓடப் போகிறார்கள். நமக்குச் சுயராஜ்யம் கிடைக்கப் போகிறது. அதை ஏற்றுக்கொள்ள நாம் தகுதி யுடையவர்களாயிருக்கிறோமா? நெஞ்சைத் தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள்! எனக்கு வெட்கமாயிருக்கிறது சொல்லிக் கொள்ள.........நாம் இன்று இருக்கும் நிலைமையில் அதற்கு அருகதை யற்றவர்கள்தான். வெளியில் பசியும் பிணியும் மக்களை வாட்டுகின்றன. அதைக் கண்டு கூட நான் வருந்தவில்லை. ஆனால் இந்தப் பசியையும் பிணியையும் உபயோகித்து லட்சம் லட்சமாக மூட்டை கட்டுகிறார்களே, அவர்களை நினைத்தால்தான் 'நானும் ஒரு இந்தியன்' என்று சொல்லிக் கொள்ள என்னுடைய நாக்கு கூசுகிறது. ஆனால் நம் நாடு இப்படியேதான் எப்பொழுதும் இருக்குமா? ஒருநாளும் இல்லை. சுயநல வாதிகள் கை இன்று ஓங்கியிருக்கலாம். ஆனால் வெகு சீக்கிரம் அவர்கள் மண்ணோடு மண்ணாகப் போய் விடுவார்கள். வரப்போகும் இந்தியாவில் — இன்று விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் சிருஷ்டிக்கப் போகும் இந்தியாவில்— இந்தப் பேய்களுக்கு இடமில்லை. பத்து வருஷத்தில் நம் பாரத நாடு மகோன்னதமான நிலைமையை அடையப்போகிறது. அத்தகைய இந்தியாவை நாம் காண வேண்டுமானால் இன்று தூங்கலாமா? வாருங்கள், உங்களுக்கு வேலை இருக்கிறது. அதில் புகழ் இல்லை, பணம் இல்லை. ஆனால் வரப்போகும் நம் குழந்தைகள் நம்மை வாழ்த்துவார்கள். நன்ருதயத்திலிருந்து வரும் அவர்கள் நன்றியே நமக்குப் போதுமான வெகுமதி!"

உணர்ச்சி ததும்ப அவன் சொன்ன சொற்களை வானர சேனை வீரர்களும், மற்றவர்களும் சந்தோஷத்துடன் ஆமோதித்தார்கள்.

அன்றே தனி சர்க்கார் மறு பிறப்பு எடுத்தது. ஆனால் இன்று அவர்கள் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதில் தங்கள் காலத்தை வீணாக்கவில்லை. பேராசைப் பேயையும் சுயநலப் பிசாசையும் ஒழித்துக் கட்டுவதிலேயே அவர்கள் தங்கள் முழு பலத்தையும் உற்சாகத்தோடு உபயோகித்தார்கள்.

தன்னைச் சேர்ந்த வாலிபர்களின் பேச்சிலும் செயலிலும் இருந்த உறுதி, சாரங்கனுக்கு வரப்போகும் சுதந்திர இந்தியாவில் நம்பிக்கை கொள்ள இடமளித்தது.

முற்றும்

வித்தகச் சித்தன் பாரதி

நாமக்கல் கவிஞர்

மகாகவி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி ஒரு 'வித்தகச் சித்தன்.' தனிப் பெரும் தவசியான தாயுமானவர் வாக்கால் ஒரு 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தன்.'

பாரதி 'விடுதலை வேட்கை'யை விதைக்க வந்தவன் மட்டும் அல்ல; சுதந்திர வாழ்க்கையைச் சொல்லவந்தவன் மட்டு மல்ல; அன்னிய ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதற்கான ஆவேசத்தை மட்டும் கிளப்ப வந்தவன் அல்ல; பெண் இனத்துக்குப் பெருமை தர மட்டும் பாடினவன் அல்ல; ஆண்களுக்கு ஆற்றல் உண்டாக்க மட்டும் ஆர்வம் காட்டினவன் அல்ல; மேல் நாட்டு விஞ்ஞானக் கலைகளையும் விளக்கக்கூடிய புதுப்புது அறிவுகளைத் தமிழ் மொழியில் புகுத்த வேண்டும் என்பதைப் புகட்ட வந்தவன் மட்டும் அல்ல; பின் எதற்காக வந்தவன் பாரதி என்றால், மனித வாழ்க்கையில் இயல்பாக உள்ள துன்பங்களை மாற்ற வல்லதாக, இந்திய ஞானிகள் கணக்குகளுக்கு எட்டாத காலம் தொட்டுச் சேகரித்து வைத்துப்போன நல்லறிவுகளைப் புதுப்புது முறைகளில் பாடி, நம்முடைய நாட்டின் மிக உயர்ந்த நாகரிகத்தைக் காக்கவந்த ஞானக் களஞ்சியம் பாரதிப் புலவன். அகில மக்களுக்கும் அன்பு தவறாத ஆண்மையை அறிவிக்க வந்த அமரன் பாரதி; தமிழ் மொழியைத் தமிழாக்க வந்த தவப் புலவன் பாரதி; தமிழர்கள் மறந்து விட்ட தமிழ் — இன்பத்தை மீட்டும் உணர்த்தப் பிறந்த ஒப்பிலாப் புலவன் பாரதி!

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!"

என்றும்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்றும்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை!"

என்றும் பாட வேறு எந்தப் புலவனுக்குத் தைரியம் இருந்தது?

பிற்காலத்திய புலவர்கள் தமிழ் மொழியின் எதுகை, மோனை, யாப்பு என்ற இலக்கணத்தைத்தான் கண்டார்கள். தமிழுக்கு உள்ள உண்மையான ஏற்றத்தை அவர்கள் காணவில்லை. பணக்காரர்களைப் புகழ்ந்து பாடி, பரிசு பெற்று, உண்டு உடுத்து வெறும் சிற்றின்ப வாழ்க்கையில் சிக்கித் தவித்து, நாளுக்கு நாள் மங்கிக் கொண்டு வந்த தமிழ்ப் புலமைக்கு விடுதலை காட்டி வீறு கொள்ளச் செய்து தமிழ் மொழியை வாழ வைத்தவன் பாரதி! எல்லாப் புலவர்களும் 'வாழி' பாடியிருக்கிறார்கள். பாரதி பாடின 'வாழி'யைப் பாருங்கள்:

"வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!"

என்று 'வாழி'யை ஆரம்பித்த வேறொரு புலவனைக் காட்டுங்கள். இப்படி ஆரம்பித்த 'வாழி'ப் பாட்டின் அர்த்தத்தைக் கவனிக்க வேண்டும்:

"செந்தமிழ் வாழ்க: நல்ல தமிழர்கள் வாழ்க:
அழகு மிகுந்த பாரததேசம் வாழ்க!"

என்பதே இப் பாட்டின் அர்த்தம். தமிழ் மொழி வாழ வேண்டும். அது வாழ்ந்தால் தான் தமிழர்கள் நற்குணமுள்ளவர்களாக வாழ முடியும். அப்படித் தமிழும் தமிழர்களும் வாழ்ந்தால்தான் — இந்த பாரத தேசமாகிய இந்தியா வாழ முடியும் என்பது இதன் விரிவுரை.

இதில், 'தமிழ்' 'செந்தமிழ்' 'வாழ வேண்டும்' என்பதற்குத் தமிழ் மொழிக்கு உள்ள அ, ஆ முதலான எழுத்துகளைக் கொண்ட பாஷை வாழவேண்டும் என்பது அர்த்தம் அல்ல. ஆனால் இந்த எழுத்துகளைக்கொண்ட 'தமிழ் என்னும் பாஷையிலுள்ள நல்லறிவு வாழ வேண்டும்' என்பது தான் அர்த்தம்.

அந்த நல்லறிவு வாழ்ந்தால்தான் தமிழர்களும் நல்லவர்களாக வாழ்வார்கள். அது

மட்டுமா, தமிழின் நல்லறிவும் தமிழர்களுடைய நற்குணமும் வாழ்ந்தால்தான் இந்த 'பாரத மணித்திரு நாடு' என்ற இந்தியா வாழும். ஏனெனில், தமிழ் மொழியில்தான் இந்த பாரத நாட்டின் நல்லறிவு நிறைந்திருக்கிறது. இந்த பாரதநாட்டின் நல்லறிவாகிய ஞானத்தைத் தமிழனுடைய வாழ்க்கையிலேதான் அதிகமாகக் காணலாம். அதனால் தமிழும் தமிழனும் வாழ்ந்தால்தான் இந்தியா வாழும்.

தமிழ்மொழி வாழவில்லையானால் இந்திய நாகரிகம் இறந்துவிடும் என்பது இவருடைய தீர்க்க தரிசனம். 'இந்தியா தவறுமானால் ஆசியா அழிந்துவிடும்' (If India fails Asia dies) என்று மகாத்மா காந்தி வெகு சமீபத்தில் சொன்னதை இதனோடு ஒத்துப் பார்க்க வேண்டும்.

பாரதியாரின் பெருமைகளையும் அவருடைய தீர்க்க தரிசனத்தையும் அறிய வேண்டுமானால் அவருடைய பாடல்களையெல்லாம் சேர்த்து ஒரே தொகையாகப் பார்த்து அப்பாட்டுகளின் ஜீவனாகிய தீர்ப்புகளைக் கவனிக்கவேண்டும்.

அவருடைய பாட்டுகளில் அக்கொன்றும் இக்கொன்றுமாகப் பொறுக்கிக் கொண்டு பிறரை இகழ்ந்து பேசுவதற்கு மட்டும் எடுத்தாளுகின்ற எவரும் பாரதியின் பெருமைகளைப் பார்க்க முடியாது.

ஒரு வகுப்புவாதி தம்முடைய பிரசங்கத்தில் பேசுகின்றார், கேளுங்கள் :—" ஆரிய நாகரிகம் தமிழ்நாட்டைப் பாழ்படுத்தி விட்டது. இந்த ஆரியப் பற்றுகளை அடியோடு அழித்தால்தான் தமிழன் தலை யெடுக்கலாம். அதற்குத் தமிழ் இளைஞர்கள் வீறு கொண்டு எழுதல் வேண்டும். வயிரம் உடைய உறுதியோடு ஆரிய சூழ்ச்சிகளை அழிக்க வேண்டும். அதுதான் தமிழன் வாழ வேண்டிய முறை.

'வயிர முடைய நெஞ்சு
வேணும்—இது
வாழும் முறைமையடி
பாப்பா!'

என்று பாரதி சும்மாவா பாடினான்?" என்றார்.



இப்படிப்பட்ட குறுகிய எண்ணத்தோடு பார்க்கிறவர்களுக்குப் பாரதி புலப்படுவாரா? குறுகிய எண்ணம் மட்டுமல்ல; இது வேண்டுமென்றே பாரதி பாடலை துஷ்பிரயோகம் செய்கிற விஷப் பிரசாரம்.

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா!"

என்ற மிகச் சிறந்த இந்தப் பாட்டின் முதலடிகளை விட்டுவிட்டுப் பின்னிரண்டு அடிகளை மட்டும் எடுத்துக்கொண்டு பிறரை வசை பாடுவதில் வாழும் முறையை வகுக்கிறார் இந்த வஞ்சகர்!

உயிர்களிடத்தில் அன்பு, தெய்வ நம்பிக்கை, வைரம் போன்ற மன உறுதி, ஆகிய இந்த மூன்றும் கலந்ததுதான் வாழும் முறைமை என்று போதிக்கிற இந்தப் பாட்டு எப்படிப் பிரயோகிக்கப் படுகிறது, பாருங்கள்:

இன்னொரு உதாரணம்:

"இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்தநாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!"

என்று பாரதி பாடினார்.

பலாத்காரத்திலேயே நம்பிக்கையுடையவர் இதை அடிக்கடி எடுத்துக் காட்டி, உண்மையாகவே இந்த உலகத்தைப் பலாத்காரமாக அழித்துவிட வேணுமென்று இந்தப் பாட்டு தூண்டுவது போலப் பேசுகிறார்கள்.

'ஜகத்தினை அழித்திடுவோம்' என்று சொன்னது, உண்மையாகவே இந்த உலகத்தை ஆயுதங்களைக் கொண்டு மக்களைக் கொன்றும் நெருப்பு வைத்துப் பொருள்களை எரித்தும் அழித்துவிட வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்லவே அல்ல. 'ஒரே ஒரு மனிதனுக்கும் சோறில்லாமல் பட்டினி கிடக்க நேர்ந்தால் அப்படிப்பட்ட இந்த உலகம் நமக்கு வேண்டாம்.

இது இருந்தாலென்ன? அழிந்தாலென்ன? ஆதலால் அப்படி ஒரு மனிதன்கூடப் பட்டினி கிடக்க நேராதபடிச் செய்வோம்' என்பதுதான் இதன் கருத்து.

இதே கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இதைவிட இன்னும் அழகாகத் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதாவது:

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்!"

"மனிதன் சோறில்லாமல் பிச்சையெடுத்துத்தான் பிழைத்திருக்க வேண்டும் என்றால் அப்படிப்பட்ட இந்த உலகத்தை உண்டாக்கிய பிரம்மனே சோற்றுக்கில்லாமல் அலைந்து அழிந்துபோகட்டும்!" என்பது இந்தக் குறளின் கருத்து.

பாரதியார், ஒரு மனிதனாவது சோறில்லாமல் இருக்க நேர்ந்தால் அப்படிப்பட்ட இந்த உலகத்தை அழித்துவிட வேணும் என்றார்.

ஆனால் திருவள்ளுவரோ என்றால், 'அதற்கு இந்த உலகத்தை மட்டும் அழித்தால் போதாது. ஏனென்றால் இந்த உலகத்தை அழித்தால் அந்தப் பிரமன் இதைப் போல் இன்னொரு உலகத்தை உண்டாக்கி விடுவான். அதையும் நாம் அழித்து விட்டாலும், அவன் திரும்பத் திரும்ப உலகத்தை உண்டாக்கிக் கொண்டே இருப்பான். ஆகையினால், அந்தப் பிரம்மனே அழிந்து போனால்தான் இப்படிப் பட்டினி கிடக்கவேண்டிய உலகமே இல்லாதிருக்கும்' என்றுதான் 'பரந்து கெடுக உலகியற்றியான்' என்றார் வள்ளுவர்.

இதிலும் நம்முடைய சாபத்தால் அந்தப் பிரம்மனை அழித்துவிட முடியும் என்பதற்காகச் சொன்னதல்ல. ஆனாலும் 'ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாட்டைப் பலாத்காரத்தால் அழிக்க வேண்டும் என்று பாரதியார் பாடியது போலத்தான் பலர் பேசுகிறார்கள்.

இப்படிப் பாட்டுகளைத் துண்டு துண்டாக ஒடித்து அவரவர்கள் தமக்கு வேண்டியபடி மட்டும் பிரயோகப்படுத்துவதால் பாரதியின் பரந்த ஞானத்தைப் பார்க்க முடியாது. அதைப் பாராதவர்கள் பாரதியின் பாட்டை மேற்கோளாக எடுத்தாள உரிமையே இல்லாதவர்கள்.

பாரதியார் போர் வெறியையும் பலாத்காரத்தையும் புகட்டிய புலவன் என்று அநேகம் பேர் நினைப்பது வெறும் அறியாமை. இந்திய நாட்டின் சொந்த தர்மமும் தமிழ் இலக்கியங்களின் ஜீவ நாதமுமாகிய மெய்ஞ்ஞான போதமே பாரதியின் பாட்டு.

அவர் அச்சம் போக வேண்டும் என்றும் ஆண்மை வளரவேண்டும் என்றும் ஆற்றல் அதிகரிக்க வேண்டும் என்றும் பாடிய பாட்டுக்கள் அனைத்தும் கடைமுறையில் தமிழர் மரபின் பாரம்பரை அறமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தையே ஒட்டியவை. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு உணர்ச்சிகளை ஊட்டக்கூடிய பலவித நிலைமைகளில் அவர் பாடியிருந்தாலும், அவருடைய முடிவான தீர்ப்பு,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்ற வள்ளுவர் குறளின் வழியையே பற்றியது.

இந்த உண்மையை அவர் கடைசியாகப் பாடிய 'காந்தி பஞ்சகம்' என்பதில் காணலாம். அந்தப் பஞ்சகத்தை அவர் பாடினது 1920-ம் ஆண்டில். 1921-ல் அவர் இறந்து போனார்.

அந்தப் பஞ்சகத்தில் மகாத்மா காந்தியடிகளை பாரதி அவர்கள் 'வாழ்க நீ எம்மான்' என்று ஆரம்பித்து மனமார வாழ்த்திவிட்டு, காந்தியடிகளின் சாத்வீக ஒத்துழையாமைத் திட்டத்தைப் புகழ்கின்றார். எப்படி?

"கொடிய வெம் நாகபாசத்தை மாற்ற மூலிகை
கொணர்ந்தவன் என்கோ!
இடிமின்னல் காக்கும் குடைசெய்தான்
என்கோ!
என்சொலிப் புகழ்வதிங்கு உனையே?
விடிவிலாத் துன்பம் செயும் பராதீன
வெம்பிணி அகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாய்ச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி படைத்தாய்!"

"மகாத்மாவே! முடிவில்லாத துன்பங்களைத் தந்துகொண்டிருந்த அன்னிய ஆட்சி என்ற (எங்கள்) நோய் தீரும்படி உலகத்துக்கே மிகவும் நூதனமானதும் அதிக சுலபமானதுமான 'சத்திய சாத்வீகப் போர்' என்ற மிக நல்ல யுக்தியைக் கண்டுபிடித்த உன்னை, நாகபாசத்தால் அடிபட்டு விழுந்துவிட்ட ராமலக்ஷ்மணர்களை உயிர்ப்பிக்கச் சஞ்சீவியைக் கொண்டு வந்த அனு

மான் என்று சொல்லட்டுமா? அல்லது இடியும் மின்னலும் குமுறிக் கொண்டு வந்து எல்லாவற்றையும் அழித்து விடும் போல் வந்த சண்டமாருதப் பெருமழையில் ஜீவராசிகளைக் காக்கக் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்த கோபால கிருஷ்ணன் என்று சொல்லட்டுமா! என்ன சொல்லி உன்னைப் புகழ்வது!

"தன்னுயிர்போலத் தனக்குஅழிவு எண்ணும்
பிறன்உயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்றுணர்தல்
இன்ன மெய்ஞ்ஞானத் துணிவினை மற்றுஆங்கு
இழிபடும் போர்,கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!"

"தன்னுடைய உயிரைப் போலவே தனக்கு அழிவை எண்ணுகின்ற எதிரியின் உயிரையும் மதிப்பது, உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் கடவுளின் வடிவம்-கடவுளின் மக்கள் என்று உணர்வது என்ற இப்படிப் பட்ட மெய்ஞ்ஞான நிச்சயப் புத்தியை, இகழத்தக்க யுத்தம், கொலை, அடக்குமுறை முதலிய நிலைகளே இது வரையிலும் பின்னிக் கிடந்த அரசியல் துறையிலும் சேர்த்துவிடத் துணிவு கொண்ட நீயே பெரியவன்!"

"பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்
அதனினும் திறன்பெரிது உடைத்தாம்
அருங்கலை வாணர்மெய்த் தொண்டர்தங்கள்
அறவழி என்றுநீ கண்டாய்
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியாவிற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் அறத்தே!"

"பெரிய கொலைபாதக மார்க்கமாகிய யுத்த முறைகளை நீ இகழ்ந்து நீக்கிவிட்டாய். அதைக் காட்டிலும் வலிமையுள்ள, அரிய கலை வாணர்களும் பக்தர்களும் கொண்டாடத்தக்க தர்ம மார்க்கம் ஒன்றை நீ கண்டு பிடித்து விட்டாய். நிறைந்த பலன் தரக்கூடிய 'ஒத்துழையாமை' என்னும் அறப்போர் முறையினால்தான் இந்தியாவுக்கு நல்ல கதி கிடைக்கும் என்பதைக் கண்டறிந்து விட்டாய். இதனால் உலகம் முழுவதிலும் மக்கள் பகைமை பாராட்டுவதை விட்டுவிட்டு தர்ம மார்க்கத்தை உணர்ந்து நல்வாழ்வு பெறுவார்கள்" என்றெல்லாம் பாடி, பாரதியார் தமது கவிதைக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

இந்தப் பாடல்களால் பாரதியாரின் உள்ளம் தமிழ் மொழியின் சத்தான மெய்ஞ் ஞானத்திலேயே தோய்ந்திருந்தது என்பதை எளிதிற் காணலாம். அதனால் பாரதி ஒரு வித்தகச் சித்தன்.

காந்தியடிகளை இப்படி வாழ்த்தி வரவேற்ற பாரதியார் காந்தியத்தின் நடைமுறையைப் பார்ப்பதற்கு இல்லாமற் போய் விட்டாரே என்று நாமெல்லாம் பல முறை எண்ணி ஏங்கினதுண்டு.


பாரதியாரின் பூத உடல் போய்விட்டாலும் அவருடைய ஞானசொரூபம் நம்மை விட்டு நீங்கினதில்லை. அந்தச் சூக்கும சொரூபம் தமிழ் மக்களின் பேரன்பு கொண்ட பெரு முயற்சியால் எட்டயபுரத்தில் இலங்குகின்ற பாரதி மண்டபத்தில் பல்லாண்டு பல்லாண்டாக வீற்றிருந்து தமிழ் மொழியின் பெருமைகளையும் தமிழ் மக்களின் நல்வாழ்வையும் பாதுகாக்கும் என்று பரமனைப் பணிவோம்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

தோற்றுப்போனார்!

பாரதியார் புதுவையில் வாழ்ந்தபோது, பாலு என்று அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார். அவருக்கும் பாரதியாருடைய மைத்துனருக்கும் திருச்சி ஜில்லா உயர்ந்ததா, திருநெல்வேலி ஜில்லா உயர்ந்ததா என்பதைப்பற்றி வாத விவாதங்கள் நடக்கும். சில சமயங்களில் சம்பாஷணை கொஞ்சம் பலமாகக் கூடக் கடுமையான வார்த்தைகளில் நடக்கும். பாலு, நல்ல கட்டுமஸ்தான சரீரமுடையவர். அவர் தாம்பிரபரணி நதியை நீந்திப்பார், காவேரியைப் புகழ்வார். ஒரு நாள் இருவரும் வாதாடும்போது, பாரதியாருடைய மைத்துனர் பாலுவின் கால்களைத் திடீரென இழுத்து உயரத் தூக்கி விட்டார். பாலு தடாலென்று கீழே விழுந்தார். உடனே பாரதியார் பாலுவைப் பார்த்து, "அடே, பார்த்தாயா? காவேரி தீரத்தானைத் தாம்பிரபரணியான் அடித்து விட்டான். அதன் பலன் வெண்கலப் பானை உடைந்தாற் போல் உன் மண்டை உடைபட்டதுதான்!" என்றார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★



திருகுப்பூ

எம். என். சுப்பிரமணியம்

தரையில் விரித்த பட்டுப் பாயின்மீது உட்கார்ந்துகொண்டு சாரதா பின்னல் வேலை செய்து கொண்டிருந்தாள். கைகள் எவ்வளவு வேகமாகப் பின்னிக்கொண்டிருந்தனவோ அதற்குமேல் வேகமாக அவளது மனமும் பல்வேறு சிந்தனைகளையும் பழைய ஞாபகங்களையும் ஒன்றோடொன்று இணைத்துப் பின்னிக் கொண்டிருந்தது. ஒன்றுமில்லை, அந்தப் பட்டுப் பாய் எவ்வளவு சிந்தனைகளைக் கிளப்பி விட்டது! காரணம், அது அவள் கல்யாணத்துக்கு வாங்கின பட்டுப் பாய். பட்டுப்பாய், கல்யாணம், கணவன், அவன் அன்பு—இப்படிச் சிந்தனைகள் பின்னிக் கொண்டே போயின! தவிர, கல்யாணமாகித் தனிக் குடித்தனம் வந்து இன்னும் ஒன்றரை வருஷங்கள் கூட ஆகவில்லை. இதன் மத்தியில் ஊருக்கு ஒருதரம் போய் இரண்டு மாதங்கள் இருந்துவிட்டு வந்தாள். குடும்ப வாழ்க்கையின் 'சள்ளை'களும் தொந்தரவுகளும் கொஞ்சமும் தலைகாட்டாத காலம், சிறு வயது, அன்பு கனிந்த கணவன், சுதந்தரமான அந்தஸ்து—எல்லாம் சேர்ந்து அவளுடைய தாம்பத்ய வாழ்க்கை சோபையுற்று விளங்கியது.

சிறிது நேரத்துக்கு முன் அவளது சிநேகிதிகள் நாலைந்து பேர் வந்தபோது விரித்த பட்டுப் பாய்தான் அது. அவர்கள் வந்து அரட்டை அடித்துவிட்டுப் போய் விட்டார்கள். வீட்டில் வேறு ஒருவரும் இல்லாததாலும், காரியங்கள் யாவும் முடிந்து விட்டபடியாலும், நிம்மதியாய் உட்கார்ந்துகொண்டு பின்னல் வேலையைத் தொடங்கினாள். ஜெயராமன் இப்பொழுது வர நியாயமில்லை. புரசைவாக்கத்தில் சிநேகிதன் ஒருவனுக்குக் கல்யாணம். ராத்திரி சாப்பாடு, அரட்டை எல்லாம் ஆனபிறகு, பஸ் கிடைத்தால் வருவான். இல்லாவிட்டால் மறுநாள் காலையில்தான்!

இரவு மணி எட்டு இருக்கும். சாயங்காலம் சிநேகிதிகள் வந்தபோது, அவர்கள் வேண்டுகோளுக் கிணங்க சுமார் அரை மணி நேரம் பாடிவிட்டு சுவர் ஓரத்தில் சாத்தின தம்புரா, ஸ்ருதி கலையாது அப்படியே இருந்தது. எழுந்திருந்து ஏதோ காரியமாய் உள்ளே போனபோது, அவளது புடவைத் தலைப்பு பட்டு, ஸ்ருதி சுத்தமான நாதம் கிளம்பியது. அதைச் சாக்காகக் கொண்டு, அதே ஸ்ருதியில் அவளது வாயும் ஏதோ ஒரு பாட்டின் அடியை முணுமுணுக்கத் தொடங்கியது.

மெல்லப் பாடிக்கொண்டே மறுபடி பின்னல் வேலையைத் தொடர்ந்த சாரதாவின் கவனத்தை, எங்கிருந்தோ ரீங்காரம்செய்து

கொண்டு வந்த ஒரு வண்டு கவர்ந்தது. மின்சார விளக்கைச் சுற்றிச் சத்தமிட்டு வட்டமிட்ட பிறகு, அது கண்ணாடியினருகில் சென்று அழகு பார்த்துக் கொண்டே பறந்தது. சாரனா கைவேலையை விட்டு விட்டு அதைக் கவனிப்பதில் ஈடுபடலானான். கதவைத் திறந்து அவன் அதை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால், ஏனோ அவ்வாறு செய்யாமல் அதையே கவனித்துக் கொண்டிருந்தான். வண்டு மெல்லப் பறந்து சென்று தம்புராவின் ஒரு தந்தியின்மேல் உட்கார்ந்தது. மறு நிமிஷம் அங்கிருந்து 'விர்' என்று சிறகுகளை அடித்துக் கொண்டு அது மேலே கிளம்பியது. 'ஜீவா'வுடன் நன்கு ஸ்ருதி சேர்க்கப்பட்டிருந்த தம்புராவினின்றும் நாதம் கிளம்பியது! வண்டு சுற்றிச் சுற்றித் தந்திகளினருகே பறந்தது. நான்கு தந்திகளினின்றும் மாறிமாறி நாதம் எழும்பிக் கொண்டிருந்தது. சாரனா வியப்புடன் வண்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.


எவ்வளவு நேரம் அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தான் என்று அவனுக்கே தெரியாது. சட்டென்று மின்சார விளக்கு அணைந்தபோதுதான் அவன் உணர்வு பெற்றான். மழைக்காலமாதலால் எங்கேயாவது மின்சாரம் தடைப்பட்டிருக்கலாம். இருட்டில் பின்னல் கருவிகளைத் துழாவ ஆரம்பித்தான். அருகில் தைப்பதற்கு வைத்திருந்த ஊசி கையில் ஏறிவிட்டது. அதைப் பிடுங்கி எடுக்கும்போது, அது கையில் நன்கு ஏறிவிட்டதை அவன் உணர்ந்தான். 'டொக்' கென்று வண்டு எங்கோ அடிபட்டு விழும் சத்தமும் கேட்டது. 'கிக்' கென்று விளக்கு மறுபடியும் பற்றிக் கொண்டது. விரலிலிருந்து ரத்தம் கொஞ்சம் பலமாகவே கசிந்து கொண்டிருந்தது. மேலே கிளம்பிய வேகத்தில் தம்புராவின் தந்தி முறுக்கிகள் ஒன்றில் மோதுண்டு வண்டு கீழே விழுந்து கிடந்தது. சலனமே இல்லை. சாரனா கைவலியையும் மறந்து வண்டைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

சாயங்கால முதல் மனதை ஆட்டி வைத்த சந்தோஷமும் பூரிப்பும் எங்கோ ஒரு நிமிஷத்தில் போய்விட்டன. வண்டின் 'பிரேதம்' அவனுக்கு ஒரு வெறுப்பையும் பயத்தையும் அளித்தது. வீட்டிற்கப்பால், மைதானத்திலுள்ள குடிசைகளுள் ஒன்றிலிருந்து, யாரோ, எப்போதோ இறந்து போன சிசுவைக் குறித்துத் தீனமாகப் பாடிக்கொண்டிருந்த பிலாக்கணம் அவன் நெஞ்சை அறுத்தது. கூடவே, இராப் பிச்சைக்காரர்களின் ஓலமும் தெரு நாய்களின் குரைப்பும் அவனது தைரியத்தைக் குலைத்தன. அவனது தனிமையையும் அதன் பயங்கரத்தையும், அவை மிகைப்படுத்தின. மறுபடி விளக்கு அணைந்து விடுமோ என்ற பயமும் அவற்றுடன் சேர்ந்து கொண்டது. சாரனா ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்தான். மேஜைமீதிருந்த பூட்டையும் சாவியையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். சிறு தூறல் போட்டுக் கொண்டிருந்தது. வாயிற் கதவைப் பூட்டிச்

கிளிபோல் பேசுக!

பாரதியாருக்கு ஹார்மோனியம் என்றாலே கொஞ்சங்கூடப் பிடிக்காது. அத்துடன், "பேசும்போது கிளிபோல் கொஞ்சவேண்டும்; கர்ண கடூரமாகப் பேசுவது கூடாது; பேச்சே ஒரு சங்கீதம் போல அமையவேண்டும்" என்பார்.

ஒரு நாள் அவருடைய மனைவியும் குழந்தைகளும் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி உரக்க கடுமையாகப் பேசிக்கொண்டிருந்தார்களாம். அப்போது பாரதியார் மெதுவாக உள்ளே போய், ஹார்மோனியத்தை எடுத்து, எல்லாக் கட்டைகளையும் அழுத்திக்கொண்டு சுருதி போட்டார். பலமான ஓசை உண்டாயிற்று. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பி, "ஏன் இப்படி திடீரென்று ஹார்மோனியம் வாசிக்கக் கிளம்பி விட்டீர்கள்?" என்று கேட்டார்கள். பாரதியார் சிரித்துக்கொண்டே, "உங்களுடைய சம்பாஷணை எனக்கு இப்படித்தான் இருந்தது. இனியாவது இப்படி அபஸ்வரமாகப் பேசாதீர்கள்!" என்றாராம்.



சாவியை எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டை நோக்கி நடந்தாள்.

தாளிடப் படாமல் சாத்தியிருந்த பக்கத்து வீட்டுக் கதவை மெள்ளத் திறந்து ஹாலில் அடி யெடுத்து வைத்தாள்.

ஹாலை அடுத்த அறையில் இரு மெத்தைகள் சேர்த்தாற்போல் விரிக்கப் பட்டிருந்தன. வெற்றிலைத் தட்டு ஒரு மெத்தையின் மேலிருந்தது. அந்த அறைக் கதவு சிறிதே திறந்திருந்த போதிலும் இவை யெல்லாம் நன்கு தெரிந்தன. உள்ளேயிருந்து பேச்சுக் குரல் கேட்டது. சாரதா யோசித்தாள், திரும்பி விடலாமா வென்று. எனினும் தனிமையை நாடித் திரும்ப மனமில்லை.

மெல்ல, "கமலம்!" என்று கூப்பிட்டாள்.

புடவையின் சலசலப்புச் சத்தம் கேட்டது. சாரதா சிறிது பின்வாங்கிக் கதவினருகில் நின்றாள்.

"சாரதா, வா! நானே உங்காத்துக்கு வரலாமென்றிருந்தேன்" என்று சொல்லிக் கொண்டே வந்த கமலம், சாரதாவை இழுத்துக்கொண்டு உள்ளே போக முயன்றாள். சாரதா சிறிது தயங்கவே, கமலம் 'கலீ'ரென்று நகைத்து, "அட அசடே, பரவாயில்லை, வா! அவர் மாடிக்குப் போய் விடுவார்!" என்று சொல்லிக் கொண்டே சாரதாவின் கையைப் பற்றினாள். கொஞ்சம் வலுவாகவே அவள் கையைப் பற்றவே, சாரதா தன்னையு மறியாமல் 'ஹா' என்று கத்தி விட்டாள். சட்டென்று அவளது விரலைப் பார்த்த கமலம், இரத்தம் கசிவதைக் கண்டு சிறிது பதைபதைத்தாள். பிறகு சமாளித்துக் கொண்டு உள்ளே போய், 'டிங்ச்சர்' எடுத்து வந்து விரலில் தடவி, சிறு துணியால் காயத்தைக் கட்டியும் விட்டாள். இதற்கு முந்தியே கமலாவின் கணவன் விஷயத்தை ஊகித்துக்கொண்டு, படுக்கையைச் சுருட்டிக்கொண்டு மாடிக்குப் போய்விட்டான்!

"எனக்கு என்னவோ, கமலம், இன்று ராத்திரி இங்கு படுத்துக் கொள்ளவே இஷ்டமில்லை. பாவம், என்னால் உனக்குக் கஷ்டம்!" என்று நட்பை யறிந்து கெஞ்சும் தோரணையில் சாரதா சொன்னாள்.

இதைக் கேட்ட கமலம் 'இடி இடி' யென்று சிரித்தாள்.

"அப்படி யென்றால் நான் வந்ததில் உனக்குக் கொஞ்சங்கூட வருத்தம் இல்லையா?" என்றாள் சாரதா.

"வருத்தமாவது, இருத்தமாவது? நீ இப்பொழுது இங்கு வந்தது பழைய சம்பவம் ஒன்றை எனக்கு ஞாபகப்படுத்துகிறது. அப்போது இதே போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் நான் மாட்டிக் கொண்டிருந்தேன். ஆனால் காரணம் வேறு. 'இவர்' அப்போது ஜுரத்தோடு கிடந்தார். அதனால் நானும் ஒரு சதிபதிகளின் சல்லாபத்துக்கு இடைஞ்சல் உண்டுபண்ணும்படி நேர்ந்தது. சரி. அந்தக் கதை இப்பொழுது எதற்கு? நிம்மதியாய்ப் படுத்துத் தூங்கு, சாரதா!" என்றாள் கமலம், தானும் படுத்துக் கொண்டே.

"எனக்குத் தூக்கமே வரவில்லை. அந்தக் கதையைத்தான் சொல்லேன்!" என்று காதைத் தீட்டிக் கொண்டு ஆவலுடன் அவளை நெருக்கினாள் சாரதா.

கேட்காமலேயே மனக் கணக்காய்க் 'கதை' சொல்லவல்ல பெண்களில், கேட்ட பின்னும் மறுப்பவர் யாராவது இருக்க முடியுமா? கமலா ஆரம்பித்தாள்:

• • •

சுமார் எழெட்டு வருஷங்கள் ஆகின்றன. 'இவர்' அப்பொழுது 'ஜூனியர்'ராக வக்கீல் ஸ்ரீனிவாசய்யங்காரிடம் வேலை செய்து கொண்டிருந்தார். கோடை விடுமுறைக்காகக் கச்சேரி மூடுமுன்பே லீவில் எங்கு போவதென்று 'ப்ளான்' போட ஆரம்பித்தோம். மாமா வீடு, சித்தியகம், சிநேகிதர்களோடு வாசம், பங்களூர்ப் பிரயாணம் இவையெல்லாம் அடிபட்ட பிறகு, ஒரு தினுசாகக் கோடைக்கானலுக்குப் போவதென்று முடிவு செய்யப்பட்டது. வக்கீலுடைய கக்ஷிக்காரன் ஒருவனுக்குச் சொந்த பங்களா ஒன்றும் அங்கேயிருந்தது. அவனும் வருந்தி யழைத்தான். ஆகவே அங்கே போய்ச் சேர்ந்தோம்.

எங்களுக்காகப் பங்களாவின் முன்புறத்தில் இரண்டு அறைகள் காலி செய்து விடப்பட்டன. பாக்கி அறைகளெல்லாம் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. எங்களைத் தவிர மூன்று நான்கு குடித்தனங்கள் அங்கே இருந்திருக்கலாமென்று நினைக்கிறேன். ஆனால் யாரையும் விசேஷமாய் அறிமுகப் படுத்திக் கொள்ள நாங்கள் அப்போது முயற்சிக்க வில்லை.

மாலதியின் — மேஜைக்கு நேரே போட்டோ மாட்டியிருக்கிறதே, அவள்

தான்—ஸ்நேகம் எனக்கு ஏற்பட்டதே ஒரு வேடிக்கை.

போய் காலேக்கு காட்களிருக்கும். வழக்கம்போல நானும் அவரும் காலேயில் உலாவச் சென்றோம். பசுமைக் காட்சியை அனுபவித்துக் கொண்டே இரண்டு மூன்று மைல்கள் நடந்திருப்போம். வானோங்கிய விருக்ஷங்கள், விண்ணையும் மண்ணையும் சேர்த்துக் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. அப்போது ஈக்கூட இல்லை. தண்ணென்ற காற்று கன்னங்களில் அடித்துக் கொண்டிருந்தது. பக்ஷி ஜாலங்கள் மெல்ல காலைக்காய்ச் சப்தித்துக் கொண்டிருந்தன. வளைந்து வளைந்து செல்லும் ரோடுகளில் அவ்வப்போது ஓடும் மோட்டார்களின் அலறலைத் தவிர வேறு பெரிய சத்தமும் கிடையாது. வீட்டிலிருந்து கிளம்பும்போது அவருடன் என்னென்னவோ பேசவேண்டுமென்று எண்ணிக்கொண்டு கிளம்புவேன். ஆனால், கடைசியில் ஓரிடத்தில் உட்கார்ந்த பிறகு அவரும் முழங்காலைக் கட்டிக்கொண்டு வாய் பேசாமல் இயற்கையையே பார்த்து அனுபவித்துக் கொண்டிருப்பார். நடுநடுவில் என்னையும் பார்ப்பார். நானும் எல்லாவற்றையும் மறந்து வானத்தையும், அணில்களையும், பக்ஷிகளையுமே பார்த்துக் கொண்டிருப்பேன். காற்று சிறிது வேகமாக அடிக்கும்போது அவரது சுருட்டை மயிர்கள் கண்ணுக்கு மேலே வந்து நெற்றியில் விளையாடும். அதைப் பார்த்து ரஸித்துக்கொண்டே இருப்பேன். நேரம் போவதே தெரியாது. எங்கோ பார்த்துக் கொண்டிருக்கும்போது மெல்லத் தோளைத் தட்டி நாழியாகி விட்டதென்று சொல்லிப் புன்முறுவல் பூப்பார். பேசாமல் வழி நடப்போம்.

இவ்வாறு அன்றைக்கும் திரும்பிக் கொண்டிருந்தபோது, ரோடின் நடுவில் ஒரு சிறிய கார் நின்றுகொண்டு கிளம்பத் 'தகரார்' செய்து கொண்டிருந்தது. காரிலிருந்து இறங்கியவர் காரின் 'மூகவாய்க் கட்டை'யை ஆயிரம் தடவை தடவிக் கொடுத்தும் அது கிளம்ப மறுத்து விட்டது!

“மாலதி, ‘ஸ்டார்ட்’டை எடு!” என்றார் கார்க்காரர்.

நாங்கள் பார்த்துக் கொண்டிருந்த போதே உள்ளிருந்து தலைநீட்டிய மாலதி எங்களைப் பார்த்துவிட்டாள். எங்களவர் உடனே கார்க்காரரிடம்—அதாவது, மாலதியின் கணவனிடம் சென்று, தான் ஏதாவது



போலீஸ்:—ஸார்! கார் கவிழ்ந்து விடும் போலிருக்கிறது! மத்தியில் உட்கார்ந்து கிட்டுப் போங்கள்!

பிரபு:—தெரியும்ப்பா! அந்தப் பக்கத்துச் சக்கரம் 'பங்ச'ராய் போயிடுச்சின்னு தானே இந்தப் பக்கமா உட்கார்ந்துட்டுப் போறேன்!

உதவி செய்யக் கூடுமா என்று கேட்க ஆரம்பித்தார். மாலதி இறங்கி என் அருகில் வந்தாள்.

"ஒன்றுமில்லை, ஸார்! ஒரு சின்னத் தகராறுதான். இப்பொழுது கிளம்பிவிடும்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார், மாலதியின் கணவர்.

மாலதியை நான் அதற்கு முந்தி பார்த்தது கிடையாது. ஆனால் அவள் என்னை நன்கு அறிந்தவள் போல் பார்த்த பார்வை எப்படியோ ஒரு கிஷணத்தில் என்னுடைய அன்னிய உணர்ச்சி அனைத்தையும் துரத்தி விட்டது.

"திரும்பிப் போகிறீர்களா?" என்றாள் அவள் என் தோள்மீது கை வைத்துக் கொண்டே.

"ஆமாம்" என்றேன்.

இதற்குள் காரும் ரிப்பேர் ஆகிவிட்ட படியால், புருஷர்கள் இருவரும் எங்களை நோக்கி வந்தார்கள்.

"ரொம்ப வந்தனம், ஸார்! நீங்கள் எங்கு போகிறீர்கள்?" என்று கேட்டவர், எங்கள் பக்கம் திரும்பி, "ஏது, மாலதி சிநேகம் பிடித்து விட்டாற்போ லிருக்கிறதே!" என்று சொல்லிச் சிரித்தார்.

"உங்களுக்குத் தெரியாதா? இவா, நாமிருக்கும் பங்களாவிலேயே, முன் றூலில் இருக்கிறார்கள்!" என்றாள் மாலதி.

"என் ஸார், நீங்களும் 'ஹில் வ்யூ' (பங்களாவின் பெயர்)வில்தான் தங்கியிருக் கிறீர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு, "ஏறுங்கள் ஸார்!" என்றார் மாலதியின் கணவர்.

மாலதி மோட்டாரை நோக்கி நடந்து, பின் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நின்றபடியே என்னைப் பார்த்தாள். பேசா மல் காரில் ஏறினேன். அவரும் முன்னுடி ஏறிக் கொண்டார்.

• • •

இப்படியாக எங்கள் சிநேகம் ஆரம் பித்தது. அழகு, குடிகை, அந்தஸ்து மூன்றும் ஒருங்கே அமைந்த பெண் மாலதி. செல்வத்திலும் செல்வத்திலுமே வளர்ந்த வீட்டுக்கு ஒரே குழந்தை. அவள் தகப்பனார் பிதிரார்ஜிதமாக அடைந்த பூஸ்திதிகளோடு சொந்தமாக வியாபாரம் செய்தும் ஏராள மாகப் பணம் சேர்த்திருந்தார். எல்லை மீறின செல்வத்தில் வளர்க்கப்பட்டவ ளாதலால் சிறிது அகம்பாவம் இருக்குமோ என்று பார்ப்பவர்களுக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டக் கூடும். ஆனால் நெருங்கிப் பழகினால்தான் அவளது உண்மை சுபாவம் தெரியும். கொஞ்சிக் கொஞ்சிப் பேசி வித்தியாச மில்லாமல் இருப்பாள். 'அம்மாமி, அம்மாமி!' என்று அடிக்கொரு தரம் என்னிடம் ஓடி வருவாள்.

ஒரு நாள் "அம்மாமி, இன்று எனக்குப் 'பாம்புப் பின்னல்' போட்டு விடுகிறீர்களா?" என்று அவிழ்த்து விடப்பட்ட நீண்ட சுருட்டை மயிர்களோடு ஓடி வந்தாள் அவள்.

"மாலதி, என்னை நீ ரொம்ப அவமானப் படுத்துகிறாய்" என்றேன் நான், சிறிது கோபத்தை வரவழைத்துக் கொண்டு.

"என்ன அம்மாமி?" என்று பயத்துடன் கண்களை அகல விழித்துக் கொண்டு கேட்டாள்.

"மாலதி, உன்னைவிட நான் இரண்டு மூன்று வயதுதான் பெரியவள். பின் எதற்காகப் பெயரைச் சொல்லிக் கூப்பிடு வதை விட்டு, 'அம்மாமி,' 'அத்தை,' 'பாட்டி' என்றெல்லாம் கூப்பிட ஆசைப் படுகிறாய்? தவிர, இது எங்காத்தில் அவருக்குத் தெரிந்தால்......"

"ஓஹோஹோ!" என்று என்னைக் கட்டிக் கொண்டு அவள் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்!

"அதற்கு இல்லை, அம்மாமி! எனக்கு ஒன்றுவிட்ட மாமாவின் அகமுடையாள் தத்ரூபம் உங்களைப் போலவேதான் என்னிடம் உயிரா யிருப்பாள்! நானும், 'அம்மாமி, அம்மாமி' என்று பிராணனை விடுவேன்! ஆனால் பாருங்கள்..." என்று சொல்லிக் குறும்பாகச் சிரித்தாள்.

"என்ன, அவளுக்கு என்ன?" என்றேன்.

"அவளுக்குக் கொஞ்ச நாளாகச் சித்த ஸ்வாதீனமில்லாம லிருக்கிறது! எப்போப் பார்த்தாலும் வெறுமனே 'அம்மாமி, அம்மாமி' என்கிறாள்!"

"அடி, பாவி! என்னையும் அப்படிப் பைத் தியமாக அடித்துவிடப் பார்க்கிறாயா?"

இரண்டு பேரும் விழுந்து விழுந்து சிரித் தோம். இவ்வாறு ஒரு மாதம் கழிந்தது. இன்னும் கிட்டத்தட்ட ஒரு மாதம்தான் பாக்கி யிருந்தது. இதன் நடுவில்தான் அந்தத் துக்கச் சம்பவம் நடந்தது.

[அடுத்த இதழில் முடியும்]

K. S. E.

நவராத்திரி பண்டிகைக்குப்
புதுமாதிரியான, உயர்ந்த ரக
கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள்

★

கிடைக்குமிடம் :


காத்தாயி ஸில்க் எம்போரியம்

கீழமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்

உலகிலேயே மிக உயர்ந்த

சரும நிவாரணி

இதமளித்து, சுத்தப்படுத்தி
குணப்படுத்துகிறது



ஜாம்-பக் களிம்பு விரைவில் குணமளிக்கவல்ல கிருமி-நாசினி என்பது உலகம் பூராவும் தெரியும்-சருமத்திலேற்படும் காயங்களுக்கும், வியாதிகளுக்கும் அபாயமற்ற சிகிச்சை.

ஜாம்-பக்கிலுள்ள சுத்தம் செய்யப்பெற்ற மூலிகைத் தைலங்கள் சரும துவ்வுகளிலுள்ள பூச்சிகள் அல்லது விஷத்தை சுத்தப்படுத்தி, வலி, கட்டி, எரிச்சல், வீக்கம் இவற்றை விரைவில் நீக்கிவிடுகிறது. கசிவு உலரப் பெற்று, சருமம் விரைவாகவும் சுத்தமாகவும் குணமடைகிறது.


Zam-Buk

உலகப் பிரசித்திபெற்ற
மூலிகைக் களிம்பு

மிருகக் கொழுப்பின்மைக்கு
உத்தரவாதம்

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ். தாதா & கோ.,
பி. டி., மதராஸ்

No. 1



கிராக்கிக்கு மெத்தனையோ குறைவாகத்தான்

எங்களிடம் சரக்குகள் விற்பனைக்குள்ளன. சிறந்த சாமான்களுக்கு வேறு விளம்பரம் ஏன், இதுவே எப்பொழுதும் எமது கொள்கை. எனினும், எங்கள் வர்த்தக முத்திரைக்கிருந்துவரும் நன்மதிப்பானது, அந்த முத்திரையை பிரசித்திப் படுத்துவதையே ஆதாரமாகக் கொண்டதென்பதை நாம் மறந்துவிடலாகாது. பிரசித்தப் படுத்துவது எதற்காகவென்றால், "நாங்கள் இன்னும் வேலை தொடர்ந்துதான் வருகிறோம். கூடிய சீக்கிரம் போதுமான சரக்குகள் உங்களுக்குக் கிடைக்கச் செய்வோம்" என ஆவசியக்காரர்களுக்கு உறுதி கூறவேதான்.

கம்பளி: பூராவும் கம்பளி ஸூப்பர் ப்ளாங்கெட்டுகளும் பிரயாண ரக்குகளும்—ட்வீடுகளும், தேசிய கம்பளி நிறுககளும், யூனியன் ஷர்ட்டிங்குகளும்:

பருத்தி: ஸெல்லா ஷர்ட்டிங்குகளும், தேசிய லாங்கிலாத்தும்—கோல்ட் ஸ்டாண்டர்ட் ஷர்ட்டிங்குகள்—லேடீ லாங்கிலாத்தும், சாயம் தோய்த்ததும்—ஸாம்ரா ஸூட்டிங்குகள் — டஸ்லோர்கள் — ட்ரில்கள் — டிவில்கள் வகையரா......

பட்டு: 44"/45" அகலம், பற்பல சாயல்களில்.

தயாரிப்போர்கள்: தி பங்களூர் வூலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கோ., லிட்.

ஏஜன்டுகள், காரியதரிசிகள், ட்ரெஷரர்கள்

பின்னி & கோ.

(மெட்ராஸ்) லிட்.

“ஆடு மார்க்கு” — [illegible]


★ கவிஞர்களுடைய வாழ்க்கை வரலாறுகளே எப்போதும் விநோதமாகத்தான் இருக்கும். பாரதியாருடைய வாழ்க்கையும் அதற்கு விதிவிலக்கானது அல்ல. பாரதியாருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு ரசமான சம்பவத்தைப் பற்றி அவருடைய பத்தினியார் சொல்வதைக் கேளுங்கள்:

கவிஞர் கண்ட செல்வம்

ஸ்ரீமதி செல்லம்மா பாரதி

பாரதியாரை ஆதரித்து வந்த எட்டயபுரம் மகாராஜா ஒரு சமயம் சென்னைக்குப் போயிருந்தார். அவர் கூட பாரதியாரும் அவருடைய நண்பர்களும் போயிருந்தார்கள். போகும் சமயத்தில், "செல்லம்மா! வரும்போது உனக்குத் தேவையான சாமான்கள் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனார். நானும் ஆவலாக அவர்கள் திரும்புவதை எதிர் நோக்கி யிருந்தேன்.

பதினைந்து தினங்கள் கழித்து எட்டயபுரம் திரும்பினார். குதிரை வண்டிகள் இரண்டு வாசலில் வந்து நின்றன. ஒன்றிலிருந்து தாம்மட்டும் இறங்கினார். மற்றொரு வண்டியி லிருந்த மூட்டைகளை வண்டிக் காரன் உள்ளே கொண்டு வந்து வைத்தான். மூட்டைகள் கூடத்தை நிரப்பின. அத்தனையும் புடவைகள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலிய வைகளா யிருக்கலா மென்று நான் மனம் பூரித்தேன். அவருடைய நண்பர்கள் முதலியோர் வந்து விசாரித்து விட்டுச் சென்றார்கள்.



கடைசியாக, நான் மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்ததும், எனக்குக் கோபந்தான் வந்தது. அத்தனையும் புத்தகங்கள்! புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம், திருக்குறள், திருவருட்பா, கம்ப ராமாயணம், ஆங்கிலப் புத்தகங்கள்! ஒரே ஒரு புடவை மட்டும் வாங்கி வந்தார்.

"இதென்ன இது! மகாராஜா எவ்வளவு பணம் கொடுத்தார்?" என்று கேட்டேன்.

"ஐந்நூறு ரூபாய் கொடுத்தார்" என்று சொல்லிப் பணப் பையை என்னிடம் நீட்டினார்.

அந்தப் பையைத் திறந்து பார்த்தால், பதினைந்து ரூபாய் தான் இருந்தது. இவருடன் சென்ற இவருடைய நண்பரோ, வீட்டுக்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிக்கொண்டு, கையிலும் ரூபாய் முந்நூறு கொண்டுவந்திருந்தார்!

பாரதியார் எனது முகக்குறிப்பை உணர்ந்து, "செல்லம்மா! நீ பணத்துக்கு ஆசைப் படாதே! அழியும் பொருளைக் கொடுத்து அழியாத கல்விச் செல்வத்தைக் கொணர்ந்தேன். என் மனத்திற்குப் புத்தகங்களே ஆனந்தங் கொடுக்கின்றன. என்னுடைய சந்தோஷம் உனக்குத் திருப்தி யளிக்கவில்லையா?" என்றார்.

நான் "ரொம்பத் திருப்தி!" என்றேன்.

["சக்தி" காரியாலயம் வெளியிட்டிருக்கும் "பாரதியார் சரித்திரம்" என்ற நூலிலிருந்து எடுத்தது.]



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

• • •

190. கண்டு கொண்டான்!

அனுமனுடைய கல்வியின் பெருமை, தேக சக்தியின் பெருமை எல்லாம் அளவிடுவதற்கு அரிதாய் இருக்கின்றன என்று கண்டுகொண்ட ராமனுக்கு அடக்க முடியாத சந்தோஷம் உண்டாகி விட்டது. "ஆஹா! இத்தகைய மகானைப் பார்க்க நேர்ந்தது எவ்வளவு நல்ல சகுனம் பார்த்தாயா, தம்பி?" என்கிறான்.

'நல்லன நிமித்தம்பெற் றோம்;
நங்கையைப் பெற்றோம்,நம் பால்
இல்லையே துன்பமா ன(து)
இன்பமே எய்திற்(று)அன் றே!
வில்லினாய், இவனேபோ லாம்
கவிக்குலக் குரிசில்வீ ரன்
சொல்லினால் ஏவல்செய் வான்!—
அவன்நிலை சொல்லற்பாற் றோ!'

[நல்லன நிமித்தம் பெற்றோம்: நல்ல சகுனங்கள் நமக்குக் கிடைத்து விட்டன; நங்கையைப் பெற்றோம்: ஆம், சீதையையே பெற்றுவிட்டது; வில்லினாய்: லக்ஷ்மணனே; இவனே போலாம்: அரசனது ஏவலாளனே இப்படி உயர்ந்த அறிவும் ஆற்றலும் படைத்தவனாய் இருக்கிறான்; கவிக் குலக் குரிசில் வீரன்: குரங்கினத்துக்கு அரசனான சுக்கிரீவனது; சொல்லினால் ஏவல் செய்வான்: கட்டளைப்படி ஏவிய வேலையைச் செய்கிறவனாம், விஷயம் எப்படி இருக்கிறது! அவன் நிலை சொல்லற் பாற்றோ: அந்தச் சுக்கிரீவனது தன்மை எப்படித்தான் இருக்குமோ; சொல்ல முடிகிற காரியமா!

குறிப்பு:— அனுமனிடம் சென்ற ராமனது அன்பும் மதிப்பும், இனிக் காணப்போகும் சுக்கிரீவனிடத்திலும் சென்று விட்டன!]

மனம் தளர்ந்து வாடியிருந்த ராமலக்ஷ்மணரது முகம் இப்போது தனியான உத்ஸாகம் பெற்றுப் பொலிவுற்றது. அனுமன் அதைப் பார்த்தான்; ரொம்பவும் களிப்படைந்தான்.

என்றகம் உவந்து,கோல
முகமலர்ந்(து) இனிதின்நின் ற
குன்றுறழ் தோளினா ரை
நோக்கி,அக் குரக்குச்சீ யம்
'சென்(று),அவன் தன்னைஇன் னே
கொணர்கின்றேன் சிறிதுபோ து
வென்றியீர் இருத்திர்'என் று
விடைபெற்று விரைவிற்போ னான்.

[கோல முகம்: அழகிய முகம்; குன்றுறழ் தோளினாரை நோக்கி: குன்றைப் போன்ற தோள் கொண்ட ராமலக்ஷ்மணரை ஆர்வத்தோடு பார்த்து; அக்குரக்குச் சீயம்: குரங்கு களிற் சிங்கம் என்று சொல்லக் கூடிய அனுமன்; சென்று அவன் தன்னை இன்னே கொணர்கின்றேன்: இதோ போய் அவனை இப்போதே அழைத்து வருகிறேன்; வென்றியீர்: வெற்றிக்கே உரிய நீங்கள்; சிறிது போது இருத்திர்: சிறிது நேரம் இங்கேயே இருங்கள்.

குறிப்பு:—"சுக்கிரீவனே வந்து ராமலக்ஷ்மணரைப் பார்க்க வேண்டும், அதுதான் மரியாதை" என்று எண்ணுகிறான் அனுமன்.]

•.•

அனுமன் சுக்கிரீவனை அடைந்து ராமனது உயரிய பரம்பரை இன்னதென்றும், தியாகம் இன்னதென்றும் அவனுக்கு நேர்ந்த கஷ்டம் இன்னதென்றும் சொல்லுகிறான். சுக்கிரீவனுக்கு அப்படியே உள்ளம் இளகி

விட்டது. ராமனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. உடனே புறப்படுகிறான். வளைந்து வளைந்து போகும் மலைப் பாதையின் வழியாக ஏறிச் செல்லுகிறான். மரம் செடிகள் அடர்ந்த இடம் ஒன்றில் பாதை மடங்கித் திரும்பியது. அந்த இடத்தை அடைந்ததும் கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்திருந்த ராமனது உருவம் கண்ணுக்குத் தென்பட்டது.

கண்டனன் என்பமன் றோ
கதிரவன் சிறுவன், கா மர்
குண்டலந் துறந்தகோ ல
குரிசிலைக்! குளிர்க்குங்கண் ணும்
புண்டரீ கங்கள் பூத் து
புயல்தழீ இப் பொலிந்ததிங் கள்
மண்டலம் உதயஞ்செய் த
மரகதக் கிரியனா னை !!

[கண்டனன் என்பமன்றோ கதிரோன் சிறுவன்: சூரிய புத்திரனான சுக்கிரீவனது கண்ணுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது; காமர் குண்டலங்கள் துறந்த கோலக் குரிசிலை: அழகிய குண்டலங்கள் அணிந்து சோபிக்க வேண்டிய ராமனை; ஆனாலும் இப்போது குண்டலங்கள் கழற்றிய காரணத்தாலேயே ஒரு தனியான சோபை ஏற்படுகிறது. குளிர்க்கும் கண்ணும்: பார்த்தால் யாருக்கும் சாந்தி உண்டாக்கக் கூடிய கண்கள்; ராமனுடைய உருவத்தைப் பார்த்தால் ஏதோ மரகதமலை என்றும் அதில் செந்தாமரைப் புஷ்பங்கள் பூத்தன என்றும், சிரத்தில் கருமேகம் தழுவிய சந்திரன் உதயமானதோ என்றும் சொல்லத் தோன்றும். புண்டரீகங்கள் பூத்து: செந்தாமரைகள் மலர்வது போல் கண்; புயல் தழீஇப் பொலிந்த: கருமேகம் போன்ற முடியானது உச்சியில் அழகு செய்ய; திங்கள் மண்டலம் உதயம் செய்த: சந்திர மண்டலம் உதித்தது என்று சொல்லும்படியாக; மரகதக் கிரியனானை: மரகத மலை என்று சொல்லும்படியான உருவத்து ராமனை—'கண்டனன் என்பமன்றோ.']

எந்த வஸ்துவின் அழகும் மனித உருவத்தின் அழகுக்குப் பின்தான். அழகோடு வீரமும் தியாகமும் சேர்ந்து விட்டால்க் கேட்கவா வேண்டும்! ராமனது அழகில் சுக்கிரீவன் ஈடுபட்டு விடுகிறான் — கண்ட மாத்திரத்திலேயே!

★ ★ ★ ★ ★ ★ மறந்தது எது? ★ ★ ★ ★ ★ ★

பாரதியார் வாழ்ந்து வந்த கடையத்தில் நடந்த ஒரு திருமணத்தின்போது தேவகோட்டை வித்துவான் ஒருவர், "வள்ளி திருமணம்" காலட்சேபம் செய்தார். வேடர்கள் தங்கள் பயிர்களை மிருகங்கள் அழித்துப் பாழாக்குவதைத் தடுப்பதற்காகச் சாமிக்குப் பூசை போட்டனர். அவர்களில் ஒருவனுக்குச் சாமி ஆவேசம் வந்து, "பாக்கும் வச்சான், பழமும் வச்சான், வெத்திலை வச்சான், பொயிலை வச்சான்—ஒண்ணு வைக்க மறந்திட்டான்: சுண்ணும்பில்லே, சுண்ணும்பில்லே". என்ற பாட்டைப் பாடுவது வழக்கம். இந்தப் பாட்டைக் கேட்டதும் பாரதியார் 'கொல்'லென்று சிரித்தார்.

அருகிலிருந்தவர்கள், "ஏன் சிரிக்கிறீர்?" என்று கேட்டார்கள். "இந்தப் பாட்டு நமது நாட்டு மக்களுக்கும் ஒருவாறு பொருந்தும்" என்றார் பாரதி. "எப்படி?" என்று அவர்கள் திருப்பிக் கேட்டனர். "தமிழ் மக்களுக்குக் கடவுள் நிலமும் வச்சான், பலமும் வச்சான், நிகரில்லாத செல்வம் வச்சான், —ஒண்ணு வைக்க மறந்திட்டான்: புத்தியில்லே, புத்தியில்லே!" என்றார். நண்பர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். பாரதியார் சொன்ன உவமை அவர்கள் நெஞ்சை விட்டு அகலவே இல்லை.





ரஸ்தாவின் பாங்கு
யாதானாலும்
அதற்கு உகந்தது...
டன்லப்
டயரே
J. B. Dunlop
TRADE MARK
DK 297 TM



சந்திர ஹாரம்

ஆசிரியர் : பிரேம்சந்த்] [மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

இருபத்தைந்தாம் அத்தியாயம்

தானமும் தாபமும்

ரமாநாத் கல்கத்தாவுக்கு வந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அவன் தேவீதீன் வீட்டிலேயேதான் இருந்து வந்தான். 'பணத்துக்கு என்ன செய்வது?' என்ற கவலை அவனை இன்னும் விட்டகன்றபாடில்லை. அவனும் என்ன வெல்லாமோ மனக் கோட்டைகள் கட்டித்தான் பார்த்தான். வித விதமான கற்பனைகளெல்லாம் அவனுடைய உள்ளத்தில் எழத்தான் செய்தன. இருந்தாலும் அவன் வீட்டை விட்டு வெளிக் கிளம்புவதே யில்லை. ஆனால், நன்றாக இருட்டிய பிறகு அவன் தினம் ஒரு நடை தெருக் கோடியி லிருக்கும் வாசகசாலைக்குத் தவறாமல் போய் வருவது உண்டு. ஏனெனில் தனது நகரத்துச் செய்திகளையும், மாகாணத்துச் செய்திகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவனை உந்தித் தள்ளி வந்தது. தயாநாதபாபு பத்திரிகைகளில் பிரசுரித்த விளம்பரத்திலும் அவன் கவனம் செல்லாமல் இல்லை. ஆனால், அந்த விளம்பரத்தின் மீது அவனுக்கு நம்பிக்கைதான் ஏற்படவில்லை. ஒரு வேளை அது போலீஸ்காரர்கள் தன்னைக் கைது செய்யச் செய்த சூழ்ச்சியா யிருக்குமோ என்று அவனுக்கு உள்ளூறத் திகில். 'பணத்தை யார் கட்டியிருக்கப் போகிறார்கள்?' என்ற அவநம்பிக்கை வேறு அதற்குப் பக்க பலமாக இருந்தது.

ஒரு நாள் அதே தினசரியில் பத்மாவின் கடிதம் ஒன்று பிரசுரமாகி யிருப்பதையும் அவன் கண்டான். அதில், பத்மா மிகவும் அன்பு கலந்த பிடிவாதத்துடனும், வணக்கத்துடனும் அவனை வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுமாறு வேண்டிக்கொண்டிருந்தாள். "நீங்கள் யாருக்குமே எதுவும் கொடுக்க வேண்டிய தில்லை. உங்களை யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள்" என்றுகூட அவள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். ரமாநாத்தின் மனத்தில் 'ஊருக்குத் திரும்பிப் போய்விடுவோமா?' என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் அடுத்த கணமே, இதுவும் போலீஸின் யுக்தியா யிருக்குமோ என்ற சந்தேகம் எழுந்து அந்த எண்ணத்தை அழுத்தி விட்டது. பத்மாதான் இந்தக் கடிதத்தை எழுதினாள் என்பதற்கு என்ன ருசு இருக்கிறது? அப்படியே வீட்டுக்காரர்கள் பணத்தைக் கட்டி விட்டார்கள் என்றே வைத்துக் கொள்ளுவோம். அந்த நிலைமையிலும் தான் வீட்டுக்குப் போவது நன்றா யிருக்குமா? ஊர் பூராவும் அவனுடைய வண்டவாளங்கள் எல்லாம் வெளிப்பட்டிருக்கும். போலீஸில் வேறு எழுதி வைத்

இருப்பார்கள். இந்த எண்ணம் எழுந்ததும், அவன் கையில் குறைந்தது ஐயாயிரம் ரூபாய் சேராதவரையில் வீட்டைப் பற்றியே சிந்தனை செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

தேவீதீனுடைய வீட்டில் கீழே இரண்டு அறைகள் இருந்தன. எதிரில் ஒரு வராந்தா இருந்தது. வராந்தாவில்தான் கடை. ஒரு அறை சமையலறையாகவும், இன்னொன்று சாமான்கள் வைக்கும் அறையாகவும் உபயோகிக்கப்பட்டு வந்தது. மாடியில் ஒரு அறையும் கொஞ்சம் திறந்த வெளியும் இருந்தன. ரமாநாத் அந்த மாடி யறையில்தான் இருந்தான். தேவீதீனின் உபயோகத்துக் கென்று பிரத்தியேகமான அறை ஒன்றும் கிடையாது. இரவு கடை மூடின பிறகு, அவனும் கிழவியும் அதே வராந்தாவைத்தான் தங்கள் படுக்கையறையாக உபயோகித்துக் கொண்டு வந்தனர்.

தேவீதீனுக்கு 'ஹுக்கா' பிடிப்பதையும், வம்பளப்பதையும் தவிர வேறு வேலையே கிடையாது. மண்டிக்குப் போய்ச் சாமான்கள் வாங்கி வருவது, ஸ்டேஷனுக்குப் போய்ச் சாமான்களை எடுத்து வருவது அல்லது அனுப்புவது போன்ற சகல அலுவல்களையும் கிழவி ஒருத்தியே கவனித்துக் கொண்டு விடுவாள். ரமாநாத் தன்னுடைய வீட்டில் வந்து இப்படி வேரூன்றி விட்டது அந்தக் கிழவிக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. அவன் அவனைத் தன் கணக்குப் பிள்ளையாக ஆக்கிக் கொண்டு கணக்கு வழக்குப் பார்ப்பதற்கு உபயோகித்துக் கொண்டு வந்தான். இருந்தாலும் இந்த வேலைக்காக ஓர் ஆளை வைத்துக் கொண்டு வீண் செலவு செய்வது அநாவசியம் என்பது அவளுடைய அபிப்பிராயம். கிழவியின் அந்தரங்க அபிப்பிராயத்தையும், அவன் நடந்து கொண்ட விதத்தையும் ரமாநாத் அறியாமல் இல்லை. இருந்தாலும் என்ன செய்வான் அவன்? 'இந்த மானம் கெட்ட பிழைப்புப் பிழைத்துத்தான் ஆக வேண்டும்' என்ற நிலையில் விதி அவனைக் கொண்டுவந்து விட்டிருக்கும்



தெரிந்தால்தான் என்ன குடி முழுகிவிடப் போகிறது? ஒரு கம்பளி தானும் வாங்கிக் கொண்டால்தான் என்ன?" என்று ராமநாத்துக்குத் தோன்றிற்று. "ஏழைப் பிராமணன் தானம் வாங்குவதற்கு அருகதையற்றவன் என்றால் வேறு யார்தான் அருகதையுள்ளவர்கள்?" என்று எண்ணி அவன் ஓர் அடி எடுத்து முன் வைத்தான். அடுத்த கணம் தூங்கிக் கொண்டிருந்த அவனுடைய சுயமரியாதை விழித்துக் கொண்டு, "அப்பா, நான் தூங்கவில்லை. விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஜாக்கிரதை!" என்று எச்சரித்தது. ஆகவே, ராமநாத் சிறிது நேரம் நின்று அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு மேலே நகரலானான்.

சந்தனப் பொட்டும் நெற்றியுமாக ராமநாத் போவதைக் கண்ட சேட்ஜியின் குமாஸ்தா அவனைப் பிராமணன் என்று எண்ணினான். இவ்வளவு பெரிய கும்பலில் பிராமணர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. என்ன இருந்தாலும் பிராமணர்களுக்குக் கொடுக்கும் தானத்தினால் கிடைக்கும் புண்ணியமே அலாதிதான் என்ற எண்ணம் இன்னும் நம் மக்களின் மனத்திலிருந்து மறையவில்லையல்லவா! ஆகவே ராமநாத்தைக் கண்டதும் குமாஸ்தாவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆனால் ராமநாத் அவ்விடத்தை விட்டு நகருவதைக் கண்டதும் குமாஸ்தா அவனைக் கூப்பிட்டு நிறுத்தி, "ஸ்வாமி, என்ன புறப்பட்டு விட்டீர்கள்? கம்பளி வாங்கிக் கொண்டு போங்கள்" என்றான். ராமநாத் சங்கோசத்தினால் தலை குனிந்த வண்ணம், "எனக்கு வேண்டாம்" என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

"கம்பளி மிகவும் மட்டமாயிருக்கிறது என்பதற்காக இந்தப் பிராமணர் போகிறாரோ?" என்ற சந்தேகம் குமாஸ்தாவுக்கு உதித்தது. அவன் தன் வாழ்நாளில் இம்மாதிரிச் சுய மரியாதையோடு கூடிய பிராமணனைப் பார்த்ததே இல்லை. "வேறு யாராவது பிராமணனாக இருந்தால் குழைந்து குழைந்து பேசி, 'நல்ல கம்பளியாகக் கொடுங்கள்' என்று கேட்டு வாங்கிப் போயிருப்பான். இந்தப் பிராமணரோ ஒன்றும் சொல்லாமல், வெகு அலட்சியமாகப் போகிறாரே! இவர் ஒரு பெரிய மகானாகத்தான் இருக்க வேண்டும்" என்ற எண்ணம் குமாஸ்தாவுக்கு உதித்தது. ஆகவே அவன் ஓடிப்போய் ராமநாத்தின் கையைப் பிடித்துக் கொண்டு, "வாருங்கள் ஸ்வாமி, இப்படிப் பராமுகமாகப் போகக் கூடாது. உங்களுக்கெல்லாம் நல்ல கம்பளி வைத்திருக்கிறோம். இவையெல்லாம் ஏழைகளுக்காக வைத்திருக்கிறோம்!" என்று சொல்லி வருந்தி அழைத்தான். 'வேண்டும்' என்று கேட்காமல் இருக்கும்பொழுதே தனக்குத் தேவையான பொருள் தன்னை நாடி வரும்பொழுது, அதுவும் பலவந்தமாகத் தன் கழுத்தில் கட்டப்படும்பொழுது, ராமநாத்தினால் தன் மனதை அடக்கி ஆள முடியவில்லை. கடைசியில் அவன் இரண்டொரு தடவை "வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்து விட்டுக் குமாஸ்தாவுடன் உள்ளே நுழைந்தான்.

குமாஸ்தா ராமநாத்தை ஒரு பெரிய அறைக்கு அழைத்துப் போய் ஆசனம் போட்டு உட்கார வைத்து, மிகவும் நேர்த்தியான, கெட்டியான கம்பளி ஒன்றைக் கொண்டு வந்து அவன் முன்னால் வைத்தான். ராமநாத்தின் 'போதும் என்ற மனப்பான்மை' குமாஸ்தாவை வெகுவாகக் கவர்ந்து விட்டது. ஆகவே அவன் ராமநாத்துக்கு ஐந்து ரூபாய் தட்சிணை வேறு வைத்துக் கொடுத்தான். ஆனால் தட்சிணையை எடுத்துக் கொள்ள ராமநாத்துக்கு மனம் ஒப்பவில்லை. 'எத்தனையோ எண்ணத் தொலையாத பிறவிகள் எடுத்துச் சேகரித்து வைத்திருந்த குல மரியாதை, அந்தக் கம்பளி தானம் ஒன்று வாங்கினதாலேயே பங்கமுற்று விட்டது. அது போதாது என்று தட்சிணை வேறு வாங்கிக் கொண்டு கொஞ்ச நஞ்சம் மிகுந்திருக்கும் மரியாதையையும் மண்ணில் கலக்க விடுவதா?' என்று அவன் மனம் அவனைக் குத்திற்று. ஆகவே அவன் "தட்சிணையை எடுத்துக் கொள்ள முடியாது" என்று கண்டிப்பாய் மறுத்து விட்டான்.

குமாஸ்தா வியப்புடன், "நீங்கள் இதை ஏற்றுக் கொள்ளா விட்டால், எங்கள் சேட்ஜி ரொம்ப வருத்தப்படுவார். நீங்கள் எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்" என்று பிடிவாதம் பிடித்தான்.

ராமநாத் மிகவும் விரக்தி தோய்ந்த குரலில், "உங்களுடைய பிடிவாதத்தின் பேரில்தான் நான் இந்தக் கம்பளியை எடுத்துக் கொண்டேன். ஆனால் தட்சிணை வாங்கிக் கொள்ள முடியாது. எனக்குப் பணமே தேவையில்லை. நான் தங்கியிருக்கும் புண்யாத்மாவின் வீட்டில்

வதற்கும் அவன் சங்கோசப் பட்டான். சேட்ஜீ தன் குளிரினால் ரமாகாந் படும் அவஸ்தையைக் கவனிக்கவில்லையோ, அல்லது அவனுக்காக அவ்வளவு பெரிய செலவை ஏற்றுக் கொள்ளத் தான் விரும்பவில்லையோ, நமக்குத் தெரியாது.

பொழுது சாயச் சாய, இரவில் குளிரினால் தான் படப்போகும் அவஸ்தையை எண்ணி ரமாகாந்துக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டு விடும். படுத்த படுக்கையில் அவஸ்தைப்படும் ஒரு நோயாளி 'பொழுது விடிந்து விட்டதா? எப்பொழுது பொழுது விடியும்?' என்றெல்லாம் கேட்டு நச்சரிப்பானே, அது போல ரமாகாந் இரவு வேளைகளில் அடிக்கடி ஜன்னல் கதவுகளைத் திறந்து இன்னும் பொழுது விடிய எத்தனை நேரம் இருக்கிறது என்று பார்த்த வண்ணம் இருப்பான்.

ஒருநாள் மாலையில் அவன் வாசகசாலைப் பக்கம் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒரு பெரிய மாளிகைக் கெதிரில் ஆயிரக் கணக்கான ஏழைகள் கூடியிருப்பதைக் கண்டான். 'என்ன விசேஷமாயிருக்கும்? இத்தனை கூட்டம் கூடியிருக்கிறதே!' என்று எண்ணி அவன் அக் கூட்டத்துக்குள் புகுந்தான். ஒரு சேட்ஜீ கம்பளி தானம் செய்கிறார் என்ற விஷயம் தெரிய வந்தது. கம்பளி மிகவும் மட்ட ரகமானதாகவும் மெல்லியதாகவும்தான் இருந்தது. இருந்தாலும் அதை வாங்குவதற்காகக் கூட்டம் நெரித்துக் கொண்டிருந்தது. "இங்கே நம்மை யாருக்குத் தெரியும்? அப்படித்

கவிகளுக்கு ஞாபகச் சின்னம்

பாரதியார் திருவாக்கு

[நம்முடைய கவிகளைப் போற்றி அவர்களுக்கு ஞாபகச் சின்னங்கள் அமைக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை மகாகவி பாரதியார் கீழ்க்கண்ட கட்டுரையிலே ரொம்பவும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். முப்பது வருஷங்களுக்கு முன்னால் பாரதியார் செய்த உபதேசத்தைக் கடைப்பிடித்து இன்று தமிழ் மக்கள் முதல் முதலாக அவருக்கே எட்டயபுரத்தில் ஞாபகச் சின்னம் கட்டியிருக்கிறார்கள்!]

தமிழ் நாட்டு வீரருக்கும் கவிகளுக்கும் லோகோபகாரிகளுக்கும் இதுவரை எவ்வித மான திருவிழாவையும் காணவில்லை. பூர்விக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்துச் சக்திமான்களை வியப்பதும், அவர்களுடைய பெருமையை உலகமறிய முழக்குவதும், கூடியவரை பின்பற்ற முயல்வதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கணிப்பார்கள்?

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது; எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும்; பழக்கத்தில் இல்லாத திறமை இழந்து விடப்படும். அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும் வீரரையும் கொண்டாடாத தேசத்திலே அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப் போகும். தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால் நாம் இவ்விஷயத்தில் தமோ குணஞ் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்யவேண்டும்.

ஐந்து மகா காவியங்களிலே சிறந்ததான 'சிலப்பதிகாரம்' செய்த இளங்கோ முனிவர் வஞ்சி நகரத்தில் பிறந்தவர். இந்த வஞ்சி நகரம் இப்போது திருச்சிறாப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று பண்டித மு. ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார்.

மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். திருவஞ்சைக்களத்திலும் கரூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். ஜன்ம தினங்கள் நிச்சயப்பட வழியில்லை. ஆதலால், ஸரஸ்வதி பூஜைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும்.

தெரிந்தால்தான் என்ன குடி முழுகிவிடப் போகிறது? ஒரு கம்பளி நாமும் வாங்கிக் கொண்டால்தான் என்ன?" என்று ரமாநாத்துக்குத் தோன்றிற்று. "ஏழைப் பிராமணன் தானம் வாங்குவதற்கு அருகதை யற்றவன் என்றால் வேறு யார்தான் அருகதை யுள்ளவர்கள்?" என்று எண்ணி அவன் ஓர் அடி எடுத்து முன் வைத்தான். அடுத்த கணம் தூங்கிக் கொண்டிருந்த அவனுடைய சுயமரியாதை விழித்துக் கொண்டு, "அப்பா, நான் தூங்கவில்லை. விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஜாக்கிரதை!" என்று எச்சரித்தது. ஆகவே, ரமாநாத் சிறிது நேரம் நின்று அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு மேலே நகரலானான்.

சந்தனப் பொட்டும் நெற்றியுமாக ரமாநாத் போவதைக் கண்ட சேட்ஜியின் குமாஸ்தா அவனைப் பிராமணன் என்று எண்ணினான். இவ்வளவு பெரிய கும்பலில் பிராமணர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. என்ன இருந்தாலும் பிராமணர்களுக்குக் கொடுக்கும் தானத்தினால் கிடைக்கும் புண்ணியமே அலாதிதான் என்ற எண்ணம் இன்னும் நம் மக்களின் மனத்திலிருந்து மறைய வில்லையல்லவா! ஆகவே ரமாநாத்தைக் கண்டதும் குமாஸ்தாவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆனால் ரமாநாத் அவ்விடத்தை விட்டு நகருவதைக் கண்டதும் குமாஸ்தா அவனைக் கூப்பிட்டு நிறுத்தி, "ஸ்வாமி, என்ன புறப்பட்டு விட்டீர்கள்? கம்பளி வாங்கிக் கொண்டு போங்கள்" என்றான். ரமாநாத் சங்கோசத்தினால் தலை குனிந்த வண்ணம், "எனக்கு வேண்டாம்" என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

"கம்பளி மிகவும் மட்டமாயிருக்கிறது என்பதற்காக இந்தப் பிராமணர் போகிறாரோ?" என்ற சந்தேகம் குமாஸ்தாவுக்கு உதித்தது. அவன் தன் வாழ்நாளில் இம் மாதிரிச் சுய மரியாதையோடு கூடிய பிராமணனைப் பார்த்ததே இல்லை. "வேறு யாராவது பிராமணனாக இருந்தால் குழைந்து குழைந்து பேசி, 'நல்ல கம்பளியாகக் கொடுங்கள்' என்று கேட்டு வாங்கிப் போயிருப்பான். இந்தப் பிராமணரோ ஒன்றும் சொல்லாமல், வெகு அலட்சியமாகப் போகிறாரே! இவர் ஒரு பெரிய மகானாகத்தான் இருக்க வேண்டும்" என்ற எண்ணம் குமாஸ்தாவுக்கு உதித்தது. ஆகவே அவன் ஓடிப்போய் ரமாநாத்தின் கையைப் பிடித்துக் கொண்டு, "வாருங்கள் ஸ்வாமி, இப்படிப் பராமுகமாகப் போகக் கூடாது. உங்களுக்கெல்லாம் நல்ல கம்பளி வைத்திருக்கிறோம். இவையெல்லாம் ஏழைகளுக்காக வைத்திருக்கிறோம்!" என்று சொல்லி வருந்தி அழைத்தான். 'வேண்டும்' என்று கேட்காமல் இருக்கும்பொழுதே தனக்குத் தேவையான பொருள் தன்னை நாடி வரும்பொழுது, அதுவும் பலவந்தமாகத் தன் கழுத்தில் கட்டப்படும்பொழுது, ரமாநாத்தினால் தன் மனதை அடக்கி ஆள முடியவில்லை. கடைசியில் அவன் இரண்டொரு தடவை "வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்து விட்டுக் குமாஸ்தாவுடன் உள்ளே நுழைந்தான்.

குமாஸ்தா ரமாநாத்தை ஒரு பெரிய அறைக்கு அழைத்துப் போய் ஆசனம் போட்டு உட்கார வைத்து, மிகவும் நேர்த்தியான, கெட்டியான கம்பளி ஒன்றைக் கொண்டு வந்து அவன் முன்னால் வைத்தான். ரமாநாத்தின் 'போதும் என்ற மனப்பான்மை' குமாஸ்தாவை வெகுவாகக் கவர்ந்து விட்டது. ஆகவே அவன் ரமாநாத்துக்கு ஐந்து ரூபாய் தட்சிணை வேறு வைத்துக் கொடுத்தான். ஆனால் தட்சிணையை எடுத்துக் கொள்ள ரமாநாத்துக்கு மனம் ஒப்பவில்லை. 'எத்தனையோ எண்ணத் தொலையாத பிறவிகள் எடுத்துச் சேகரித்து வைத்திருந்த குல மரியாதை, அந்தக் கம்பளி தானம் ஒன்று வாங்கினதனாலே பங்கமுற்று விட்டது. அது போதாது என்று தட்சிணை வேறு வாங்கிக் கொண்டு கொஞ்ச நஞ்சம் மிகுந்திருக்கும் மரியாதையையும் மண்ணில் கலக்க விடுவதா?' என்று அவன் மனம் அவனைக் குத்திற்று. ஆகவே அவன் "தட்சிணையை எடுத்துக் கொள்ள முடியாது" என்று கண்டிப்பாய் மறுத்து விட்டான்.

குமாஸ்தா வியப்புடன், "நீங்கள் இதை ஏற்றுக் கொள்ளா விட்டால், எங்கள் சேட்ஜி ரொம்ப வருத்தப்படுவார். நீங்கள் எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்" என்று பிடிவாதம் பிடித்தான்.

ரமாநாத் மிகவும் விரக்தி தோய்ந்த குரலில், "உங்களுடைய பிடிவாதத்தின் பேரில்தான் நான் இந்தக் கம்பளியை எடுத்துக் கொண்டேன். ஆனால் தட்சிணை வாங்கிக் கொள்ள முடியாது. எனக்குப் பணமே தேவையில்லை. நான் தங்கியிருக்கும் புண்யாத்மாவின் வீட்டில்

எனக்குப் போஜனம் கிடைத்து விடுகிறது. நான் இதை வாங்கிக் கொண்டு என்ன செய்யப் போகிறேன். வேண்டாம்" என்று சொல்லி விட்டான்.

"ஸேட்ஜீ, சம்மதிக்க மாட்டாரே!"

"என் சார்பில் நீங்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்டு விடுங்கள்."


"ஆகா! உங்களைப் போன்ற தியாகிகளின் மகிமையை என்னவென்று சொல்லுவது? இம்மாதிரிப் பிராமணர்கள் இருப்பதனால் தானே தருமமே நிலைத்து நிற்கிறது! சற்று நேரம் உட்காருங்கள். இதோ ஸேட்ஜீ வந்து விடுவார். பிராமணர்களிடம் அவருக்குப் பரம பக்தி. அவர் முக்காலமும் சந்தியாவந்தனாதிகள் செய்வது உண்டு. விடிய நாலு நாழிகைக்குள் எழுந்து கங்காஸ்நானத்துக்குப் போய் விட்டாரானால், ஸந்தியா வந்தனாதிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புவதற்குள் மணி ஒன்பது அடித்து விடும். அப்புறம் வீட்டில் வந்து பாகவத பாராயணம் செய்ய உட்கார்ந்து விடுவார். மத்தியான போஜனத்தை முடித்துக் கொண்டுதான் அவர் பெட்டியடிக்கே வருவார். பிறகு மணி மூன்று ஆனதும் எழுந்து போய் விடுவார். சந்தியாவந்தனாதிகளை முடித்துக் கொண்டு மறுபடியும் எட்டு மணிக்கு ஒரு தடவை வந்து எட்டிப் பார்ப்பார். ஒன்பது மணிக்கெல்லாம் பகவந் நாம சங்கீர்த்தனம் செய்வதற்காகக் கோவிலுக்குப் புறப்பட்டுப் போய் விடுவார். அர்த்த ஜாம தீபாராதனை முடிந்த பின்தான் வீட்டுக்கு வந்து இரவு போஜனம் செய்வார். நீங்கள் சற்று நேரம் இருங்கள். இதோ வந்து விடுவார். ஆமாம், தங்கள் இருப்பிடம் எதுவோ?" என்று குமாஸ்தா வெகு வினயமாகக் கேட்டான்.

ரமாகாந் தன்னுடைய இருப்பிடம் பிரயாகை என்று சொல்லாமல் காசி என்று சொல்லி வைத்தான். இதைக் கேட்டதும் குமாஸ்தா அவனைத் தங்கிப் போகும்படி இன்னும் அதிகமாக வற்புறுத்த ஆரம்பித்து விட்டான். "ஸேட் வந்ததும் ஏதாவது தர்மப் பிரசங்கத்தை ஆரம்பித்து வைத்து விட்டாரானால் நம் சாயம் வெளுத்து விடுமே!" என்று ரமாகாந்துக்கு உள்ளூற ஒரே கவலையாகி விட்டது. உடும்பு வேண்டாம், கையை விட்டால் போதும் என்ற எண்ணத்துடன் இன்னுமொரு நாள் கட்டாயம் வருவதாக வாக்களித்துவிட்டு, மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டு அங்கேயிருந்து அவன் நழுவினான்.

ஒன்பது மணி சுமாருக்கு அவன் வாசக சாலையிலிருந்து வீடு திரும்பினான். வீட்டுக்குப் போனதும் 'இந்தக் கம்பளி ஏது?' என்று தேவீதீன் கேட்டு விட்டால் என்ன

சுதந்திரம் இல்லையா?

●



ஒரு நாள் பாரதியார் தெருவில் நடக்கும் பொழுது கை விரல்களை மடக்கிக் கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி விரைவாக நடந்தாராம். அதைப் பார்த்த அவரது தோழர் ஒருவர், "என்னப்பா! கையை இப்படி வைத்திருக்கிறாய்?" என்றாராம். ஒரு சின்ன விஷயத்துக்குக்கூடக் கட்டுப்பாடும் அடக்கு முறையுமா இருக்கவேண்டும் என்று பாரதியார் கோபங் கொண்டார். ஆனால், அன்று பதில் ஒன்றும் சொல்லாமல் இருந்து விட்டார்.

மறுநாள் அதே நண்பரின் எதிரில் பாரதியார் கைவிரலை விறைப்பாக நீட்டிக் கொண்டு நடந்தார். நண்பர் அவரைப் பார்த்து, "என்னப்பா! இப்போது கையை நீட்டிக்கொண்டு நடக்கிறாய்?" என்று கேட்டார். உடனே பாரதியார் சட்டென்று, "தம்பி! உன் ஆசிர்வாதத்தினால் எனக்கு எவ்வித வியாதியும் கிடையாது. ஒரு மனிதன் தன் கையை நீட்டவோ மடக்கவோ கூடச் சுதந்திரமில்லையா? உன்னைப் போன்ற மடையருடன் சிநேகம் கொள்வதைக் காட்டிலும், மனிதனுக்கு வேறு நரகம் வேண்டாம்!" என்று கடுகடுப் பதில் உரைத்தாராம்.

நண்பருக்கு வெட்கித் தலை குனிவதைவிட வேறு என்ன வழி இருந்திருக்கும்?

பதில் சொல்லுவது என்ற கவலை அவனைச் சூழ்ந்து கொண்டது. ஆனால் அடுத்த கணமே, "ஆமாம், சொல்லுவதற்குச் சாக்குப் போக்கா இல்லை? தெரிந்த கடை ஒன்றிலிருந்து கடனாக வாங்கி வந்திருக்கிறேன் என்று சொல்லி விட்டால் போகிறது!" என்று அவன் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.

தேவிதின் கம்பளியைப் பார்த்ததுமே "ஸேட் கரோடிமல் வீட்டுக்குப் போயிருந்தாயா, என்ன?" என்று கேட்டான்.

"ஸேட் கரோடிமல்லா? அது யார் அது?" என்று ஒன்றும் தெரியாததைப் போல ரமாநாத் கேட்டான்.

"அவன்தான் அப்பா, அரண்மனையைப் போலப் பெரிய மாளிகை ஒன்று கட்டிக் கொண்டு வசிக்கிறானே!" என்றான் தேவிதின்.

ரமாநாத்தினால் அதற்குமேல் ஒன்றும் வாய்திறந்து பதில் அளிக்க முடியவில்லை. ஆகவே அவன் "ஆமாம், அந்தக் குமாஸ்தா விடவே மாட்டேன் என்று ஒரே பிடிவாதமாக என் கழுத்தில் இதைக் கட்டி விட்டான். நான் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை. ஸேட்ஜி தரும ராஜன்! என்றுயிருக்க வேண்டும்" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட தேவிதின் ஒரு ஏளனப் புன்னகையுடன், "தரும ராஜன் என்று சொன்னால் மட்டும் போதாது, அதற்கு முன்னால் 'எம' என்ற சொல்லையும் சேர்த்துக் கொண்டு எமதர்ம ராஜன் என்று சொல்ல வேண்டும். இந்தத் தருமராஜன் இருப்பதனால்தான் உலகமே நிலைத்து நிற்கிறது. இல்லாவிட்டால் குடை சாய்ந்தல்லவா போயிருக்கும்!" என்று குத்தலாகச் சொன்னான்.

"அவனுடைய குணாகுணங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? ஏதோ கரும சிரத்தை தவறாமல் தரும சிந்தனையுள்ளவனாக இருக்கிறானே, நல்லவனாக இருப்பான் என்று நான் எண்ணிவிட்டேன்!"

"நல்லவனா! அவனைப்போன்ற பாவி—மகாபாவி இந்த உலகத்தில் வேறு யாரும் கிடையாது. அவனுடைய நெஞ்சில் ஈவு இரக்கம் என்பதே கிடையாது. அவனுக்கு ஒரு சணல் ஆலையிருக்கிறது. அதில் வேலை செய்யும் கூலிகளை அவன் கண்ணில் விரலை விட்டு ஆட்டி வைக்கிறான். அவன் செய்யும் அட்டகாசங்களையும் அட்டூழியங்களையும் சொல்லி முடியாது. அவன் மனிதர்களை மனிதர்களாகவா மதிக்கிறான்? சுத்தக் காலாடிப் பயல்! கொழுப்புக் கலந்த நெய்யை விற்று லக்ஷக்கணக்கில் அல்லவா அவன் பணம் பண்ணிவிட்டான்! யாராவது ஒரு வேலைக்காரன் ஒரு நிமிஷம் தாமதித்து வந்தால் போதும்; கூலியின் வாயில் மண்ணைப் போட்டுவிடுகிறான். இவ்வளவு அநியாயங்களையும் மறைப்பதற்கு வருஷத்துக் கொருதரம் நாலாயிரம் ஐயாயிரத்துக்குத் தானம் செய்கிறானாம். தானம்! அந்தத் தானம் எதற்காகச் செய்கிறான்? சம்பாதித்த பாவக் கரை செரிக்கவேண்டுமோ, இல்லையோ? அதற்காகக் கர்மானுஷ்டானங்கள் தவறாத எந்தப் பிராமணனும் அவன் வீட்டு வாசலில் கூடக் காலடி எடுத்து வைப்பதில்லை. உன்னைத் தவிர அங்கே வேறு யாராவது பிராமணன் வந்திருந்தானா? சொல்லு!"

ரமாநாத் தலையை அசைத்தானே தவிர வாயைத் திறக்கவில்லை.

"எவனும் அவன் வீட்டு வாசலை மிதிப்பதில்லை. பேராசை பிடித்த சில துராத்மாக்கள் வேண்டுமானால் பிறருடைய கண்களில் படாமல் போய் வருகின்றனவோ, என்னவோ! நான் எத்தனையோ பரம பாகவதர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களைப் பார்த்திருக்கிறேன். எல்லாருக்குமே நெஞ்சு கல்லாய்த்தானிருக்கிறது. இந்தக் கல்லுச் சாமியைப் பூஜை செய்து செய்து அவர்களுடைய நெஞ்சம் கல்லாய்ப் போய் விட்டதோ, என்னவோ! இவன் மூன்று அன்னதான சத்திரங்கள் வேறு கட்டி வைத்திருக்கிறான். அப்பப்பா! அங்கே நடக்கும் அநியாயத்தையும் அக்கிரமத்தையும் என்னவென்றுதான் சொல்லுவது? என்னைக் கேட்டால் மனிதன் ஒரு தான தருமமும் செய்ய வேண்டாம். நெஞ்சில் ஈவு இரக்க முள்ளவனாக இருந்தாலே போதுமானது. அதுதான் தருமங்களுக்குள் பெரிய தருமம் என்று சொல்லுவேன்!" என்றான் தேவிதின்.

ரமாநாத் பகலில் சாப்பிட்ட பின் மிகுந்திருந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு, கம்பளியைப் போர்த்திக்கொண்டு படுத்தான். அவனுடைய மனத்தை ஏதோ ஒரு சுமை அழுத்த ஆரம்பித்து விட்டது. லஞ்சத்தில் அவன் எத்தனையோ ரூபாய்கள்

பதித்திருந்தான். ஆனால் இதுமாதிரி அவனுக்கு ஒரு கணம்கூட மன வருத்தம் ஏற்பட்டதே யில்லை. புத்திசாலித்தனம், சாமர்த்தியம், ஆண்மை இவைகளின் உதவியைக் கொண்டுதான் லஞ்சம் வாங்க முடியும். ஆனால் தானம் வாங்கும் இந்தத் தீச்செயலுக்கோ இவையொன்றும் தேவையில்லை. ஆண்மையற்ற சோம்பேறித்தனம், மோசடி, பொய் பித்தலாட்டம் முதலியவைதான் இதற்கு ஆணிவேர் போன்றவை. ‘உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும்கூட தானம் வாங்கிப் பிழைக்க வேண்டிய அளவுக்கு நான் அவ்வளவு கேடு கெட்டவனாகி விட்டேனா?’ என்று அவன் எண்ணமிடலானான்.

அவன் இரண்டு மாத காலமாகத் தேவியினுடைய வீட்டில்தான் இருந்து வருகிறான். தேவியின் அவனைப் பிச்சைக்காரன் என்று கனவிலும் கருதியதில்லை. தன் வீட்டுக்கு வந்திருக்கும் ஒரு விருந்தாளியாகவே எண்ணி அவனைப் பராமரித்து வந்தாள். தேவியினுடைய உள்ளத்தில் ‘பிச்சை, தானம்’ என்ற உணர்ச்சியே உதிக்கவில்லை.

சமாசாத்துக்கு மனம் குமுறியது. ‘இப்பொழுதே போய்ப் போலீஸில் சகல விருத்தாந்தங்களையும் சொல்லி விட்டால் என்ன? இரண்டொரு வருஷச் சிறைத் தண்டனைதானே அனுபவிக்க வேண்டி நேரிடும்? இப்படி மனதைப் போட்டு உழற்றிக் கொண்டு தன்னைத்தானே சித்ரவதை செய்து கொள்ளுவதை விட அது எவ்வளவோ மேலானது. இல்லாவிட்டால், ஏதாவது குளம் குட்டைகளில் விழுந்து செத்துத் தொலைக்கால்தான் என்ன? பிறருக்குச் சுமையாக, தமக்கு தாமே சுமையாக வாழ்வதனால் யாருக்கு என்ன பிரயோசனம்? அல்லது தமக்குத்தான் ஏதாவது புண்ணியமும் புருஷார்த்தமும் கிட்டப் போகிறதா? திரிசங்கு போல அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல்’ என்றெல்லாம் அவன் உணர்ச்சி வேகத்தில் ஏதேதோ சிந்தனைகள் செய்தான்.

கடைசியில் சமாசாத் அச்சத்தை அறவே ஒழித்துவிட்டு, ‘என்ன ஆனாலும் ஆகட்டும்’ என்ற துணிச்சலுடன் மறு காலை வேலை தேடப் புறப்பட்டு விடுவது என்று மனத்தான் இஷ்டமாக முடிவு செய்து கொண்டான். (தொடரும்)



நியாயந்தான்!

பத்திரிகை நிருபர் (ஒரு பிரபல பிரமுகரைப் பேட்டி காணச் சென்று):—ஸார்! சர்வதேச உணவு மகாநாடு நம் நாட்டு உணவு நெருக்கடியில் தலையிடுமா? இது விஷயமாக உங்கள் அபிப்பிராயம் என்ன?

பிரமுகர்:—மன்னிக்க வேண்டும்! நான் ஒரு பொதுக் கூட்டத்தில் இன்று மாலை பேசப் போகிறேன். ஆகையால் எதைப் பற்றியும் யோசனை செய்வதற்கு இது சமயமல்ல!

★

நல்ல யோசனை!

நண்பர்:—என்ன ஸார், உங்களுக்கு வின்ஸ்டன் சர்ச்சிலிடம் விசேஷ அபிமானம் உண்டு போலிருக்கிறதே!

நடிகர்:—ஏன் அப்படி சொல்கிறீர்கள்? ஒன்றும் இல்லையே!

நண்பர்:—அப்படியானால் அவர் படத்தை இவ்வளவு பெரிதாகப் ‘பிரேம்’ போட்டு உங்கள் அறையில் மாட்டி வைத்திருக்கிறீர்களே, அது ஏன்?

நடிகர்:—அட, அது சர்ச்சிலின் படமா? அதுகூட எனக்குத் தெரியாதே! அவருடைய முகத்தில் விழுந்திருக்கும் சுருக்கங்கள், நான் மேக்-அப் செய்து கொள்ள உபயோகமாயிருக்கிறது. அதற்காகத்தான் அந்தப் படத்தை இங்கே மாட்டியிருக்கிறேன்!

★

தங்கமான மனசு!

மாமியார்:—என் மாட்டுப் பெண்ணின் மனசு தங்கம்!

மற்றவள்:—அது எப்படி, மாமி?

மாமியார்:—ஒரு கூடைப் பாத்திரங்களை முற்றத்தில் போட்டுக் கொண்டு நான் தேய்க்க முடியாமல் தவிப்பேன். அதைப் பார்க்கச் சகிக்காமல் அவள் மாடிக்குப் போய்விடுவாள்!

★

அவ்வளவு மோசமா?

வீட்டுக்காரன்:—நேற்றுச் செய்த அடை இருக்கிறது. போடுகிறேன், இன்று பார்!

பிச்சைக்காரன்:—ஏதோ கொடுங்க, அம்மா! போகிற உயிரு எப்படிப் போனால் என்ன?

★


வித்தியாசம் இல்லை!

கணவன்:—டாக்டர் சொல்லியிருக்காரேடி, மூணு வேளை வெந்நீர் மட்டும் சாப்பிடுன்னு! நீ பாலைக் கொண்டு வருகிறாயே!

மனைவி:—சும்மா சாப்பிடுங்கோ! நம்ம பால்காரனுடைய பாலுக்கும் நீங்க காய்ச்சி வைத்திருக்கும் வெந்நீருக்கும் என்ன வித்தியாசம் இருந்து விடப் போகிறது?



மாடர்ன் தியேட்டர்ஸின்
1000 தலைவாங்கி
அபூர்வ
சிந்தாமணி
டைரக்ஷன்:
T.R. சுந்தரம்
B.A. B.Sc. (LEEDS)
V.N. ஜானகி, P.S. கோவிந்தன்
C.S. கணேச பாகவதர், P. பாலசுப்ரமண்யம்
M.R. சாமிநாதன், காளி N. ரத்னம்
வரலட்சுமி, மாதுரிதேவி
C.T. ராஜகாந்தம்.



No. 2.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI அக்டோபர் 12, 1947 4 அணா

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட். இலங்கைக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ். துரை, அருள் & கோ., லிட்., 93, கேய்ஸர் தெரு, கொழும்பு